Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 12/00

දිනමුරසු වාරමලර් ஜூலை 18-24,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 318

## ஜனாதிபதித் தேர்தல் இரகசிய பேரம்! அதிர்ச்சிகர தகவல்

## இலக்கு தேடும் கெரில்லாக்கள்







## -ஆனையிறவு- அதிரடியான ஊடறுப்பு!

## மீனா போன உலக உலா!

# முரசம்

## முரளிக்குத் தரவில்லை

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

இலங்கை கிரிக்கெட் அணியின்
புதிய தலைவராக
சனத் ஜயசூரியா
நியமிக்கப்பட்டிருக்கிறார்!

சிறந்த வீரர்!
தேர்ந்த அனுபவசாலி!
ஆகவே, தெரிவு தப்பில்லை!

அணியின் துணைத்தலைவராக
மஹேல ஜயவர்த்தனா
தெரிவாகியுள்ளார்!

வளர்ந்து வருகின்ற
இளம் வீரர்!
இவர் எதிர்காலத்தில்
'மிகச் சிறந்து விளங்கவுள்ளார்'
என்று முரசு
முன்னரே ஆருடம் கூறியிருந்தது!

ஆனால், இவரது நியமனம்
நேர்த்தியானதில்லை
என்பதே முரசின் கருத்து!

அணியில் இணைந்து
இரண்டாண்டுகளுக்குள்
துணைத் தலைவர் பதவி;- இது
குருவி தலையில் பனங்காய்தான்!

இலங்கை அணிக்கு
இள இரத்தம் தேவையானால்
புதிய வீரர்களை
களம் இறக்குவது தவறல்ல!

அதற்காக
துணைத் தலைவர் பதவியை
கொடுத்தாக வேண்டும்
என்று கட்டாயமில்லை!

ஆனால், இலங்கை அணிக்குள்
தற்போதைய பிரச்சனைகளால்
மஹேல ஜயவர்த்தனாவை தவிர
வேறு யாரையும் துணைத்தலைவராக
போட முடியாதளவுக்கு
நிலைமை உள்ளது!

ஆனால் ஒரே ஒருவர்
விதி விலக்கு!

யார் அவர்?
முரளிதரன்!

எல்லோராலும்
ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பார்!

இலங்கை அணிக்காக
சாதனைகள் பல
படைத்துத் தந்திருக்கிறார்!

சுருக்கமாகச் சொல்வதானால்,
தமிழராக இருந்தாலும்
சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட
பந்து வீச்சாளராக
உறுதிப்படுத்தப்பட்டுள்ளார்!

முரளிதரனுக்கு
அப்படி ஒன்றும் வயதாகவில்லை!
இள இரத்தம்தான்!

எனவே, அணியின்
துணைத்தலைவர் பதவிக்கு
தற்போதைய தருணத்தில்
மிகப் பொருத்தமானவர்
முத்தையா முரளிதரன்தான்!

எனினும், அவரை
நியமிக்க தயக்கம் காட்டப்பட்டுள்ளது!

தரமான வீரர் ஆயினும்
தமிழர் என்பதால்தான்
இந்த தயக்கமா?
என்று ரசிகர்கள் பலர்
வினாக்களால் உரசுகிறார்கள்!

கிரிக்கெட் அணியில்
தமிழர்கள் இடம்பெறுவதாலோ,
அல்லது, பொறுப்புக்கள் தரப்படுவதாலோ
இங்கு இன சமத்துவம்
ஏற்பட்டுவிட்டது என்று
ஒருபோதும் அர்த்தமாகாது!

ஆனால், கிரிக்கெட்டிலும்
ஒருவர் தனக்குரிய அந்தஸ்தை
எட்டுவதற்குத் தடையாக
இனரீதியான பார்வை
இருப்பதைச் சுட்டிக்காட்டவே
முரளிதரன் விடயத்தை
இங்கு கோடிட்டுக் காட்டினோம்!

அரச பதவிகள் பலவற்றில்
திறமையிருந்தும்
அனுபவ முதிர்ச்சியிருந்தும்
பதவி உயர்வுகள் தரப்படாத
தமிழர்கள் பட்டியல் நீளமானது!

தேவை கருதி
சில தமிழர்களுக்கு
குஞ்சம் கட்டிப் பார்ப்பார்கள்!
அவர்களுக்குப் பதவிகள் கூட
வழங்கப்பட்டதுண்டு!

ஆனாலும், அதிலும்
தமிழர் ஒருவருக்கு
வெளிநாட்டமைச்சர் பதவி
தரப்படுமே தவிர,
பாதுகாப்பமைச்சர் பதவி
தரப்படவே மாட்டாது!

அதாவது,
தேவை கருதி
பயன்படுத்தும் போதும்,
அதிகாரமுள்ள பதவிகள்
அளிக்கப்படுவது கிடையாது!

அதேபோல கிரிக்கெட்டுக்கு
முரளிதரன் தேவைப்பட்டாலும்,
முக்கிய பதவி கொடுக்க
தயக்கம் இருக்கத்தான் செய்யும்!

இவை தவிர்க்கமுடியாத
தயக்கங்கள்!
இனப்பிரச்சனை தீர்ந்து
இரு இனங்களும்
தம் தலைவிதியை
தாமே தீர்மானிக்கும்வரை
விமோசனமில்லை!

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்***

# ஆன்மீகம்

## துறவு

துறவில் மூன்று விதங்கள் உள்ளன. வீட்டில் எத்தனையோ கஷ்டங்கள் ஏற்படுகின்றன; அவைகளை முன்னிட்டு ஒருவன் காவியுடையணிந்து கொண்டு வெளியேறுகிறான். அத்தகைய துறவு நெடுநாளைக்கு நிலைத்திராது.

உத்தியோகம் ஒன்றும் அகப்படாதவன் காவியுடையணிந்து கொண்டு காசிக்குப் போய் விடுகிறான். இரண்டு, மூன்று மாதங்களில் அங்கு ஏதோ உத்தியோகம் அவனுக்கு அகப்படுகிறது. அதை ஏற்றுக்கொள்கிறான். பிறகு தன்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்றும் தான் விரைவில் வீட்டுக்கு வந்து விடுவதாகவும் உறவினர்களுக்குக் கடிதம் எழுதுகிறான்.

ஒருவனுக்கு உலக வசதிகள் எல்லாம் இருக்கின்றன. ஆயினும் அவன் நாடுவது கடவுள் ஒருவரையே. கடவுள் பொருட்டு அவன் அருள் தாகமெடுத்துக் கண்ணீர் சிந்துகிறான். அத்தகையவன் துறவியாகவும் வெளியேறுகிறான். இந்த மனிதனின் துறவுதான் உண்மையானது.

தொகுப்பு:
எஸ்.சரவணேஸ் டெயிசி, கலவானையூர்.



## துஆவில் ஓர்மை வேண்டும்

ஒரு முறை மூஸா (அலை) அவர்கள் கஃபத்துல்லாவில் தவாபு செய்து கொண்டிருக்கையில் ஒரு மனிதர் அழுது புலம்பியவாறு துஆக் கேட்பதைக் கண்ணுற்று அவர்மீது பெரிதும் இரக்கம் கொண்டவராக அல்லாஹ்வை இறைஞ்சலானார்கள்.

"இறைவா! பிரார்த்தனைகளை அங்கீகரிக்கும் சக்தியை நீ எனக்குக் கொடுத்திருப்பாயேயானால் அம்மனிதனின் துஆவை அங்கீகரித்திருப்பேன்" என்று உள்ளம் உருக மூஸா (அலை) கூறினார்கள். அதற்கு இறைவன் "ஓ... மூஸாவே! நீர் அம்மனிதனின் வெளிக் கோலத்தைத்தான் அறிவீர். உள் கோலத்தை அறியமாட்டீர். அம்மனிதன் அழுது புலம்பினாலும் அம்மனிதனின் மனம் தாம் மந்தையில் விட்டுவந்த ஆடுகளின் நிலை என்னவாயிற்றோ என்றெண்ணி ஏங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே அவரது துஆவை எப்படி அங்கீகரிப்பது?" என்று இறைவன் கூறினான்.

அன்பர்களே! அழுகை நம் கண்களிலிருந்து உருவானால் மட்டும் போதாது. நமது உள்ளத்திலிருந்தும் உருவாக வேண்டும். நமது இறைவன் நம்மை உற்று நோக்கிக் கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்து துஆக் கேட்போமானால் அல்லாஹுத்த ஆலா நம்மை அன்போடு நோக்குகிறான், என்பதில் ஐயமில்லை.

தொகுப்பு: வை.எம்.தாஹிர்கரீம், கல்முனை-06.

# கவிதைப் போட்டி இல. 315



## பரிசுக்குரிய கவிதை

### எச்சரிக்கை

அட்டைப் போராட்டங்கள்
அலட்சியப் படுகையில்தான்
ஆயுதப் போராட்டங்கள்
முனைப்புப் பெறுகின்றன!

எஸ். ரதன்- ஆரையம்பதி.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### உண(ர்)வு

பூ மனமும்
புரிந்து கொள்ளும்
இந்நிலை- நன்றன்று
இன்னும் நீடிப்பது!

க. நாகராசா- நுணாவில்.

### வாழ்விலும் அடி

அன்றும் அடித்தார்கள்,
இன்றும் அடிக்கிறார்கள்!
வயிற்றில் மட்டுமல்ல;
வாழ்விலும்தான்!

நா. ஜெயபாலன்- பிபிலை.

### ஏ(கோ)ழைகள் பே(ஓ)ரணி

கொழுத்த வெயிலில்
ஏழைகள் பேரணியில்
இளம் பிஞ்சு!
பழுத்த பழங்களெல்லாம்
தமிழ் கட்சிகளில்!

ரவீந்திரநாத் அரவிந்தன்- சாகாம வீதி, அக்கரைப்பற்று-08.

### (வெ) (வே) (வோ)ட்டு

வன்னியில் உணவு வெட்டு
செம்மணியில் நீதி வெட்டு
தடையில்லாதது துப்பாக்கி வேட்டு
நம்மிடம் கேட்பதுவோ வோட்டு!

சுமன் வினோத்- மட்டக்களப்பு.

### கேட்க யாருளர்...?

"ஏழைகளின் வயிற்றில்
அடிக்காதே!" என்று ஏங்கிய
பாலகனும் கூறுகின்றானே!
கேட்கத்தான் யாருளரோ...?

ஆ.இ. கஸில்டா- மூதூர்-07.

### இன்று இங்கே இப்படி

சோமாலியாக் காட்சியெல்லாம்
சுதந்திரமாய் மலர்கிறது!
ஏழைகள் நாங்கள் என்றே
எங்கள் கதை தொடர்கிறது!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

### நிவாரணம்

ஒரு சாண் வயிற்றிற்கு
ஒருவர் பின் ஒருவராக...
அதையும் குறைத்து
அரைகுறையாய்
தருகிறாயே...!

மலர் செல்வா- தியத்தலாவ.

# கவிதைப் போட்டி இல.318



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 24.07.1999

**முகவரி:** கவிதைப் போட்டி இல.318
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### தலை எழுத்து!

வீதி உலா வந்தால்
வேட்டுச் சாவு!
முகாமில் முடங்கினால்
பட்டினிச் சாவு!
தமிழா இதுதானா
உன் தலை எழுத்து?

ஏ.எம்.அல்-அக்தர்-ஏறாவூர்-3.

### சோ(கயி)று!

நூல் ஏந்தும் கரங்களுக்கு
கோல் ஏந்த வைத்தவனே!
உயிர் காக்க ஒரு பிடி
சோறு கொடு...! இல்லை
உயிர் போக்க ஒரு முழம்
கயிறு கொடு!

டி. ஜோர்ஜ்- ஹய்பொரஸ்ட்.

# வாசக(ர்)சாலை

செம்மணி போன்ற புதைகுழி அநீதிகளை திசைத் திருப்பப் பார்க்கும் சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றோரை திருத்தவே முடியாதா? சுட்டிக் காட்டிய முரசுக்கு நன்றி.

ஆ.செல்வரட்ணம்,
ஒலிரூட், தலவாக்கலை.



என் உயிர் முரசே!

எனது அபிமான நடிகை ஸ்ரீவித்யாவின் சோகக் கதையைப் பிரசுரித்தமைக்கு என் நன்றி.

வழக்கில் ஈடுபடப் போகும் எனது அபிமான நடிகைக்கு ஒரு ஆறுதல் கடிதம் போடுவதற்கு விலாசத்தைப் பிரசுரிப்பீர்களா? முடியாவிட்டால் எனது விலாசத்திற்காவது அனுப்பி வையுங்கள்!

டி.டொறீன், புத்தளம்.



என் உள்ளம் கவர்ந்த முரசே!

நீ தாங்கி வரும் அனைத்தும் எனக்கு பிடித்தவையாக உள்ளன. அதிலும் எனக்கு மிகவும் பிடித்தவை 'காதிலை பூ கந்தசாமி', 'இலக்கிய நயம்', 'தேன் கிண்ணம்', 'அதிரடி அய்யாத்துரை'. நீ தினம் தினம் வர வேண்டும் என வாழ்த்தும்-

எம்.சுவித்ரா, மட்டக்களப்பு.

அன்புடையீர்;

பட்டுச்சேலை பரிசுத் திட்டத்தில் எனக்குக் கிடைக்கப் பெற்ற பட்டுச் சேலையை வவுனியாவில் பெற்றுக் கொண்டேன். மிக்க நன்றி. இத்திட்டத்தில் எனக்கு கிடைக்கப்பெற்ற பரிசினைப் பார்த்த பல பெண்கள் தாங்களும் பரிசுக் கூப்பன்களை அனுப்ப முனைந்துள்ளனர். நான் எதிர்பார்த்ததற்கு மேலாகவே தங்களின் பரிசு அமைந்துள்ளது. மிகவும் நன்றி.

அமுதா ஜெயராஜா, மன்னார்.

316வது முரசில் இடம் பெற்ற 'ஒவ்வொரு நாளும் துயரம்' சிறுகதை மனதைத் தொடும்படி அமைந்திருந்தது. ஆயுதங்கள் அநீதி செய்யும் ஏழை மீனவ வாழ்விற்கு இயற்கையும் கொடுமை விதைப்பது துயரம் தான். கதையை உணர்வு பூர்வமாக எழுதிய செ.குணரத்தினம் அவர்களுக்கு கோடி நன்றிகள்.

ஆனாலும் கதையின் முடிவில் அவர் உதாரணம் காட்டிய திரை இசைப் பாடல் 'தரைமேல் பிறக்க வைத்தான். எங்களை தண்ணீரில் பிழைக்க வைத்தான்' எனும் வரிகள் கண்ணதாசனுடையவை அல்ல; அவை 'பட கோட்டி' படத்தில், எம்.ஜி.ஆருக்காக வாலி எழுதிய பாடல் ஆகும். இதுபோல் சிறந்த பல பாடல்கள் புகழ் காரணமாக கண்ணதாசன் பெயரிலேயே பேணப்படுகின்றன. இதனை கவனத்தில் யாவரும் கொள்ள வேண்டுமென விரும்புகின்றேன்.

சி.சக்தி, ஆரணி, தெஹிவள.

முரசே!

கிரிக்கெட்டும், யுத்தமும் இந்த அரசின் இரு பெரும் துருப்புச் சீட்டுகளென்பதை இவ்வளவு எளிமையாக அறியத்தந்தமைக்கு நன்றி. தாய்போன்ற மொழி பெயர்ப்புக்கதைகளை மீண்டும் தரலாமே! டயானா பக்கத்தை எப்படி மறப்பது?

ஆர்.ஆர்.கிருஷ்ணா, அக்கரைப்பற்று-08.

## அவசரகால விவாதத்தில்

அவசரகாலச் சட்ட விவாதத்தில் தமிழ்க் கட்சிகள் ஆதரிக்காவிட்டாலும் பரவாயில்லை என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கொடுத்தது சாட்டையடிதான். இ.தொ.காவுக்கு உறைக்காது! வீரவிதானவுக்கு எதிரான போராட்டத்தை நிறுத்த திரைமறைவில் சதி நடந்ததோ? அதற்கு இ.தொ.காவும் உடந்தையோ என்று எனக்கு சந்தேகம். நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகக் கூறி போராட்டத்தை நிறுத்த வைத்தது இ.தொ.கா. அப்படியானால் எங்கே நடவடிக்கை? இன்றுவரை இல்லையே? ஏன் இவர்கள் வற்புறுத்தவில்லை?

ஜே.வில்லியம், வத்தளை.

## கிரிக்கெட்டும் யுத்தமும்

கிரிக்கெட்டும் யுத்தமும் பற்றிய இராஜ தந்திரியாரின் அலசல் வெகு சிறப்பு! கிரிக்கெட் அணிமீது எமக்கு ஆதங்கம் எதுவுமில்லை. திறமையால் அவர்கள் சாதனை படைத்தால் சந்தோசமே. ஆயினும் நாட்டின் தற்போதைய சூழலில் கிரிக்கெட் ஆரவாரத்தை காட்டி மனித உரிமை மீறல்களை மூடிமறைக்க எதுவாயிருப்பதை கவனிக்க தவறக் கூடாது. அந்த வகையில் இராஜதந்திரியாரின் தெளிவான அலசல் பாராட்டத்தக்கது.

இ.பரமநாதன், யாழ்ப்பாணம்.

## எதிர்ப்பாரா?

வீரவிதானவுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்க் கட்சிகள் கோரிக்கை விடுத்தாக பத்திரிகைகளில் படித்தோம். பல மாதங்களாகியும் பதில் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லையே? அவசரகாலச் சட்டத்தை ஆதரித்து வாக்களித் தால்தான் இனவாதிகள் மேல் நடவடிக்கை எடுக்கலாம் என்று அம்புலிமாமா கதை (உபயம்: முரசு) கூறினாரே தொண்டா. இப்போது ஒன்றையும் காணவில்லை. அடுத்த முறை எதிர்ப்பாரா?

சோ.பாலசிங்கம், குருநாகல்.

## இதுதான் மரியாதை

முரசுக்கு;

அவசரகாலச் சட்டவிவாதத்தில் இ.தொ.கா. மூக்குடைபட்டதை நக்கீரன் சந்திக்கு கொண்டுவந்திருந்தார். தமிழ்க் கட்சிகளுக்கு இன்றுள்ள மரியாதை இதுதான். விழுந்து விழுந்து ஆதரித்தாலும், எழுந்து எழுந்து உதைப்பார்கள். 'நல்ல சட்டத்தை ஆதரிப்பதைவிட மோசமான சட்டத்தை ஆதரித்தால் அதிக இலாபம்' என்ற தந்திரத்தை அம்பலப்படுத்தியது அருமை.

வி.ராசரத்தினம், பண்டாரவளை.

## சார்பு நிலை

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான மோதல்களில் அமெரிக்காவின் இரட்டை வேடத்தை 'முரசு' அடையாளம் காட்டியதைப் பாராட்டுகிறேன். விடுதலைப் புலிகள் இந்த விவகாரத்தில் இந்திய சார்பு நிலை எடுத்திருப்பதும் வரவேற்கத்தக்கதே.

கோ.சீமோன், மட்டக்களப்பு.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# பாலசிங்கம்–நெல்சன் மண்டேலா
# இம்மாத இறுதிக்குள் சந்திப்பு

தென்னாபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலாவை சந்திக்க அன்ரன் பாலசிங்கம் அனுமதி கேட்டிருந்தார்.

கடந்த வாரம் இதற்கான அனுமதி கிடைத்துள்ளதாகத் தெரிகிறது. இம்மாத இறுதிக்குள் சந்திப்பு நடக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தென்னாபிரிக்க அதிபர் பதவியில் இருந்து மண்டேலா ஓய்வு பெற்ற பின்னர் முதன் முதலாக அவரைச் சந்திக்கும் வெளிநாட்டுப் பிரமுகர் அன்ரன் பாலசிங்கம்தான் என்று கூறப்படுகிறது.

தென்னாபிரிக்காவில் உள்ள புலிகள் இயக்க ஆதரவாளர்கள் ஊடாகவே மண்டேலாவைச் சந்திக்கும் முயற்சிகள் நடந்துள்ளன.

தென்னாபிரிக்காவில் புலிகள் சுதந்திரமாக இயங்கி வருவதாக இலங்கை அரசு புகார் கூறி வருகிறது.

இதனால் தென்னாபிரிக்க அரசுக்கு இராஜதந்திர சிக்கலை ஏற்படுத்தாத விதத்தில், சந்திப்பு இரகசியமாக நடக்க உள்ளதாகவும் விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பற்றி மண்டேலா நன்கு அறிந்து வைத்துள்ளார். தென்னாபிரிக்காவில் உள்ள புலிகளது ஆதரவு அமைப்புக்கள் பிரபாகரனின் வரலாறு பற்றியும், இலங்கையின் இனப்பிரச்சனை வரலாறு பற்றியும் மண்டலாவிடம் முன்பே எடுத்து விளக்கியுள்ளன.

மண்டேலாவை முன்பும் புலிகள் இயக்க சர்வதேச பொறுப்பாளர்கள் சிலர் சந்தித்துள்ளனர். தென்னாபிரிக்க காங்கிரசின் வெற்றிக்குப் பாடுபட்ட இந்திய வம்சாவளி மக்களது பிரதிநிதிகள் சிலரே, அச்சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தனராம்.

தற்போது மண்டேலாவைச் சந்திக்கும் அன்ரன் பாலசிங்கம், இலங்கை இனப் பிரச்சனையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக செயற்படுமாறு அழைப்பு விடுக்க உள்ளார்.

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் சார்பாகவே இந்த அழைப்பு விடுக்கப்பட உள்ளது.

வடக்கு-கிழக்கில் குறிப்பாக வன்னியில் போரினால் ஏற்பட்டுள்ள அவலங்களைச் சித்தரிக்கும் ஆவணங்கள், வீடியோ படங்கள் போன்றவையும் மண்டேலாவுக்குக் காண்பிக்கப்பட உள்ளன.

இச் சந்திப்பின் பின்னர் தென்னாபிரிக்க காங்கிரஸ் தலைவர்களுடனும், தென்னாபிரிக்க வெளியுறவுத்துறை அதிகாரிகளுடனும் அன்ரன் பாலசிங்கம் சந்தித்து உரையாட உள்ளதாகவும் தெரிய வருகிறது.

# புலிகளது தாக்குதல் திட்டங்கள்!
## முறியடிக்க படை அதிகாரிகள் யோசனை!

**கிழக்கில் புலிகளது புதிய அணிகள் பொறுப்பேற்ற பின்னர் தாக்குதல்கள் தீவிரமாகியுள்ளன. மேலும் தாக்குதல்களுக்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் படைத்தரப்பு சந்தேகிக்கிறது.**

கிழக்கில் புலிகளின் புதிய அணிகளின் செயற்பாடுகள் பற்றி படைத்தலைமை உஷாரடைந்துள்ளது.

12.07.99 அன்று மட்டக்களப்பு இராணுவத் தலைமையகத்திற்கு இரண்டு விமானங்கள் சென்றன. படை உயரதிகாரிகளே அவற்றில் சென்றனர்.

நான்குமணிநேரம் வரை மட்டக்களப்பு இராணுவத் தலைமையகத்தில் ஆலோசனைகள் நடைபெற்றன.

படையினர் மீது தாக்குதல்கள் நடத்துவதோடு, அரச நிர்வாகத்தையும் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் புலிகள் இறங்கலாம் என்று படைத்தரப்பு கருதுகிறதாம்.

கிழக்கில் தமிழ்க் கட்சிகளின் நடவடிக்கைகளை நிறுத்த புலிகள் திட்டமிட்டுள்ளதால், தமிழ்க் கட்சி அலுவலகங்களுக்கு பாதுகாப்பு அளிப்பது பற்றியும் யோசிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

கிழக்கில் எல்லைப்புறக் கிராமங்களில் சிங்களக் குடியேற்றங்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு மேலதிக இரா்ணுவத்தினரை அனுப்ப வைக்கவே புலிகள் திட்டமிடுகின்றனர்.

அம்பாறையில் சமீபத்தில் புலிகள் தாக்குதல் நடத்தியதும் அதற்காகத்தான் என்று கருதப்படுகிறது.

எல்லைப்புறக் கிராமங்களைப் பாதுகாக்க படையினரை அனுப்பினால் முகாம் பாதுகாப்புக்கு படையினர் எண்ணிக்கை போதாது. அதனால் வன்னிக்குக் கிழக்கில் இருந்து படைகளை அனுப்பும் வாய்ப்புக் குறைந்து போகும் என்று புலிகள் கருதுகின்றனர்.

சமீபகாலத்தில் கிழக்கில் இருந்து ஒரு பகுதிப் படையினர் வன்னிக்கு அனுப்பப்பட்டனர். கிழக்கில் புலிகளது நடவடிக்கைகள் குறைவாக இருந்தமையால் படையினர் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.

தற்போது பல்வேறு ரூபங்களில் கிழக்கில் புலிகள் தமது நடவடிக்கைகளை முடுக்கிவிட உள்ளதால், படையினரின் எண்ணிக்கையை குறைக்க முடியாமல் போகும். இதனால் வன்னிக்கு மேலதிகப் படைகளை கிழக்கில் இருந்து அனுப்ப முடியாமல் போகலாம்.

கிழக்கில் புதிய உறுப்பினர்களைத் திரட்டுவதிலும் புலிகள் ஈடுபட்டுள்ளனர். பெண்கள் பலர் புலிகளுடன் புதிதாக இணைந்து கொண்டுள்ளனர்.

# பிரதி அமைச்சருக்கு குறி?

மணலாற்று பகுதிக்கு பிரதிபாதுகாப்பு அமைச்சர் அவர்கள் சமீபத்தில் விஜயம் செய்திருந்தார். அச் சமயம் புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தினார்கள். ஆனால் ஷெல்கள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் நின்ற பகுதியில் வந்து விழுந்ததாக தெரியவில்லை.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சரது பாதுகாவலர்களோ அல்லது வேறு படையினரோ காயமடைந்ததாகவும் தகவல் இல்லை. அவ்வாறிருந்தும் பிரதிபாதுகாப்பு அமைச்சர் மயிரிழையில் உயிர் தப்பியதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

மணலாற்று முகாமுக்கே பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் சென்றிருந்தார். புலிகளின் ஷெல்கள் முகாமை நோக்கி வீசப்படவில்லை. மணலாற்று முகாமின் முன்னரங்க முனைகளுக்கே வீசப்பட்டதாம்.

முகாமுக்கு வீசப்பட்டிருந்தாலும்கூட, பிரதி பாதுகாப்பு அமைச்சரும், தளபதிகளும் பாதுகாப்பான பகுதியிலேயே அமர்ந்திருந்தமையால் பாதிப்பு ஏற்பட்டிருக்காது.

# இழந்ததை மீட்கவே யுத்தம்
## புலிகளின் களமுனை தளபதி தெரிவிப்பு

"படையினரைத் தடுத்து நிறுத்தி பாதுகாப்பு வேலிகளை அமைத்துள்ளோம். இனி எமது ஒவ்வோர் நகர்வும், இழந்த பிரதேசத்தை மீட்பதாகவே அமையும்" இவ்வாறு புலிகளது வன்னிக் களமுனைத் தளபதிகளில் ஒருவரான கேணல் தீபன் கூறியுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கும்போது, படையினர், "எமது பாதுகாப்பு வேலியைத் தாண்டி வரமுடியாதளவுக்கு நாம் பலமடைந்துள்ளோம். இன்று படையினரின் மனோநிலையைப் பொறுத்தவரையில் எங்கு புலிகள் இல்லையோ, அந்த இடத்தைத்தான் படைகளை நகர்த்திப் பிடித்துள்ளனர்.

இந்தப் போரில் நாங்கள் நிச்சயம் வெல்வோம். எங்கள் படையணியைப் பெருக்குவது மூலம் படையினரின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியும்.

இன்று தேசியத் தலைவர் அவர்களினால் நடத்தப்படும் ஒவ்வொரு நகர்வு தமிழீழத்தை நோக்கிய தாகவே நகர்ந்து செல்கிறது.

இனி எமது ஒவ்வொரு நகர்வும் இழந்த பிரதேசத்தை மீட்பதாகவே அமைய வேண்டும்" என்றும் தீபன் கூறியுள்ளார்.

கிளிநொச்சி போர்முனைக்குச் சென்று பழவகைகள் கொடுத்த மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

# பரந்தன் முகாம்மீது ஷெல்வீச்சு
## காயமடைந்தோருக்கு வாகனமில்லை

கரும்புலிகள் தினத்தின் மறுநாளான ஜூலை 6ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.30 அளவில் பரந்தன் முகாமை நோக்கி புலிகளின் மோட்டார் குண்டுகள் வந்துவீழ்ந்த வண்ணமிருந்தன. அங்குள்ள பங்கர் ஒன்றில் முதல் நாளிரவு முழுவதும் கண்விழித்திருந்து பாதுகாப்பிலீடுபட்டிருந்த படையினர் மீதும் குண்டுகள் வீழ்ந்தன.

படையினர் இருவர் ஷெல்பட்டுச் சாய்ந்தனர். மூவர் காயமடைந்தனர். ஒருவருடை இரு கால்களும் துண்டிக்கப்பட்டன.

கால்களை இழந்தவர் இரத்தப் பெருக்கினால் படுமோசமான நிலையில் மயக்கமுற்றிருந்தார். அவரை உடனடியாக சிகிச்சைக்கு எடுத்துச் செல்ல அங்கு அம்பியூலன்ஸ் வண்டி இல்லை. இத்தருணங்களில் உழவு இயந்திரத்தின் இழுவைப் பெட்டியில்தான் ஹெலிக்கொப்டர் தரித்து நிற்கும் இடத்துக்குக் கொண்டு செல்வது வழக்கம். ஆனால் அன்றைய தினம் உழவு இயந்திரம் கூட அங்கு இருக்கவில்லை.

கஜபாகுப் பிரிவின் கட்டளை அதிகாரியின் வாகனத்தை ஏற்பாடு செய்து காயமடைந்தவர்களை அதிலேற்றி ஹெலி தரிப்பிடம் கொண்டு சென்றனர். அங்கிருந்து புறப்பட்ட ஹெலி பலாலி இராணுவ மருத்துவமனையை அடைந்த சிறிது நேரத்தில், கால்களை இழந்த படைவீரர், நினைவு திரும்பாமலே மரணமடைந்தார்.

# உழவு இயந்திரங்கள் கடத்தல்!
## லொறிகளும் புலிகளால் எரிப்பு!

மட்டக்களப்பு-வாகரைப்பகுதியில் கடந்த வாரம் நடந்த இருவேறு சம்பவங்களில் 2 லொறிகள் எரிக்கப்பட்டும், 2உழவு இயந்திரங்கள் கடத்திச் செல்லப்பட்டுமுள்ளன.

முன்னதாக நடந்த லொறி எரிப்பு சம்பவம் பற்றி அறியப்படுவதாவது: ஓட்டமாவடி முஸ்லிம் வர்த்தகர்களுக்குச் சொந்தமான இந்த லொறிகளில் வாகரைப் பகுதியிலிருந்து மீன் ஏற்றி வரப்படுவதுண்டு. அதனுடன் சேர்த்து உள்ளூரில் கிடைக்கும் விறகு, விறகுக் கரி என்பன உட்பட வேறு பல,பொருட்களை மிகக் குறைந்த விலைக்கு வாங்கி ஏற்றி வருவதுண்டாம்.

இதனால் தாம் நஷ்டமடைந்து பாதிக்கப்படுவதாக சிறு கைத்தொழில் செய்து சீவியம் நடத்துவோர் புலிகளிடம் புகார் தெரிவித்திருந்தனராம்.

லொறிக்காரர்கள் முற்பணம் கொடுப்பதுடன் அதற்காக பொருட்களை மிகக் குறைந்த அநியாய விலைக்கு வாங்குவதால் உள்ளூர் தமிழ்த் தொழிலாளர்கள் பாதிக்கப்படும் நிலையைத் தவிர்ப்பதற்காக லொறிக்காரர்களை, குறிப்பிட்ட ஒரு பகுதிக்கு அப்பால் வரவேண்டாம், என்று புலிகள் எச்சரித்திருந்தனராம்.

அந்த எச்சரிக்கை மீறப்பட்டதாலேயே லொறிகள் எரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. லொறியின் சாரதிகளும், உதவியாளர்களும் எதுவித ஆபத்துமின்றி உடனடியாக விடுவிக்கப்பட்டனர்.

மற்றைய சம்பவத்தில் ஓட்டமாவடி முஸ்லிம்களுக்குச் சொந்தமான உழவு இயந்திரங்கள் இரண்டைப் புலிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் குப்புளாமடு பகுதியில் 08.07.1999 அன்று இடம் பெற்றது. சாரதிகள் விடுவிக்கப்பட்டனர். அந்தப் பகுதியில் பச்சை மரங்களைத் தறித்து விறகு எடுத்துச் செல்ல வேண்டாம், என்று புலிகள் எச்சரித்திருந்ததாகவும் அது மீறப்பட்டதாலேயே உழவு இயந்திரங்கள் கடத்தப்பட்டதாகவும் அறிய வருகிறது.

உழவு இயந்திரங்கள் விடுவிக்கப்படுவதற்கு தலா இரண்டு இலட்ச ரூபா கோரப்பட்டுள்ளதாகவும், ஆனால் ஏற்கெனவே இந்த உழவு இயந்திரக்காரர்கள் வயல் வேலை அனுமதிக்கட்டணமாக தலா பத்தாயிரம் ரூபா புலிகளுக்கு வழங்கியிருப்புதால் கோரப்பட்டுள்ள அதிக தொகை குறைக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

# மலையகத் தமிழர்களை திருப்பி அனுப்பு
## 'வீரவிதான' மாநாட்டில் தீர்மானம்

சிங்கள வீரவிதான அமைப்பின் நான்காவது வருடாந்த மாநாடு கண்டி அஸ்கிரிய சர்வதேச பௌத்த நிலையத்தில் (11.7.99)ல் இடம்பெற்றது அப்பொழுது 1915 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட 'சிங்களே' என்ற பெயர் தொடர்ந்தும் கடைப்பிடித்தல் வேண்டுமென அங்கு நிறைவேற்றப்பட்ட தேசிய கொள்கைத் திட்டத்தின்போது வலியுறுத்தப்பட்டது.

இந்த மாநாடு அதன் பிரதம அமைப்பாளர்களான பி.ஏ.மகிபால, கலாசூரி சதீஸ் சந்திர எதிரிசூரிய ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்றது.

(கண்டி நிருபர்)

மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் நாடு எங்கிலும் இருந்து 82 கிளைகளின் பிரதிநிதிகள் சுமார் ஐயாயிரம் பேரும் ஐநூறு பௌத்த குருமார்களும் கலந்து கொண்டனர். இதனை யொட்டி கட்டுகஸ் தோட்டை, தென்னக் கும்புரை, பேராதனை ஆகிய நுழைவாயில் ஊடாக கண்டி நகரை தொடர்புகொண்ட பிரதான வீதிகளில் வீரவிதான அமைப்பின் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

கண்டி வைஸாக சமித்தி சாலையில் இருந்து பிரமாண்டமான ஊர்வலமும் இடம் பெற்றது. அங்கு நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

'சிங்களே' நாட்டின் உரிமையும் இறைமையும் ஐ.நா. மூலம் பாதுகாக்கப்படவேண்டும். 'சிங்களே' நாட்டின் சிங்கள மக்களின் உரிமை முதலில் பாதுகாக்கப்படுவதுடன் ஏனைய சிறுபான்மையினரும் இதற்கு அடுத்தாற்போல் கருதப்படுவர்.

'சிங்களேயின்' அரசகரும மொழி சிங்களம் மாத்திரமே. பௌத்த சமயம் நாட்டின் பிரதான சமயமாகும்.

இந்த நாட்டைத் துண்டாட ஒருபோதும் இவ்வமைப்பு துணை போகாது.

பெரும்பான்மையினமான சிங்களவரின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு பிரஜா உரிமையற்றவர்கள் அனைவரும் அவர்களது தாய் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுவர். இவை போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

# களஞ்சிய தீ விபத்து!
## வானொலியின் தமாஷ்!

பொலன்னறுவை வெலிக்கந்தை இராணுவ தலைமையகப் பயிற்சி களஞ்சியப் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டது

இதனால் அந்நகரம் புகை மண்டலத்தால் சூழப்பட்டு வெறிச் சோடியது. உடனடியாக மக்கள் அப்பகுதியிலிருந்து வேகம் வேகமாக வெளியேற்றப்பட்டனர். கடைகள் பாடசாலைகள் அலுவலகங்கள் சகலதும் மூடப்பட்டன.

13.07.99 அன்று காலை 9.30 மணிக்கு தீ ஏற்பட்டது. 2 மணி நேரம் வெடியோசை தீ ஏற்பட்ட களஞ்சியப் பகுதியிலிருந்து கேட்டவண்ணமிருந்தன. அம்பியூலன்ஸ் வண்டிகள் ஓடுப்பட்டுத் திரிந்தன.

அரச வானொலி தனது தலைப்புச் செய்தியாக இதனைக் குறிப்பிட்டு "வெலிக்கந்தை இராணுவ முகாமில் குப்பைக் கூழப் பகுதியில் ஏற்பட்ட தீ கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சூழ இருந்த குடி மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று கூறியது. இதனைக் கேட்ட பலர் அடக்கமாட்டாது சிரித்துவிட்டனர்.

இராணுவ களஞ்சிய தீ விபத்து ஏற்பட்ட பகுதிக்கு முன்னாலுள்ள வீதியில் வெடிபொருட்கள் வந்து விழ்ந்த அறிகுறியாக குன்றும் குழியும் காணப்படுவதாக நேரில் சம்பவத்தைக் கண்டோர் தெரிவித்தனர்.

ஆனால் தீ ஏற்பட்டதற்கு புலிகளோ அல்லது சதி வேலையோ காரணமல்ல என்று படையினர் கூறுகின்றனர்.

மட்டக்களப்பு-பொலன்னறுவை எல்லையிலுள்ள வெலிக்கந்தைக்குச் சமீபமாகவே புலிகளின் வசமுள்ள வாகரைக் காட்டுப் பகுதி உள்ளது.

# முஸ்லிம் பெண்மீது பாலியல் வல்லுறவு!
## படையதிகாரிகள் மன்னிப்பு கோரல்

ஓட்டமாவடி-ஹிஜ்ரா நகரில் முஸ்லிம் பெண்ணொருவர், மது வெறியிலிருந்த படையினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சம்பவம் கடந்த வாரம் இடம் பெற்றது.

குறித்த பெண்ணின் கணவர் வீட்டிலிருக்கும்போதே இரவு 11 மணியளவில் வீட்டிற்குள் புகுந்த படைவீரர் மூவர், கணவரை தாக்கி, அவரது வாய்க்குள் சீலையைத் திணித்து விட்டு கட்டி வைத்த பின்னர், இந்தப் பெண் மீது பாலியல் வல்லுறவில் ஈடுபட்டுள்ளனர்.

நிறை மதுபோதையில் வீட்டிற்குள் நுழைந்த இவர்கள் "எல்.ரீ.ரி.ஈ இனருக்குச் சப்போர்ட் பண்ணுகிறீர்களா? நாங்கள் வீட்டைச் சோதனையிடப் போகின்றோம்?" என்று கூறியபடியே இந்த அக்கிரம வேலையில் ஈடுபட்டனராம்.

தள்ளாடிய மதுபோதையில் இருந்தாலும் சமயோசிதமாக அவர்களது காவல் அரணில் இருந்த ஃபோகஸ் மின் வெளிச்சத்தை அணைத்துவிட்டே வீட்டிற்குள் நுழைந்திருக்கின்றனர்.

இச் சம்பவத்தின் பின்னர் அந்தக் கிராம மக்களிடம் ஏற்பட்ட சலசலப்பைத் தொடர்ந்து படையினர்மீது நடவடிக்கை எடுக்கப் படைத் தலைமை உத்தரவிட்டது.

இதன்போது சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்த படை வீரனும், மேலும் இரு சிப்பாய்களும் அடையாளம் காட்டப்பட்டு கைது செய்யப்பட்டனர். அப்பெண்ணுக்கு ஐயாயிரம் ரூபா இழப்பீடு வழங்கியதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவம் நடைபெற்ற பின்னர் குறிப்பிட்ட ஹிஜ்ரா நகர், கேணிநகர் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அச்சம்கொண்டு இடம்பெயர ஆயத்தமான வேளையில் பதற்றம் நிலவியது.

சமூக நல விரும்பிகள் உடனடியாக நடவடிக்கையில் இறங்கியதனால் படையதிகாரிகள், பாதிக்கப்பட்ட கிராமத்திற்குச் சென்று நிலைமையை ஆராய்ந்ததுடன், நடந்த துரதிருஷ்ட சம்பவத்திற்காக மன்னிப்புக் கேட்டதாகக் கூறினார்கள்.

# அமெரிக்க அதிகாரி வருகிறார்
## உயரதிகாரிகளுடன் ஆலோசனை

அமெரிக்காவின் பசிபிக் பிராந்தியத்துக்கான இராணுவ உயர் அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் எட்வின் ஸ்மித் இலங்கை வரவிருக்கிறார். இதற்கான விரிவான ஏற்பாடுகளை பாதுகாப்பு அமைச்சு செய்து வருவதாக அறியப்படுகிறது.

பசிபிக் பிராந்தியம் என்பது 10 கோடி சதுர மைல் பரப்பளவு கொண்ட பிரதேசமாகும். அமெரிக்காவின் மேற்குக் கரையிலிருந்து ஆபிரிக்காவின் கிழக்குக் கரைவரையும், வட துருவத்திலிருந்து தென் துருவம் வரையுள்ள பூமண்டலத்தின் அரைவாசி அளவைக் கொண்டது இது. பசிபிக், வட கிழக்கு ஆசியா, தென்கிழக்கு ஆசியா, தென் ஆசியா மற்றும் இந்து சமுத்திரம் ஆகியவற்றை உள்ளடக்கிய 43 நாடுகளைக் கொண்டதே இப்பிராந்தியம்.

இப்பிராந்தியத்தில் அமெரிக்க நலன்களை இராணுவ ரீதியில் கண்காணிக்கும் USPOCOM என்ற அமைப்பின் கட்டளை அதிகாரியாக லெப். ஜெனரல் எட்வின் ஸ்மித் விளங்குகிறார்.

# அம்பாறையில் கொலை!

அம்பாறை-ரஜகலதென்ன என்ற இடத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் தனயனும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 12.07.99 அன்றிரவு 11.30 ளவில் வீட்டைச் சுற்றி வளைத்த ஆயுதக் கோஷ்டி, வீட்டில் ஏனையோர் இருக்க மேற்படி இருவரை மாத்திரம் சுட்டுக் கொன்றனர்.

இதனால் புலிகள் இந்தப் படுகொலையைச் செய்திருக்கவில்லை என்று பிரதேசவாசிகள் கருதுகின்றபோதும், மட்டக்களப்பு-அம்பாறை எல்லைப்பகுதியில் குழப்ப நிலையை ஏற்படுத்துவதற்காகப் புலிகளே இந்தப் படுகொலையைச் செய்திருக்கலாம் என்று பாதுகாப்புத் தரப்பினர் சந்தேகிக்கின்றனர்.

அப்புகாமி 65 வயது, ரஞ்சித் 35 வயது ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

# ஏமாற்றம் தந்த தமிழ் சேவை

## அஞ்சல் நிகழ்ச்சிகள்

கொழும்பு கொச்சிக்கடையிலுள்ள ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய மஹா கும்பாபிஷேகம் கடந்த ஜூன் 30 ம் திகதி மிக விமரிசையாக நடைபெற்றது.

இக் கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் இலங்கை வானொலி தமிழ்ச் சேவையில் நேரடியாக அஞ்சல் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டதை அடுத்து, அந்நிகழ்ச்சியில் நேரடியாகக் கலந்து கொள்ள முடியாத எம் போன்ற பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது.

கோபுர கலசங்கள் யாககுண்டத்திலிருந்து வலம் வந்த காட்சியும் பக்தர்களின் மெய்ப்பாடுகளும் நாதஸ்வர தவில் வாத்தியங்களின் ஒலிகளும் நன்றாகவே ஒலித்தன. ஆனால் கோபுர கலசங்களுக்கான கும்பங்கள் வலம் வந்து கொண்டிருக்கும் போதே திடுதிப்பென அஞ்சல் ஒலிபரப்பை முடித்து நிலையம் திரும்புவதாக அறிவிக்கப்பட்டது.

இலங்கையில் உள்ள சைவ ஆலயங்களுள் பண்டைய வரலாற்றுப் பெருமை இல்லாத போதும், தலை நகரில் சேர் பொன் இராமநாதன் அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர ஆலயம் பல வுகையிலும் சிறப்பு வாய்ந்தது.

இலங்கையில் முற்று முழுதாகக் கல்லால் அமைக்கப்பட்ட சிறப்பு இவ்வாலயத்துக்கு மட்டுமே உண்டு. இலங்கை எங்கணுமுள்ள சைவப் பெருமக்கள் இந்நிகழ்ச்சியை வானொலியில் அவ்வஞ்சல் மூலம் கேட்டு, எம்பெருமானை மனக் கண்முன் நிறுத்தி அஞ்சலி செய்யக் காத்திருந்திருப்பார்கள். அத்தனை பேரையும் இலங்கை வானொலி தமிழ்ச் சேவை ஏமாற்றிவிட்டது.

காலை 8.30 முதல் 10.00 மணிவரையும்தான் கும்பாபிஷேக நிகழ்ச்சி அஞ்சல் செய்யப்படும் என்று ஏற்கனவே அறிவித்திருந்தது உண்மைதான். இருப்பினும் மேலும் ஒரு மணி நேரத்தை- ஏனைய சேவையாளர்களின் அனுமதியுடன்- நீடித்திருக்கலாம்.

அடுத்ததாக நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய தேர் உற்சவ அஞ்சல் நிகழ்ச்சியும் வசந்த மண்டபப் பூசையுடன் நிறுத்தப்பட்டுவிட்டது.

தேரோட்ட நிகழ்ச்சி வானொலியில் அஞ்சல் செய்யப்படுவதானால் வசந்த மண்டபப் பூசை முடிந்து சுவாமி வலம்வந்து தேரில் ஆரோகணித்து சில அடி தூரமாவது தேர் முன் நகரும் வரை நீடிக்கப்பட்டிருக்கவேண்டும்.

அன்றைய தின நபிகள் நாயகத்தின் பிறந்த நாளுக்கான விசேட நிகழ்ச்சிகளுக்கு இடமளிக்கத்தான் வேண்டும் என்பதை மறுக்கவில்லை. இருப்பினும் ஒலிபரப்பு ஏற்பாட்டாளர்கள், ஆலய நிர்வாகிகளுடன் பேசி, வசந்த மண்டபப் பூசையை உரிய காலத்துக்குள் முடித்து தேரில் அம்பாள் ஏற்றப்படுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டும்.

இவ்வாறு செய்ய முடியாதிருக்கும் பட்சத்தில் நேரடி வர்ணனைகளை தொடர்ந்து ஒலிப்பதிவு செய்து, பிறிதொரு நேரத்தில் ஒலிபரப்பி இருக்கலாம்.

மேற்படி முக்கியத்துவம் வாய்ந்த இரு நேரடி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளும் பக்தர்களுக்குப் பலத்த ஏமாற்றத்தைத் தந்து மனத்தைப் புண்படுத்திவிட்டன.

இரா.பத்மநாதன்

# தொலைபேசி சேவை விஸ்தரிப்பு

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் தொலைபேசி சேவைகளை விஸ்தரிக்கும் நோக்குடன் தற்போது பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மன்னார் டெலிகொம் பணிப்பாளர் பீ.எப்.பானுராஜ் முரசிடம் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் மன்னார் நகருக்குள் நிலக்கீழ் கேபிள்கள் பொருத்தும் பணி துரிதமாக இடம்பெற்று வருகிறது. அத்துடன் புதிய தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணியும் நடைபெறுகிறது.

வடகிழக்கு மாகாண பிரதி தொலைத்தொடர்பு பணிப்பாளர் நாயகம் கனகசூரியரின் வழிகாட்டுதலின் கீழ் தற்போது என்றுமில்லாதவாறு மன்னாரில் தொலைபேசி சேவை சீர் செய்யப்பட்டுள்ளது. ஐ.டி.டி வசதி மன்னாருக்கு முதற் தடவையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தூர இடங்களான முருங்கன், உயிலங்குளம், வங்காலை, பேசாலை, தலைமன்னார், எருக்கலம்பிட்டி, தாராபுரம் போன்ற கிராமங்களுக்கும் தொலைபேசி சேவைகள் விஸ்தரிக்கப்படவுள்ளன.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் பூர்த்தியானதும் மேலும் இரண்டாயிரம் புதிய இணைப்புகள் வழங்கும் சாத்தியம் உண்டு. எனினும் போதிய தொழில் நுட்பவியலாளர்கள் இல்லாதிருப்பது பெரும் குறையாகும்.

பல தசாப்தங்களுக்குப் பின் மன்னாரில் தொலைத் தொடர்பு சேவை சீரமைக்கப்பட்டுள்ளமை குறித்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.மரியதாசன் குரூஸ் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

# வெள்ளி விழாக் காணும் தம்பதி



யாழ்ப்பாணம் ஊரெழு கிழக்கைச் சேர்ந்த திரு. ஐயச்சந்திரம் (கிளி) ரஞ்சிதமலர் தம்பதியினர் தமது 25வது திருமண நாளை ஊரெழுவிலுள்ள தமது இல்லத்தில் 21.07.99 அன்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள்.இவர்களை பிரான்ஸில் உள்ள மகன் சுதர்சன், ஜேர்மனியிலுள்ள மகன் சுரேஸ்தரன், மகள் சுதர்சினி, மகன் சுகுணன் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல ஞான பைரவர் அருளால் சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:-இ.மன்மதராசன், யாழ்ப்பாணம்.


## அஸ்மா நோய்க்கு வைத்தியம்



**அஸ்மா, தொய்வு (முட்டு), இழுப்பு, இளைப்பு, மாய்ச்சல், மூச்சுத்தட்டல்**

போன்ற குணங்களுக்கு காஸ், பம், ஊசிகள், சேலைன என்று பாவித்தும் சுகம் கிடையாத பல ஆயிரக் கணக்கான நோயாளிகள் நாட்டின் பல பாகங்களில் இருந்து வந்து உடலுக்குப் பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகள் மூலம் முழுக் குணமடைந்து செல்கிறார்கள். கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல், குளித்தல் போன்ற பல ஆலோசனைகளுடன் (அவரவர் தாய் மொழிகளில்) சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்

டாக்டர் சுறாஜ் சோமசுந்தரம் Ph.D H(Ind); M.B.B.SCH (Cey)
அஸ்மா சிகிச்சை நிபுணர் Govt. Reg. No: A 1553 (1970)

25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை மவுண்ட்லேவினியா - (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஒடியன் தியேட்டர்-காலிவீதி)

தொலைபேசி இலக்கங்கள்: 074-201582, 728767, 078-650516

தற்சமயம் தினமும் நோயாளர்கள் அதிகம் இருப்பதனால் புதிய நோயாளர்கள் தொலைபேசி மூலம் பார்வையிடப்படும் நாளையும் நேரத்தையும் பதிவு செய்து வரவும். தூர மாவட்டத்தில் உள்ள நோயாளர்கள் நான்கு நாட்களுக்கு முன்பு தொலைபேசி மூலம் பதிவு செய்தால் காலை நேரங்களிலும் பார்வையிடப்படும்.

இருமல், சளி, தும்மல், மூக்கடைப்பு, பீனிசக் குணங்கள் நாளடைவில் அஸ்மா நோய்க்கு இட்டுச் செல்லாமல் இருப்பதற்கு இப்பொழுதே வைத்தியம் செய்யுங்கள்.



## கார்த்திகன் டெலி:போன் காட்

சர்வதேச தொலைபேசி அழைப்புக்களுக்கு ஐரோப்பிய நாடுகளில் வாடிக்கையாளர்கள் நாடுவது கார்த்திகன் டெலி:போன் காட். குறைந்த கட்டணத்தில் நிறைந்த உரையாடலுக்கு சிறந்தது! இதோ கார்த்திகனின் சிறப்பு சேவை கட்டணம் கனடாவில் இருந்து...

| | |
|---|---|
| 10 கனடியன் டொலர் காட் | இலங்கைக்கு 18 நிமிடம். |
| 20 கனடியன் டொலர் காட் | இலங்கைக்கு 36 நிமிடம். |
| 10 கனடியன் டொலர் காட் | இந்தியா 16 நிமிடம் |
| 20 கனடியன் டொலர் காட் | இந்தியா 34 நிமிடம் |
| 10 கனடியன் டொலர் காட் | வன்னி 8 நிமிடம். |
| 20 கனடியன் டொலர் காட் | வன்னி 16 நிமிடம். |
| 10 கனடியன் டொலர் காட் | சுவிஸ் 90 நிமிடம். |
| 10 கனடியன் டொலர் காட் | ஜெர்மனி 90 நிமிடம். |

வன்னியில் உங்கள் உடன் பிறப்புக்களுடன் தொடர்பு கொள்வதற்கு இதோ தொ.பே. இலக்கங்கள்:
புதுக்குடியிருப்பு: 011873761932759,
ஸ்கந்தபுரம்: 011873761932798

கார்த்திகன் கோல் காட் மேலதிக விபரங்களுக்கு:
தொ.பே.இ: (416) 461-3456- தொ.நகல்.இ: (416) 461-8621



## மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச் சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது :.பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



## அதிஸ்டத்தை அள்ளித்தரும் அதிசயக் கற்கள்

பல வருடங்கள் ஆராய்ச்சியின் பின் மண்ணுக்கடியில் மறைந்து நிற்கும் மகத்தான ரத்தினங்களை உங்கள் கைபிடிக்குள் கொண்டு வந்துள்ளோம். வாழ்வில் வியாபாரம், தொழில், திருமணம், கல்வி, வெளிநாட்டு பயணம் மற்றும் பல வகைளில் அதிஸ்டத்தை அள்ளித் தரும் முழு சரீரத்திற்கும் பொருந்தும். ரத்தினங்களை நியுமராலஜி முறையில் இலவசமாகக் கணித்துக் கூற அதை அணிந்து நீங்களும் அதிஸ்டசாலியாக மாறலாம்.

**Accrediated by National Gem & Jewellery Authority**

வெளிநாட்டு தொடர்பு இலங்கை நேரம் **9.30 a.m. 7.30 p.m.**
T.P. 00941-436331
E-mail: arul_gem@eureka.lk

அருள் ஜூவல்லர்ஸ் 3 ARUL JEWELLERS

3, Sea Street, Colombo - 11. Sri Lanka. T.P. 436331.
Branch: 105, Galle Road, Wellawatte, Colombo 06.


# திலகவதியார் மகளிர் இல்லம், திருப்பழுகாமம், மட்டக்களப்பு, இலங்கை.

பதிவு இல: NEP/BCC/CE/30



அன்பான எம் இனிய தமிழ் உறவுகளே!

**வன் செயலால் பாதிக்கப்பட்டு தாய் தந்தையை இழந்த குழந்தைகளின் வளர்ச்சிக்காக நிதி உதவி கோரல்**

மேற்படி மகளிர் இல்லம் விவேகானந்த நலன்புரிச் சங்கத்தால் ஸ்தாபிக்கப்பட்டு கிழக்கு மாகாணத்தில் வன்செயலால் பாதிக்கப்பட்டு, தாய் தந்தையை இழந்த ஆதரவற்ற குழந்தைகளின் உயர்வுக்காக பணியாற்றி வருகின்றது.

கடந்த காலங்களில் இவ்வமைப்பிற்கு எம் உறவுகள் மனமுவந்து வழங்கிய உதவிகளால் கிழக்கு மாகாணத்தில் எமது பணி சிறப்பாக நடைபெற்றுவருகின்றது.

நாளுக்கு நாள் எமது பாதுகாப்பிலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகின்றது. தற்போது இவ்வில்லத்தில் 42 தாய் தந்தையை இழந்த ஆதரவற்ற குழந்தைகள் தங்கியுள்ளனர். இவர்களுக்கான கல்வி, உணவு, உடை, தங்குமிடம், சுகாதாரம் போன்ற அனைத்து வசதிகளும் எம்மால் பல கஷ்டங்களிற்கு மத்தியில் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

எமது இல்லம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய பகுதியில் அமைந்துள்ளதால், பொது மக்களினதும், நிறுவனங்களினதும் உதவிகள் மிகவும் அரிதாகவே உள்ளது.

எனவே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசிக்கின்ற அன்பர்கள் இக் குழந்தைகளை தங்களது குழந்தைகளாக நேசித்து அவர்களின் வளமான வாழ்விற்கு தங்களால் இயன்ற நிதி உதவியினை கீழ் உள்ள எமது வங்கிக் கணக்கிற்கு அனுப்பி மிகுந்த புண்ணியம் தரவல்ல புனித பணிக்கு உதவுமாறு தங்களை மிக்க தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இறந்த ஆத்மாக்களின் நினைவாக அல்லது தங்கள் பிள்ளைகளின் பிறந்த தின நினைவாக அல்லது வேறு ஏதும் நினைவாகவும் எமது பாதுகாப்பில் உள்ள குழந்தைகளுக்கு பணம் அனுப்பி ஒரு நாள் உணவு வழங்கலாம்.


1. மாதாந்தம் ஒரு பிள்ளையை பராமரிக்க ரூபா: 1500 தேவைப்படுகின்றது.
2. குழந்தைகளுக்கு ஒரு நாள் உணவு வழங்க ரூபா: 3000 தேவைப்படுகின்றது.

நன்றி.

Thilakavadiyar Girls Home,
A/C No: 20135,
People's Bank, Kaluwanchikudy (E.P)

இவ்வண்ணம்,
இல்லச் சேவையில்
க.சற்குணேஸ்வரன்
தலைவர்.

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி



விநாயகமூர்த்தி ஆனந்தராசா (குமார்)- நவக்கிரி

அன்னைமடியில்: 29.12.1972
ஆண்டவனடியில்: 19.07.1997

ஆறுதல் சொல்ல
யாரிருந்தென்ன-உன்
ஆருயிர் அன்பிற்கு
ஈடாகுமோ-தேறுதல்
சொல்ல தெய்வம்
வந்தென்ன குமரா-உன்
திருமுகம் பார்த்தால்
போதாதோ-எம்

உள்ளங்கள் துடித்திட நீ எங்கு சென்றாய்? எந்நாளும் உன் நினைவால் கண்ணீரால் கரைகின்றோம். இரு ஆண்டல்ல பல்லாண்டு சென்றிடினும் எம் நெஞ்சமதில் உன் நினைவு என்றும் நீங்காது.

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
தகவல்:வ.விநாயகமூர்த்தி

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணினில் உதிப்பு:- 05.07.1967
விண்ணினில் கலப்பு:- 21.06.1997

**திரு. கிருஷ்ணபிள்ளை திருநாவுக்கரசு (கிளி) -மீசாலை**



"ஆண்டிரண்டு சென்றாலும்
மாண்புடையோர் உலகோரின்
மனங்களிலே என்றென்றும்
வாழ்ந்திடுதல் அன்றோ வழக்கு"

சாவகச்சேரி மீசாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்து வந்தவருமாகிய திரு கிருஷ்ணபிள்ளை திருநாவுக்கரசு அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு தினம் ஆனி மாதம் 21ம் திகதி நடைபெற்றது. "எல்லாம் எப்பவோ முடிந்த காரியம் ஒரு பொல்லாப்புமில்லை"
-யோகசுவாமிகள்-

நினைவுடன் வாழும் அப்பா, அம்மா சகோதர சகோதரிகள், உறவினர், நண்பர்கள்.

தகவல்: மேகநாதன், திலகம், தீசன்


## மனோதத்துவ வைத்தியம்

**வவுனியாவிலும் (வன்னி இன்னில்) சந்திக்கலாம்**

இளைஞர்களே! சக்தி இழந்து மெலிந்து, நித்திரையின்மை, பயம் நடுக்கம், ஞாபக மறதி, தாழ்வு மனப்பான்மை ஏற்படக்காரணமான தவறுகளை நிறுத்தி எதிர்காலம் பிரகாசிக்க பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

**SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)**

தாம்பத்திய கோளாறுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணமாகும். தாழ்வு மனப்பான்மையை 90 நிமிடத்தில் நீக்கி, நான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்தே பணம் பெறப்படும்.

**வெளிநாட்டில் வசிப்போருக்குவிஷேட ஏற்பாடுகள்**

எந்தவித தாம்பத்திய பாதிப்புனாலும் தயக்கமின்றி எழுதவும். உமது கேள்விகளுக்கு விரிவான பதில் தந்தபின் முடியாதவன், இயலாதவன் என்ற தாழ்வு மனப்பான்மை நீங்க மனோதத்துவ சிகிச்சை பதிவு நாடா மூலமும், உடல் பாதிப்பிற்கு நல்ல மூலிகை மருந்தும் பெற்று தாம்பத்திய குறைகளை முற்றாக நீங்கிய ஆண்மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

நீரிழிவு நோய் முற்றாக சுகமாக்கலாம். மனநோய்கள், தாழ்வு மனப்பான்மை 'ஹிஸ்டீரியா' என்பனவற்றுக்கும் மனோதத்துவ சிகிச்சை உண்டு. ஆஸ்துமா, தலையிடி, வாதம், வெள்ளை போதல், கிரந்திநோய், குழந்தை பேறு இன்மை, முடி உதிர்தல் எல்லாவற்றுக்கும் மருந்துகள் உண்டு.

**கல்முனையில் ஆகஸ்ட் 1,2ம் திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067-29329

**வவுனியாவில் ஆகஸ்ட் 7,8ம் திகதிகளில்**

(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074,

**கொழும்பில் ஜூலை 20 முதல் 28 வரை**

DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL STREET, COLOMBO-13
(5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) T.P. 338165, 338166, 338164 FAX: 338161.
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No-072-609388

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

**DR.P.ARUMUGAM S.A.M.P., NO.51/5. Koolavady Road, Batticaloa. SRI LANKA.**

# பெரிதாகிவரும் பீரங்கிப் படையணி

**யா**ழ் குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் கெரில்லா தாக்குதல்கள் தீவிரம் பெற்றுள்ளன.

பெரும் எண்ணிக்கையிலான அணிகளாக குடாநாட்டில் புலிகள் நடமாடமுடியாது. எனவே குறைந்த எண்ணிக்கையிலான குழுக்களாகவே புலிகளது அணிகள் பிரிக்கப்பட்டுள்ளன.

கிளைமோர் தாக்குதல்கள், பிஸ்டல் குழு தாக்குதல்கள், கைக்குண்டு தாக்குதல்கள் போன்ற தாக்குதல் முறைகளே தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

ஏராளமான கிளைமோர் குண்டுகள் குடாநாட்டுக்குள்ளும், குறிப்பாக யாழ் நகருக்குள்ளும் கொண்டுவரப்பட்டுள்ளன என்று தகவல்.

அவற்றில் சில படையினரால் கைப்பற்றப் பட்டும் உள்ளன. உள்ளே கொண்டுவரும் முயற்சியில் எதிர்பாராத சிக்கல்களால் கைவிடப்பட்ட கிளைமோர் குண்டுகளே படையினரிடம் சிக்கிக்கொண்டன.

யாழ் குடாநாட்டில் பஸ் வண்டி ஒன்றும் புலிகளால் தீயிட்டு நாசமாக்கப்பட்டது.

குடாநாட்டில் மட்டுமன்றி வேறு பல பகுதிகளிலும் குறிப்பிட்ட நாளில் பஸ் வண்டிகள் தீக்கிரையாக்கப்பட்டன.

குடாநாட்டில் பஸ் எரிக்கப்பட்டதற்கு காரணம் இருக்கிறது. பஸ் போக்குவரத்துக்களும் சீர்குலைந்தால் குடாநாட்டில் இயல்பு நிலை உள்ளது என்று காண்பிக்க வேறு உதாரணங்கள் போதாது.

இதனால் பஸ்களுக்கு பாதுகாப்பு கொடுக்க படைத்தரப்பு முன்வரும். யாழில் சில பஸ்களில் தலா இரண்டு இராணுவத்தினர் காவலுக்கு அனுப்பப்பட்டனர்.

இது தொடருமானால் பஸ்களில் பாதுகாப்புக்காக செல்லும் இராணுவத்தினருக்கு புலிகள் குறிவைப்பர்.

இலக்குகளை தமது வசதிக்கு ஏற்ப உருவாக்கிவிட்டு, தாக்குதல் நடத்தும் புலிகளின் உத்தியே இதுவாகும்.

இதேபோல படையினர் குடாநாட்டில் சைக்கிள்களில் ரோந்து செல்லத்தக்க சூழலை ஏற்படுத்திவிட்டு, சுலபமாக குறிவைக்கும் எண்ணமும் புலிகளுக்கு இருப்பதாக தெரிகிறது.

குடாநாட்டில் குறைந்த எண்ணிக்கையில் இயங்கும் தமது குழுக்களின் தாக்கும் திறனுக்கு ஏற்ற இலக்குகளை உருவாக்குவதே புலிகளது தந்திரம்.

குடாநாட்டில் முகாம்களையோ, காவலரண்களையோ பெரியளவில் உடனடியாக தாக்க முடியாது. எனவே படையினரை முகாம்களுக்கு வெளியே இழுத்து தாக்குவதே புலிகளின் நோக்கம்.

வாகன தொடரணிகள், ரோந்து அணிகள், பாதுகாவலுக்கு செல்லும் படையினர் ஆகியோர்மீதும், பொலிசார்மீதும்தான் தற்போது புலிகளது கவனம் குவிந்திருக்கிறது.

குடாநாட்டில் கெரில்லா நடவடிக்கைகள் மூலம் புலிகள் உடனடியாக எதிர்பார்க்கும் பலன்கள் மூன்று:

1. படையினரை உளவியல் ரீதியாக அச்சுறுத்துவது.

2. மக்களை பழிவாங்கும் நடவடிக்கைகளை படையினர் மேற்கொள்ளும்போது, படையினரின் சுயரூபத்தை மக்கள் உணர்ந்து கொள்ளச் செய்வது.

3. தாக்குதல்கள் மூலம் நம்பிக்கைகளை ஏற்படுத்தி புதிய உறுப்பினர்களை திரட்டுவது.

இந்த நோக்கங்கள் நிறைவேறியதும், அடுத்த கட்டமாக படையினரின் நடமாட்டங்களை முடக்கும் அளவுக்கு புலிகளது தாக்குதல்கள் விரிவாகும்.

சிறு குழுக்களாக படையினர் குடாநாட்டில் நடமாட முடியாத நிலை ஏற்படும். சிறு காவலரண்களும் விலக்கிக் கொள்ளப்பட வேண்டியிருக்கும். அல்லது காவலரண்களில் படையினரது எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டியிருக்கும்.

சுருக்கமாக சொல்வதானால், தற்போது படையினரின் காலடியில் குண்டுகளை கொண்டுபோய் புலிகள் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இக் குண்டுகள் வெடிக்கத் தொடங்கும் போது குடாநாட்டில் படையினர் பெரும் நெருக்கடிகளை சந்திக்க வேண்டியிருக்கும்.

குடாநாட்டில் உள்ள தமிழ்க் கட்சிகளது நிலையும் கவலைக்கிடமாகப் போகின்றது. ஆரம்பத்தில் தமிழ்க் கட்சிகள் சிலவற்றுக்கு யாழ் குடாநாட்டில் மக்களிடம் ஓரளவு அனுதாபம் இருந்தது. தற்போது அந்த அனுதாபமும் காணாமல் போய்விட்டது.

மீனுக்கு தலையும், பாம்புக்கு வாலும் காண்பிப்பது போல, தமிழ் மக்களுக்கு அறிக்கைகளையும், ஆட்சியாளருக்கு முன் பணிவையும் காண்பிக்கும் கட்சிகள் என்றே குடாநாட்டு மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.



ஷெல்களை ஏவிக்கொண்டிருக்கும் பீரங்கிப் படையணி

இதனால் தமிழ்க் கட்சிகள்மீது புலிகள் தாக்குதல் நடத்தும்போது முன்பிருந்த அனுதாபம்கூட இனிமேல் இருக்காது.

குடாநாட்டில் புலிகளது செயற்பாடுகள் விரிவாகி வருவதால், தமிழ்க் கட்சிகளது எதிர்காலத் தேர்தல் கனவுகளுக்கும் ஆபத்துக் காத்திருக்கிறது.

தேர்தல் பிரசாரத்திற்கு செல்லும் பிரமுகர்களை வரவேற்க கரும்புலிகள் இம்முறை காத்திருக்கக் கூடும்.

எப்படியோ, யாழ் குடாநாட்டிலும் முடிவுகளை தீர்மானிக்கும் பாத்திரம் மறுபடி புலிகளின் கைகளுக்கு மாறிக் கொண்டிருக்கிறது.

★★

**செ**ன்றமுறை மணலாறு முதல் பள்ளமடு வரையான தரைத் தொடுப்பு திட்டம் பற்றி விபரித்திருந்தோம்.

நமது ஊகங்களை மெய்ப்பிக்கும் விதமான நகர்வு கள் மணலாற்றுப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மணலாற்று படைகளது நகர்வுகளை எதிர்பார்த்து புலிகளது அணிகள் அங்கு தயார் நிலையில் உள்ளன என்று கூறியிருந்தோம் அல்லவா.

12.07.99 அன்று கொக்கிளாய் பகுதியில் நகர்வு முயற்சியில் ஈடுபட்ட படையினரை புலிகளது பீரங்கி அணியினர் எதிர்கொண்டனர்.

நகரும் படையணிகளை நோக்கி புலிகள் ஏவிய மோட்டார் ஷெல்கள் படையினரது நகர்வை முறியடித்துள்ளன.

தம்மில் ஏழு படையினர் பலியானதாகவும், பலர் காயமடைந்ததாகவும் படையினர் கூறியுள்ளனர்.

ஒப்புக்கொள்ளப்பட்டதே இந்தத் தொகை என்றால், மோட்டார் தாக்குதல் பலமாக நடந்துள்ளது என்றே அர்த்தம்.

புலிகள் தரப்பில் இழப்பில்லை. தமது தரப்புக்கு இழப்பின்றி படையினருக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளனர். இதனை புலிகளின் பாணியில் சொல்வது என்றால் 'சிக்கனத் தாக்குதல்' என்று கூறலாம்.

தமது தரப்பு இழப்பு இன்றி எதிர்த்தரப்புக்கு பலத்த இழப்பை ஏற்படுத்தும் தாக்குதலை, குறிப்பாக பீரங்கிப் படையணியின் தாக்குதலையே சிக்கனத் தாக்குதல் என்று புலிகள் குறிப்பிடுகின்றனர்.

மணலாற்றில் இருந்து ஒட்டிசுட்டான் வரையான தரைத் தொடுப்பு நடக்கலாம் என்று புலியணிகள் உஷாராக உள்ளன.


தாம் தரைத்தொடுப்புக்கு நகருவதற்கு முன்பாக, மணலாற்று முகாம் புலிகளால் குறி வைக்கப்படலாம் என்றும் படையினர் கருதுகின்றனர்.

இதனால்தான் மணலாற்றுப் பகுதி முன்னரங்க அரண்களுக்கு உதவியாகவும், அப்பகுதிகளில் புலிகளது பலத்தை ஆழம் பார்க்கும் முயற்சியாகவும் கொக்கிளாய் படையினர் நகர்ந்திருக்கலாம்.

இந்த நகர்வை புலிகள் தடுத்து நிறுத்தியதால் தமது பழைய நிலைக்கே படையினர் திரும்பிவிட்டனர்.

ஆனாலும் மணலாற்று பகுதியில் மேலும் மோதல்கள் இனிமேல்தான் தீவிரம் பெற உள்ளன.

முல்லைத்தீவில் இருந்து கிழக்கு மாகாணத்திற்கு தரை வழியாகச் செல்லும் புலிகளுக்கும், மணலாற்றுப் படையினருக்கும் இடையேயும் அடிக்கடி மோதல்கள் நடந்து வருகின்றன.




புலிகள் செல்லும் பாதைகளை கண்டு பிடித்து பதுங்கியிருந்து படையினர் தாக்குதல் நீட்த்தியதும் உண்டு.

◆◆◆

**ஆ**னால் முல்லைத்தீவுக்கும் திருமலைக்கும் இடையிலான தரைவழித் தொடர்பை துண்டிக்கும் முயற்சி தொடர்ந்து தோல்வியையே கண்டு வருகிறது.

வன்னிக்கு உணவு அனுப்ப வேண்டுமானால் மாங்குளம் பாதையை திறக்குமாறு படையினர் கோரியுள்ளனர்.

நாட்டின் ஒரு பகுதிக்கு எப்படி, எந்தப் பாதையால் உணவு அனுப்பப்படவேண்டும் என்பதையும் படையினரே தீர்மானிக்கின்றனர்.

அரசாங்கமோ, அரச சிவில் அதிகாரிகளோ இதில் முடிவு எதனையும் எடுக்கவில்லை.

வடக்கு-கிழக்கில் முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் சந்திரிக்கா அரசினால் படையினருக்கே வழங்கப்பட்டுள்ளது.

மாங்குளம் பாதையை திறந்தால்தான் உணவு அனுப்பமுடியும் என்று படையினர் கூறியுள்ளனர்.

சண்டை மூலம் திறக்க முடியாத பாதையை உணவுப் பொருட்களை ஆயுதமாக பயன்படுத்தி திறக்கும் முயற்சியே இது.

'உன் மக்களுக்கு உணவு தேவையா? நீ பாதையைத் திற' என்று புலிகளிடம் சொல்லாமல் சொல்லுகிறார்கள்.

படையினரின் நடவடிக்கை காரணமாகவே வன்னிக்கான தரைப்பாதைகள் அடிக்கடி மாற்றப்பட்டன. அடிக்கடி மூடப்பட்டன.

புலிகளை பயங்கரவாதிகள் என்று அரசாங்கம் கூறுகிறது. பின்னர் அதே புலிகளிடம் பாதையைத் திறக்குமாறு கோருகிறது. புலிகள் பயங்கரவாதிகளாக இருந்தால் மக்களுக்காக விட்டுக் கொடுப்பார்கள் என்று அரசும், படைகளும் எப்படி நம்புகின்றன?

மக்களிடம் பிரதி நிதிகளிடம் விடுக்கப்படும் கோரிக்கை போன்றதே மாங்குளம் பாதை தொடர்பாக படையினர் புலிகளிடம் விடுத்துள்ள கோரிக்கை.

இராணுவ ரீதியில் தமக்கு சில பாதகங்கள் உள்ள போதும், மாங்குளம் பாதையைத் திறக்க புலிகள் உடன்பட்டனர்.

அதன்பின்னரும் புலிகளை இராணுவ ரீதியில் மேலும் பாதிக்கக்கூடிய நிபந்தனையை விதித் தது படைத்தரப்பு.

மாங்குளம் சந்தியில் இருந்து மேலும் நான்கு கிலோமீட்டருக்கு அப்பாலேயே புலிகளது நிலைகள் இருக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தனர்.

எவ்வகையிலும் படையினர் தாக்கப்படாவிட்டால்தான் வன்னி மக்களுக்கு உணவு என்பதுதான் இதன் அர்த்தம்.

வன்னி மக்களும் இந்த நாட்டு குடிமக்கள் என்றால், படையினர் தமது உயிரைப் பணயம் வைத்தாவது உணவு அனுப்பியாக வேண்டும்.

புலிகள் பயங்கரவாதிகள். அவர்கள் தடுத்தாலும் நாம் நமது மக்களுக்கு உணவு அனுப்புவோம் என்று படையினர் முன் நின்றிருக்க வேண்டும்.

ஆனால், உணவு அனுப்பவேண்டுமானால் தம்மீது ஒரு துரும்பு கூட விழக் கூடாது. தாம் புதிதாக கைப்பற்றிய பகுதிகளை பயன்படுத்த முடியாது. வன்னியில் மக்கள் பட்டினி கிடந்தாலும் எமது நிபந்தனைகளுக்கு புலிகள் உடன்பட்டால்தான் உணவு அனுப்புவோம் என்றுதான் படையினர் பிடிவாதம் காட்டியுள்ளனர்.

உணவுப் பொருட்களும் போரில் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்படுவதற்கு இதனை விட வேறு உதாரணம் தேவையில்லை.

–★–

**பு**லிகளது பீரங்கிப் படையணியின் சிறப்பான செயற்பாடு வன்னிச் சமரில் முக்கியமான பாத்திரம் வகிக்கிறது.

பீரங்கிப் படையணியில் பெண்களும் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

'ஜயசிக் குறுய்' முறியடிப்பு சமரிலும், தற்போது ரணகோஷ முறியடிப்பு சமரிலும் முதுகெலும்பாக இருப்பது பீரங்கிப் படையணிதான்.

பீரங்கிப் படையணியின் தாக்குதல்களுக்கு மோட்டார்களே பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

ஆட்டிலெறிகள் எப்போதாவது ஒரு முறைதான் பயன்படுத்தப்படுகின்றன. ரணகோஷ படை நடவடிக்கைக்கு எதிராக இதுவரை ஆட்டிலெறியை புலிகள் பயன்படுத்தவில்லை.

மோட்டார்களை விட ஆட்டிலெறிகளை பயன்படுத்துவதற்கு இரண்டு காரணங்கள் விசேஷமானவை.

1. நீண்ட தூரத்தை குறிவைத்து தாக்கலாம்.

2. சேதம் அதிகமாக இருக்கும்.

ஆனால் ரணகோச மற்றும் ஜயசிக் குறுய் சமர்களில் புலிகள் படையினரை அருகில் நின்று எதிர்கொண்டனர். நெருங்கி நின்று தாக்கினார்கள். எனவே மோட்டார்களே போதுமானதாக இருந்தன.

எல்லாவற்றுக்கும் ஆட்டிலெறியை பயன்படுத்தினால் ஆட்டிலெறிக்கான ஷெல்களை வாங்கும் சக்தி புலிகளிடம் இல்லை.

புலிகளது பீரங்கிப் படையணி திறமையாக செயற்படுவதால் மோட்டார் தாக்குதல்கள் மூலமே படையினரை தடுத்து நிறுத்த முடிகிறது.

மோட்டார்களுடன் நகரும் பீரங்கிப் படையணி தமக்கு வசதியான இடத்தில் நிலை எடுத்து, நீண்ட வரிசையாக மோட்டார்களை நிறுத்துகிறது.

பின்னர் ஒரே நேரத்தில் ஷெல்களை போடுகிறார்கள். அதனால் ஒரே நேரத்தில் பல திசைகளில் இருந்து படைகளை நோக்கி ஷெல்கள் பறந்து செல்கின்றன.

ஆட்டிலெறியால் இவ்வாறு தாக்க முடியாது. ஒவ்வொரு ஷெல்களாக வீசும்போது அதுவரும் திசையறிந்து படையினர் பதுங்கு நிலை எடுத்துக்கொள்வர்.

ஆனால் பல மோட்டார்கள் ஒரே நேரத்தில் பல கோணங்களில் ஷெல்களை ஏவும் போது நிலை எடுப்பதோ, பாதுகாப்பாக முன்நோக்கி நகர்வதோ கடினம்.

வன்னிச் சமர் முனையில் சகல திசைகளிலும் பீரங்கிப் படையணிகள் தற்போது நிலை நிறுத்தப்பட்டுள்ளன. படையினருக்கு பெரும் சவால் இதுதான். ○



## அதிரடி அய்யாத்துரை



***கொழும்பில் ஒரு*** விருந்து நிகழ்ச்சியில் சீருடை உயரதிகாரியுடன் அவரது நண்பர் ஒருவர் அளவளாவினாராம். "ஒவ்வொரு முறையும் சண்டை பிடிக்கிறியள். இன்னமும் ஒரு முடிவையும் காணவில்லையே?!" என்று கேட்டாராம் நண்பர். அதற்கு சீருடை உயரதிகாரி சொன்னாராம், "அதுதான் எனக்கும் புரியவில்லை. நாங்கள் அவர்களிடம் இருந்தே நிறைய படிக்க வேண்டியிருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் அவர்களிடம் படித்ததைத்தான் திரும்பப் பயன்படுத்தியிருக்கிறோம்!" என்று கூறினாராம்.

***யாழ் குடாநாட்டில்*** கண்ணிவெடி ஆராயச் சென்ற நாய்களுக்கு செம மரியாதை! அவை குளிப்பதுகூட செய்தியாக வருகிறது என்றால் பார்த்துக்கொள்ளுங்கோ! அரசியல் நாயகர்கள் யாரும் யாழில் இல்லை என்பதால், நாய்கள்தான் இப்போது நாயகர்கள்!

***ஜனாதிபதிப் பதவியை*** முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்று திட்டம் சமர்ப்பித்த தமிழ்க் கட்சிகள் இப்போது பல்டி அடிக்கினம். அம்மையார் பதவியை விரும்புவதால் அதற்கு மாறாக கருத்துச் சொல்ல நா எழுமோ? ஈழக் கோரிக்கையை மட்டுமல்ல, தாங்கள் முன்வைத்த எந்தக் கோரிக்கையையும் தமிழ்க் கட்சிகள் கைவிடாமல் இருப்பதே கிடையாது!

***வெகுஜன சபையில்*** ஆளும் தரப்பில் கிழக்கு தனித்துவத் தலைவரும், போக்குவரத்துக்கு பொறுப்பானவரும் அருகருகே அமர்வதுதான் வழக்கம். அண்மையில் நடைபெற்ற 'அவசரகால' வாக்கெடுப்பில் கிழக்கின் தனித்துவத் தலைவர் வேறு ஆசனத்தில் போய் அமர்ந்து கொண்டாராம். அருகே இருக்கக்கூட முடியாதளவுக்கு பனிப்போர் தீப்போர் ஆகிவிட்டதாக்கும்!

***கழக மாணிக்கம்*** நாட்டில் இல்லை என்றதும் பல கதைகள் உலாவவிடப்பட்டுள்ளன. அவரது போட்டி இயக்கங்களைவிட, உள்ளிருந்தே பல தகவல்கள் துணிந்து கூறப்படுகிறதாம். 'திரும்ப வரமாட்டார்' என்றும் பத்திரிகையாளர்களுக்கு செப்பப்படுகிறதாம். ஆனால் அவர் வருவார் என்பது அய்யாத்துரைக்குக் கிடைத்த தகவல்.

***வடக்கு-கிழக்கு*** முன்னாள் அதிகாரக் கட்சியின் செயலாளர் முன்னாள் முதல்வரைப் பற்றி பத்திரிகையாளர்களிடம் கிண்டலாக பேசத் தொடங்கியுள்ளாராம். பெரிய தேர்தலில் முன்னாள் முதல்வர் சக்தியானவர் பக்கம் நின்றால், செயலாளர் அதற்கு மாறாக நிற்பாராம்.

***கோவணத்தோடு மட்டும்தான்*** மீன்பிடிக்கச் செல்ல வேண்டும் என்று சீருடைத்தரப்பு உத்தரவு போட்ட பின்னரும் தமிழ்க் கட்சிகள் எத்தனை பொறுமையாக இருந்திருக்கினம்?! அன்றாடப் பிரச்சனையைத் தீர்க்க பாடுபடுவதாக சொல்லித்தான் தேர்தலில் நின்றவை! ஒருவேளை கோவணமும் உருவப்பட்ட பிறகுதான் கிளர்ந்தெழுவினமோ?

***பச்சை அணிக்குள்*** கோஷ்டி மோதல் நடந்தால் நீல அணிக்குக் கொண்டாட்டம்தானே? பச்சைத் தலைவருக்கு எதிராக 'கரு'வை தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்க முயற்சி நடக்குதாம். ஜனாதிபதித் தேர்தலில் 'கரு' போட்டியிடுவார் என்று கதை கட்டுவதும் நீல அணியினர்தானாம். ஆனாலும் பச்சை அணிக்குள்ளும் கசமுசாக்கள் இருக்கத்தான் செய்யுது.

***பிரதி அதிகாரப்*** பதவிகள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த போது தமிழ்க் கட்சிகளைச் சந்திப்பதை சக்தியானவர் தவிர்த்து விட்டாராம். இரண்டு தமிழ்க் கட்சிகளுக்கு முன்னரே வழங்கப்பட்ட சந்திப்புக்கான நேரம் இரத்துச் செய்யப்பட்டதாம். சந்திப்பின்போது தங்களுக்கும் ஒன்று தருமாறு கேட்டார்களேயானால் தர்மசங்கடமாகிவிடுமே என்றுதான் சந்திப்பு தவிர்க்கப்பட்டதாம். 'டமில்' கட்சிகளுக்கு எப்பதவியும் சக்தியானவரால் தரப்படமாட்டாது' என்று 'முரசு' உறுதியாக அடித்துச் சொன்னது தெரியும்தானே!

***இலங்கைக் கிரிக்கெட்*** அணியின் முன்னாள் தலைவர், உப தலைவர் பற்றி அரச பத்திரிகைகளே எதிர்ப்பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன. இலங்கை அணியின் முன்னாள் பயிற்சியாளர் ஒருவர் கூறியதைத் தேடிப்பிடித்து வெளியிட்டுள்ளது ஏரிக்கரை ஆங்கிலப் பத்திரிகை. "அணியின் தலைவரும், உப தலைவரும் சக வீரர்களை தங்கள் வேலையாட்களாக நடத்தினார்கள்! அதனால்தான் சக வீரர்கள் தளர்ந்து போனார்கள்!" என்று அந்தப் பயிற்சியாளர் கூறியிருக்கிறாராம்.

**இவ்வாரப் பொன்மொழி:**

**"கொடுப்பதற்கு சர்க்கரை இல்லையானால் வாயால் இனிப்பாகப் பேசுங்க்ள்!"**

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது




பதினாறாம் திகதி காலை 6.30 மணியளவில் படையணிகள் கவசவாகனங்களது உதவியுடன் முன்நோக்கி நகர ஆரம்பித்தன.

பத்துக்கும் மேற்பட்ட கவச வாகனங்களுடன் படையினர் நகர்ந்தனர்.

கடற்கரை எங்கும் பரவலாக நின்ற தமது அணிகளை புலிகள் ஒரே இடத்திற்கு தருவித்து ஒன்று குவித்திருந்தனர்.

இரவோடு இரவாக தமது அணிகளை ஒன்று திரட்டிய புலிகள், அரண்களையும் அமைத்து மோதலுக்கு தயாராக நின்றனர்.

அதனால் அதிகாலையில் முன்னேறிய படைகளுக்கு எதிராக புலிகள் பலத்த தாக்குதலை தொடுத்தனர்.

அத்தாக்குதலில் பவள் கவச வாகனம் ஒன்று சேதமானது. பவள் தாக்கப்பட்டதால் படையினரின் முன்னேற்றம் தடுக்கப்பட்டது.

மறுபடி தமது அணிகளை சீரமைத்த படையினர் பிற்பகல் 2.30 மணிக்கு மறுபடி நகர்வு முயற்சியில் ஈடுபடத் தொடங்கினார்கள்.

அன்று மாலைவரை இரு தரப்புக்கும் இடையே கடும் மோதல் மூண்டது. மேலும் நான்கு கவச வாகனங்கள் புலிகளால் சேதமாக்கப்பட்டன.

அன்றைய முழு நாளும் நடைபெற்ற தரைநகர்வு முயற்சியில் இரண்டு பவள், இரண்டு சலாடின் ஆகிய நான்கு கவச வாகனங்களை படையினர் இழந்தனர்.

அதன்பின்னர் 17ம் திகதியும் 18ம் திகதியும் சண்டை தீவிரமாகத் தொடர்ந்தது.

ஆனையிறவுத் தளத்தை நோக்கி முன்னேறும் முனைப்பு பலமாக இருந்த போதும் நாள் ஒன்றுக்கு சில கிலோமீட்டர் தூரமே படையினரால் முன்னேற முடிந்தது.

19ம் திகதி நடைபெற்ற சண்டையின் போது தளபதி தமிழ்ச் செல்வன் காயமடைந்தார்.

இதனையடுத்து தளபதி பால்ராஜ் வெற்றிலைக்கேணி புல்லாவெளி பகுதிச் சண்டைகளுக்கு தலைமை ஏற்றார்.

சண்டையில் பலியான லெப்டினன்ட் கேணல் குட்டியின் இடத்துக்கு தளபதி சுரேஸ் நியமிக்கப்பட்டிருந்தார். மகளிர் படையணிக்கு ராதா பொறுப்பு ஏற்றார்.

## முற்றுகை

தரையிறக்கப்பட்ட படைகளை எதிர்த்து சண்டை நடந்து கொண்டிருந்தபோது, ஆனையிறவுத் தளம் மீதான தாக்குதல் நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் படையினர் வெளியே வரமுடியாதளவுக்கு புலிகள் தளத்தை முற்றுகையிட்டிருந்தனர்.

20ம் திகதி பிற்பகல் 9 மணிக்கு மறுபடி தரைச் சண்டை உக்கிரமாக ஆரம்பித்தது.

புல்லாவெளிச் சந்தியை கைப்பற்றும் இலக்கோடு படைகள் முன்னேற ஆரம்பித்தன. கவச வாகன எண்ணிக்கை தினமும் அதிகரித்துக் கொண்டிருந்தது.

புலிகளின் எதிர்ப்பு கடுமையாக இருந்தமையால், கவச வாகனங்களையே படையினர் தமது நகர்வின் முதுகெலும்பாக பயன்படுத்தினார்கள்.

20ம் திகதி நடைபெற்ற சண்டையில் நூறு கவசவாகனங்கள் வரை களம் இறங்கின.

பெரும் மரபுப் படையொன்று நகர்வது எப்படியிருக்கும் என்பதற்கு அந்த நகர்வு எடுத்துக்காட்டாக இருந்தது.

யானைகள் அசைந்து நடப்பது போல, டாங்கிகள் மெல்ல மெல்ல நகர்ந்தன. குண்டுகளைப் பொழிந்தன.

புலிகளிடம் மரபுப் படைக்குரிய ஆயுத தளபாட வசதிகள் இருக்கவில்லை. மோட்டார்களும் ஓரளவே பயன்பட்டன. திறந்த வெளியில் கவசவாகனங்கள் முன்னேறுவதை தடுக்க புலிகளிடம் போதிய ஆயுத தளபாட வசதிகள் இருக்கவில்லை.

விமானப் படையினர் குண்டுகளை பொழிந்து, புலிகளின் அரண்களை தாக்குவதில் ஈடுபட்டனர்.

விமானப்படை உதவியும் கிடைத்தமையால் படையினர் நகர்ந்து புல்லாவெளிவரை முன்னேறினார்கள்.

14ம் திகதி வெற்றிலைக்கேணியில் தரையிறங்கிய படைகள் ஆறுநாட்கள் சண்டையிட்டு நான்கு கிலோமீட்டர் தூரத்தைக் கடந்து புல்லாவெளியை சென்றடைந்தன.

மிகவும் நிதானமாகவே படையினர் முன்னேற வேண்டியிருந்தது. அவசரப்பட்டு நகர்வதும் புலிகளது பொறிக்குள் தலையை கொடுப்பதாக மாறிவிடும் என்று படையினர் நினைத்தனர்.

படைத்தரப்பு புல்லாவெளியை, அடைந்ததும் புலிகள் படைத்தரப்பின் பலம், பலவீனத்தை கணிப்பிட்டனர்.

வெற்றிலைக்கேணியில் இருந்து புல்லாவெளிவரை நாலு கிலோ மீட்டர் தூரம் சங்கிலித் தொடராக நீண்டுள்ள படையணியை இடையே புகுந்து ஊடறுக்க புலிகள் திட்டமிட்டனர்.

துரிதமாக புலனாய்வுத் தகவல்கள் திரட்டப்பட்டன. எங்கு உடைத்துப் புகுவது? என்று தீர்மானம் செய்யப்பட்டுவிட்டது.

ஊடறுப்பு தாக்குதலை நடத்தும் அணிக்கு புலிகளது மூத்த தளபதி சொர்ணம் தலைமை தாங்கினார்.

21ம் திகதி மாலை ஐந்து மணிக்கு முள்ளியானில் புலிகளின் அணிகள் ஊடறுப்பு நடத்தின.

முன்னரங்க முனையில் தாக்குதலை எதிர்பார்த்த படையினருக்கு தமது பின்னரங்கில் ஊடறுப்பு நடந்தது அதிர்ச்சியாக அமைந்தது.

'தகர்த்தெறிந்து உள் நுழைதல்' முறையிலான அதிரடித் தாக்குதலை புலியணிகள் மிகவும் திறம்பட மேற்கொண்டன.

1. உப்பளப் பகுதி முகாம்
2. ஆனையிறவுத் தடைமுகாம்
3. பழைய சந்தைப் பாதை
4. நித்தியவெட்டை
5. சங்கத்தான் வயல்
6. வாடியடிச் சந்தி
7. புல்லாவெளி
8. கட்டைக் காடு
9. இயக்கச்சி
10. முள்ளியான்
11. வெற்றிலைக்கேணி
12. முகாவில்

புலியணிகள் தாக்குதல் நடத்திய பகுதியில் இராணுவ சங்கிலி தொடர் தகர்ந்தது.

வெற்றலைக்கேணி படையினருக்கும், புல்லாவெளி படையினருக்கும் இடையேயான தொடர்பு முள்ளியானில் உடைந்தது.

இத் தாக்குதலில் 90 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 31 சடலங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. சிப்பாய் ஒருவர் புலிகளால் கைது செய்யப்பட்டார்.

ஆயுதங்கள், வெடிமருந்துகள் என்பவையும் கைப்பற்றப்பட்டன. இத் தாக்குதலால் ஏற்பட்ட உடைவை சீர்செய்ய படையினருக்கு அவகாசம் தேவைப்பட்டது.

படையினரின் நகர்வு முயற்சி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. காயமடைந்த படையினர் உட்பட பழைய அணிகளை ஓய்வு கொடுத்து திருப்பி அனுப்பிவிட்டு, புதிய அணிகளை களத்தில் இறக்கினார்கள்.

டென்சில் கொப்பேகடுவ நேரில் நின்று படையினரின் நகர்வு முயற்சிகளை வழி நடத்தினார்.


படையினருக்கு போதிய ஓய்வு கொடுத்து, அடிக்கடி அணிகளை மாற்றி களத்தில் இறக்கும் பணிகளில் டென்சில் கொப்பேகடுவ சிரத்தை காட்டினார்.

டென்சில் கொப்பேகடுவ களத்தில் நிற்கும் படங்கள் தென்னிலங்கை சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளை அலங்கரித்தன.

23ம் திகதி முதல் 27ம் திகதிவரை படையினர் பெரும் நகர்வு முயற்சி எதிலும் ஈடுபடவில்லை.

புலிகள் மற்றுமொரு ஊடறுப்பை நடத்த முடியாதளவுக்கு தமது நிலைகளைப் பலப்படுத்தியபடியே முன்னேறுவது என்று படையினர் முடிவு செய்திருந்தனர்.

அதனால் மேலும் படையினர் கொண்டு சென்று தரையிறக்கப்பட்டனர். 24 மணிநேரமும் வெற்றிலைக்கேணி கடற்பரப்பு இராணுவப் படகுகளால் நிறைந்து காணப்பட்டது.






## தாக்குதல்

14ம் திகதி படையினர் தரையிறக்கப்பட்ட பின்னர் 27ம் திகதிவரை ஆனையிறவு தளம்மீது பெரும் தாக்குதல் எதனையும் புலிகள் மேற்கொள்ளவில்லை.

27ம் திகதி தாக்குதல் ஒன்றுக்கு திட்டமிடப்பட்டது.

11ம் திகதி தாக்குதல் நடத்தி கைப்பற்ற முடியாமல் போன தடை முகாம் மீதே தாக்குதல் தொடுக்கப்பட்டது.

இத்தாக்குதலுக்கு பொறுப்பாக புலிகளது தீவகப் பொறுப்பாளர் கிளி நியமிக்கப்பட்டிருந்தார். மகளிர் அணிக்கு தளபதி விதுஷா தலைமை தாங்கினார்.

11ம் திகதி தாக்குதல் நடத்தி தோல்வி கண்ட புலிகள், தடை முகாமை நோக்கி நிலத்திற்கு கீழாக நகர்ந்து செல்ல வசதியாக மூன்று அடி ஆழமான அகழிகளை அமைத்திருந்தனர்.

தாக்குதல் தொடங்கியதும் படையினரின் துப்பாக்கி ரவைகளை தவிர்த்தபடி படையினரின் அரண்களை நோக்கி முன்னேறவே இந்த அகழிகள் அமைக்கப்பட்டன.

கடந்த முறை புல்டோசர் புதைந்தது போல இம்முறையும் புதையாது இருப்பதற்காக புல்டோசர் போகும் பாதையை கவனமாக ஆராய்ந்தனர்.

புல்டோசரை ஓட்டிச் செல்ல லெப்டினன்ட் கேணல் சாரா தெரிவு செய்யப்பட்டார். சாரா தான் யாழ்ப்பாணம் கோட்டை முகாம் தாக்குதலில் பாரம் தூக்கியை ஓட்டிச் சென்று மதிலரணுக்கு கீழே நிறுத்தி,பாரம் தூக்கியின் உதவியுடன் கோட்டை மதில்மீது புலிகளை இறக்கியவர்.

புல்டோசர் செலுத்துவதிலும் சாரா நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார்.

27ம் திகதி இரவு ஆறு மணியளவில் தடை முகாம்மீதான தாக்குதலை புலிகள் ஆரம்பித்தனர்.


அகழிகள் ஊடாக புல்டோசர் உதவியுடன் புலிகள் படையினரின் அரண்களை குறிவைத்து முன்னேறினார்கள்.

படையினரின் அரண்களுக்கு முன்னால் குவித்து வைத்திருந்த கம்பிச் சுருள்களையும் தாண்டி தாக்குதல் அணிகள் சென்றுவிட்டன.

தடை முகாமின் முன்னரங்க காவல் அரண்கள் சில புலிகளால் கைப்பற்றப்பட்டு விட்டன.

பல தடைகளைத் தாண்டி புல்டோசர்களும் காவலரண்களை நெருங்கிவிட்டது.





புலிகளது பசிலான் 2000 ரக மோட்டாரும் அதற்குரிய ஷெல்லும்.

# புல்டோசர் நிறுத்தமும் திசைமாறிய சண்டையும்

படையினர் புல்டோசரை கண்டதும் விழிப்பாகி குறிவைத்துவிட்டனர். புல்டோசரை தப்பவிட்டால் தங்கள் கதி என்னாகும் என்பது அவர்களுக்கு தெரியும்.

தமது காவலரணில் இருந்து படையினர் ஏவிய பீரங்கிக் குண்டு தன் பணியை செவ்வனே செய்தது.

புல்டோசரில் விழுந்து வெடித்த பீரங்கிக் குண்டு அதனை தடுத்து நிறுத்தியது. உள்ளிருந்த லெப்டினன்ட் கேணல் சாராவும், மேஜர் சுகதாசும் பலியானார்கள்.

புல்டோசர் நிறுத்தப்பட்டுவிட்டதால் சண்டையின் போக்கே மாறியது.

முதல் வரிசைக் காவலரண்களுக்குள் புகுந்த புலிகளுக்கு உதவி கிடைப்பது தாமதமானது.

புல்டோசரை தாக்கிவிட்ட படையினர், உள் நுழைந்த புலிகள்மீது தமது முழுக் கவனத்தையும் திருப்பினார்கள்.

இதனால் உள் நுழைந்த புலியணிகள் பாரிய இழப்பை சந்தித்தன.

தரையிறக்கப்பட்ட படையினர் முன் னேறி வரும் செய்தியும் ஆனையிறவு தளத்தில் இருந்த படையினருக்கு உற்சாகம் தந்திருந் தது.

எனவே உக்கிரமாக சண்டையில் ஈடுபட்டதோடு, வெடிமருந்துகளையும் தாராளமாக செலவிட்டனர். சரமாரியாக சுட்டுத் தீர்த்தனர்.

வெளியே இருந்து உதவி எப்போது கிடைக்கும் என்பது தெரியாமல் இருந்தால் வெடிமருந்துகளை சிக்கனமாகவே பயன்படுத்துவார்கள்.

படையினரின் கைகள் மேலோங்கியதால் முதல் வரிசைக் காவலரணில் புகுந்த புலியணிகள் சண்டையை நிறுத்தித் திரும்பின.

இத் தாக்குதலில் 70 புலிகள் பலியாகினர். 100ற்கு மேற்பட்ட புலிகள் காயமடைந்தனர். படையினர் தரப்பில் மிகக் குறைவானோரே பலியாகினர்.

ஆகாய கடல் வெளிச் சமரில் ஆனையிறவுத் தளம் மீது நடத்தப்பட்ட இறுதித் தாக்குதல் இதுதான்.

இதன் பின்னர் தரையிறக்கப்பட்ட படைகளுடனான சண்டைகளே நடைபெற்றன.

27ம் திகதி தளம்மீது தாக்குதல் நடத்தியபின்னர் ஆனையிறவு தளத்தை கைப்பற்றும் எண்ணம் புலிகளுக்கு இருக்கவில்லை.

ஆனால் தளத்தை கைப்பற்ற கொடுக்கப்பட்ட பலிகளுக்கு ஈடாக, படையினர் தரப்புக்கு இழப்பை ஏற்படுத்தும் நோக்கமே மேலோங்கியிருந்தது.

அதனால் தரையிறக்கப்பட்டு முன்னேறும் படைகளுக்கு முடிந்தளவு சேதத்தை ஏற்படுத்தவும், தமது தரப்பு இழப்புக்களை குறைத்துக் கொள்ளவும் கூடிய சண்டைகளில் ஈடுபடத் தொடங்கினர்.

29ம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு படையினர் மறுபடி நகர்வு முயற்சியில் இறங்கினார்கள்.

புலிகளின் நிலைகளுக்குள் கவச வாகனங்கள் புகுந்துவிட்டன. அவை புகுந்த பின்னரும் புலிகள் மிக அருகில் நின்று படையினருடன் மோதினார்கள்.

தமது நிலைகளுக்குள் புகுந்த இரண்டு பவள் கவச வாகனங்களை புலிகள் நாசமாக்கினார்கள்.

எனினும் படையினரின் சண்டைப் பலமும், கவசவாகன தாக்குதல் பலமும் உக்கிரமாக இருந்ததால், புலிகள் சில கிலோமீட்டர் தூரம் பின்வாங்கினார்கள்.

## 30ம் திகதி

30ம் திகதி இரு முனைகள் ஊடாக நகர்வு ஒன்றை படையினர் மேற்கொண்டனர்.

வாடியடிச் சந்தியில் இருந்தும், ஆனையிறவு கடலேரிப் பக்கமாகவும், இரு முனைகளில் நகர முனைந்தனர்.

வாடியடிச் சந்தியை அடைந்துவிட்டால் அங்கிருந்து இயக்கச்சி ஊடாக ஆனையிறவு செல்வது சுலபம்.

எனவே வாடியடிச் சந்தியை பாதுகாக்க புலியணிகள் விரைந்தன. அங்கு செல்வதற்கு இடையே வெட்ட வெளியை கடந்தாக வேண்டும்.

வெட்ட வெளியைக் கடக்கும்போது விமானப் படை விமானங்கள் வந்துவிட்டால் குண்டுகள் இறைக்கப்படும். படையினரின் பீரங்கிக் குண்டுகளும் வெட்ட வெளியில் வந்து விழலாம்.

எனினும் எதனையும் பொருட்படுத்தாது வெட்ட வெளியூடாக புலியணிகள் வாடியடிச் சந்திக்கு விரைந்தன.

எதிர்பார்த்தது போலவே விமானங்கள் இரைச்சலுடன் வந்தன. குண்டுகளைப் பொழிந்தன.

வெட்ட வெளியில் பதுங்கி நிலை எடுப்பது எங்ஙனம்? அதனால் புலிகள் பலர் பலியானார்கள். பலர் காயமடைந்தனர்.

வாடியடிச்சந்தி போர் முனைக்கு தளபதி ஜெயம் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். பெண்கள் அணிக்கு ராதா தலைமை தாங்கினார்.

காயமடைந்த மற்றும் பலியான புலிகளது இடத்துக்கு 50 பேர் கொண்ட புதிய அணிகள் அவ்வப்போது விரைந்து கொண்டிருந்தன.

குறிப்பிட்ட அணிகள் ஒவ்வொன்றும் சண்டை முனைக்கு செல்ல முன்னரே ஐந்து-ஆறுபேர் இடைநடுவே பலியானார்கள்.

இதனால் ஆட்பற்றாக்குறை ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

அவ்வாறிருந்தும் வாடியடிச் சந்தியில் படையினரின் நகர்வை புலிகள் தடுத்து நிறுத்தினார்கள்.

ஆனால் கடலேரிப் பக்கமாக முன்னேறிய படையினர் சில நூறு யார் தூரம் முன்னேறினார்கள்.

தமது உதவிப்படைகள் தளத்தை அண்மிக்கும் தகவல் எட்டியதும் ஆனையிறவு தளப் படையினர் உற்சாகம் கொண்டனர்.

ஆனையிறவு தளத்தில் இருந்து எறிகணைத் தாக்குதல் ஆரம்பமானது.

இப்போது புலிகள் படைகளை மும்முனைகளில் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

(தொடர்ந்து வரும்)

# ஆளும் தரப்பு வியூகம்

# ஜனாதிபதித் தேர்தலில் குதிப்பாரா வரதர்?

## அலசுவது - இராஜதந்திரி

ஜனாதிபதித் தேர்தலுக்கான வியூகங்கள் திரைமறைவில் வகுக்கப்பட்டு வருகின்றன. ஆட்சியாளரின் எண்ணத்தை நாடிபிடித்தறிந்துள்ள ஐ.தே.கட்சியும் ஜனாதிபதித் தேர்தலை சந்திக்கத் தயாராகி வருகிறது.

இலங்கை அரசியல் வரலாற்றில் படுபயங்கரமான சர்வாதிகாரப் பதவி என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியினராலும், இன்றைய ஜனாதிபதி சந்திரிக்காவினாலும் வர்ணிக்கப்பட்டதே நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிப் பதவியாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. அமைப்புடன் சந்திரிக்கா குமாரதுங்காவுக்கு ஓர் உடன்பாடு ஏற்பட்டிருந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை ஒழித்துக்கட்டுவதாகவே அந்த உடன்பாடு அமைந்திருந்தது.

அதாவது கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிக்கா குமாரதுங்கா போட்டியிட்டது ஜனாதிபதிப் பதவியை ஒழித்துக் கட்டுவதற்காகவே தவிர, அதில் அமர்ந்து கொள்வதற்காக அல்ல என்பதே அன்று கூறப்பட்டதாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்களுக்கும், தமிழ்பேசும் மக்களுக்கும் இரண்டு பிரதான வாக்குறுதிகளை ஜனாதிபதி சந்திரிக்கா வழங்கியிருந்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி பதவியை ஒழித்துக்கட்டுவது என்பது சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்ட பிரதான வாக்குறுதியாகும்.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பது என்பது தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கப்பட்ட தலையாய வாக்குறுதியாகும்.


இந்த இரண்டு வாக்குறுதிகளுக்கு முற்றிலும் மாறான காட்சிகளையே சந்திரிக்கா அம்மையார் பதவிக்கு வந்த பின்னர் காணக்கூடியதாகவுள்ளது.

சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளைக்கூட காற்றில் பறக்கவிட்டுள்ள பொதுஜன முன்னணி, அவற்றை யுத்தக் கோஷங்கள் மூலம் மறக்கடிக்கவே முயற்சிக்கிறது.

நிறைவேற்று ஜனாதிபதி பதவி இருந்தால்தான் யுத்தத்தை திறம்பட நடத்தலாம் என்று நியாயம் கற்பிக்கப்படுகிறது.

அவ்வாறு கூறும்போது, ஜே.ஆர். மற்றும் பிரேமதாசா ஆகியோரும் யுத்தத்தை நடத்தினார்கள் என்பதையும், அக் கட்டத்தில்தான் ஜனாதிபதி பதவியை ஒழித்துக்கட்ட பொ.ஜ.முன்னணியினர் திடசங்கற்பம் பூண்டனர் என்பதையும் மறந்துவிடலாகாது.

ஜனாதிபதி பதவி இல்லாது போனாலும் யுத்தத்தை நடத்த முடியும். சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்தபோதும் அவசரகால சட்டத்தின்கீழ் தமிழ் மக்களுக்கு



வரதராஜப் பெருமாள்

எதிரான அடக்குமுறைகள் தங்கு தடையின்றி முடுக்கிவிடப்பட்டிருந்தன.

இன்று பாகிஸ்தானுடன் மோதும் இந்தியாவில் காபந்து பிரதமர்தான் பதவியில் இருக்கிறார். அவர் தலைமையில்தான் யுத்தம் நடந்து வருகிறது.

எனவே யுத்தத்தை திறம்பட நடத்துவதற்கு ஜனாதிபதி பதவியை பயன்படுத்துவதாக கூறுவது சிங்கள மக்களை அப்பட்டமாக ஏமாற்றுகின்ற விளக்கமேயாகும்.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாசா போன்றோர் ஜனாதிபதிப் பதவியை வசைபாடிவிட்டு அதில் அமர்ந்திருக்கவில்லை. அப்பதவி அவசியமானது என்றே கூறிவந்தனர். யுத்தத்தை நடத்துவதற்கான தேவையாக மட்டும் அதனைக் கூறாது, நாட்டின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு தேவையான ஆட்சிமுறை என்றே நியாயப்படுத்தி வந்திருந்தனர்.

ஆனால் இன்றைய பொ.ஜ.முன்னணியினர் மட்டுமே ஜனாதிபதி பதவி மோசமானது என்றும் கூறிவிட்டு, யுத்தத்தை நடத்துவதற்கு மட்டும் அவசியப்படுகிறது என்றொரு தவறான வியாக்கியானத்தையும் கூறி வருகின்றனர்.

எனவே, ஜே.ஆர். மற்றும் பிரேமதாசா ஆகியோரது நியாயப்படுத்தலைவிட, பொதுஜன முன்னணியின் விளக்கம் அரசியல் நேர்மையற்ற ஒன்றாகவே தென்படுகிறது.

அதுமட்டுமன்றி, இனப்பிரச்சனையையும், யுத்தத்தையும் தமது சொந்த அரசியல் நகர்வுகளுக்கு வாளாகவும், கேடயமாகவும் பயன்படுத்துவதில் மட்டுமே பொ.ஜ.முன்னணியும் குறியாக இருந்து வருகிறது என்பதும் புலனாகியுள்ளது.

ஆனால், ஜனாதிபதிப் பதவியின் அதிகாரம் என்பது இனப்பிரச்சனையைத் தீர்க்கவோ, யுத்த நடவடிக்கைகளுக்கோ பயன்பட்டதைவிட, சொந்த அரசியல் நலன்களுக்கே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

ஜே.ஆரும், பிரேமதாசாவும்கூட தமது சொந்த அரசியல் நலன்களுக்கே ஜனாதிபதி பதவியின் அதிகாரங்களை பயன்படுத்தி வந்தனர். நிறைவேற்று அதிகார பலத்தை காட்டி ஆட்சியையும், கட்சியையும் தமது பிடியில் வைத்திருந்தனர்.

அத்துலத் முதலி, காமினி திசநாயக்கா போன்றோர் கட்சிக்குள் சதி செய்தபோது, ஜனாதிபதி பதவிக்குரிய அதிகாரத்தை சகல முனைகளிலும் பயன்படுத்தியே தன் பிடியை தக்கவைத்துக்கொண்டார் பிரேமதாசா.

முன்னர்போல பாராளுமன்ற பிரதமராக பிரேமதாசா இருந்திருப்பாரேயானால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சபாநாயகர் உதவியுடன் கொண்டுவந்து சுலபமாக கவிழ்த்திருப்பார்கள். ஏனெனில் சபாநாயகர் முஹமட்டும் அத்துலத்முதலி குழுவினருக்கு சார்பாகவே இருந்தார்.

இதனாலும் ஜனாதிபதி பதவிமீது அத்துலத்முதலி குழுவினர் உட்பட அன்றைய எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் பாரிய வெறுப்புக் கொள்ள ஆரம்பித்தனர்.

ஆனால், ஜே.ஆருக்கும், பிரேமதாசாவுக்கும் உதவியதைவிட, பொ.ஜ.முன்னணி தலைவியான சந்திரிக்கா அம்மையாருக்கு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவி பெரும் உதவிகரமாக இருந்து வந்துள்ளது.

பாராளுமன்றத்தில் சிறுபான்மை பலமே உள்ளபோதும், ஜனாதிபதி பதவி கையில் இருப்பதால் ஆட்சி கவுழுமோ என்ற அச்சமே இல்லாது இருக்க முடிகிறது.

வழக்கமாக பாராளுமன்றத்தில் இவ்வாறான குறைந்த பலம் உள்ளபோது ஆளும் கட்சி எம்.பிகள் ஒவ்வொருவரையும் தலைமை அனுசரித்தே நடந்துகொள்ள வேண்டியிருக்கும். அதனால் எம்.பிகளை கட்டுப்படுத்துவதும் கடினமாக இருக்கும். தலைமை நினைப்பதையெல்லாம் அவர்கள் மூலமாக நிறைவேற்ற முடியாது போகும்.

கட்சித் தாவலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும் என்றாலும்கூட, திடீரென்று எதிர்க்கட்சியுடன் இணைந்து வாக்களித்துவிட்டார்களேயானால் எதுவும் செய்ய இயலாது. ஆட்சி கவிழ்ந்து போகும்.

ஆனால், ஜனாதிபதி பதவியில் தலைமை இருப்பதால், மேற்கண்ட சதி வேலைகளுக்கு ஆளும் தரப்பு எம்.பிகள் துணியமாட்டார்கள்.

ஏனெனில் பாராளுமன்றம் கலைந்தாலும்கூட அதிகாரம் ஜனாதிபதியிடமே இருக்கும். அடுத்த பாராளுமன்றத் தேர்தலை வெற்றிகரமாக நடத்தக்கூடியளவுக்கு அந்த அதிகாரத்தை பயன்படுத்தவும் இயலும்.

ஜனாதிபதியுடன் ஒத்துப்போகக்கூடிய பாராளுமன்றம் மறுபடி அமையாதுவிட்டால் அதனை ஆட்டம் காணச் செய்யும் சக்தி மிக்கவராகவும் ஜனாதிபதியே இருப்பார்.

எனவே, இத்தகைய பல காரணங்களால் ஜனாதிபதி சந்திரிக்காவின் அதிகாரத்துக்கு கட்சிக்குள் எவ்வித எதிர்ப்பும் எழவில்லை. பாராளுமன்றத்திலும் அதன் ஆயுளுக்கு அடிக்கடி ஆபத்துக்கள் தோன்றவில்லை.

தமிழ், முஸ்லிம் கட்சிகளும் ஜனாதிபதியின் தயவை நாடியே அரசியல் செய்வதால் அக் கட்சிகளது ஆதரவும் மாற்றமின்றித் தொடர்கிறது.

எனவே, நிறைவேற்று ஜனாதிபதி பதவி இல்லாதிருந்தால், இந்தியப் பிரதமர் வாஜ்பேய் சந்தித்த அனுபவங்களையே இங்கும் சந்திரிக்கா அம்மையார் சந்தித்திருப்பார். இங்கும் பாராளுமன்ற ஆட்சியே நிலவியிருக்குமானால், எப்போதோ கவிழக்கூடிய சூழலும் தோன்றியிருக்கும்.

தற்போதைய தொங்கு நாடாளுமன்றம் கடந்த ஐந்து வருடங்களாக ஈடாட்டம் இன்றி தாக்குப்பிடிப்பதற்கு காரணமாக இருப்பது ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரின் கையிலுள்ள அதிகார பலமேயாகும்.

அதுமட்டுமன்றி மக்களின் நாடிபிடித்து அறிந்து எத் தேர்தலை முதலில் நடத்துவது என்பதை தீர்மானிப்பவராகவும் ஜனாதிபதியே விளங்குகிறார்.

சமீபத்திய மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் பொதுஜன முன்னணியின் வாக்கு வங்கிகளில் சரிவு ஏற்பட்டு வருவதை துல்லியமாக காட்டியிருக்கின்றன. மேலோட்டமாக நோக்கும்போது வெற்றியாக தெரிந்தாலும், வாக்கு வங்கியில் பலத்த சரிவு ஏற்பட்டிருக்கிறது.

எனவே இச் சரிவு மேலும் அதிகமாகுவதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடிப்பதற்கே அம்மையார் திட்டம் வகுத்துள்ளார்.

அதன்பின்னர் பாராளுமன்றத் தேர்தலில் தற்போதுள்ளது போன்ற தொங்கு நிலையே மறுபடி ஏற்பட்டாலும், ஜனாதிபதி பதவி மூலம் சமாளித்துக் கொள்ளலாம் என்பதே அம்மையாரின் தேர்தல் வியூகமாக அமைந்திருக்கிறது.

எனவே, தனது பதவி, தன்கையில் உள்ள அதிகாரம் என்ற வட்டங்களுக்குள் நின்றே சந்திரிக்கா அம்மையாரும் வியூகங்களை வகுத்திருக்கிறார். இந்த வியூக வகுப்புக்கும் ஜனாதிபதி பதவிக்குரிய அதிகாரமே துணையாக உள்ளது.

மறுபடியும் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிக்கா அம்மையாரே வெற்றி பெறத்தக்க நிலை இருப்பதாக பொது ஜன முன்னணி திடமாக நம்புகிறது.

அவ்வாறான நம்பிக்கை இல்லையானால் ஜனாதிபதி ஆட்சி முறைக்கு முடிவு கட்ட முன்வந்திருப்பார்கள். மறுபடியும் அதிகாரம் தனது கையிலேயே வரவிருப்பதால்தான் சந்திரிக்கா அம்மையாரும் ஜனாதிபதி ஆட்சிமுறையை மாற்றுவதற்கு முன்வரவில்லை.

ஐ.தே.கட்சியினர் தற்போது நிறைவேற்று அதிகாரத்துக்கு எதிராக பேசி வருகின்றனர். ஜனாதிபதி ஆட்சி முறையில் சில அதிகாரங்களை குறைப்பதற்கு ஆதரவு தரத் தயாராக உள்ளதாக அறிவித்தும் உள்ளனர். ஆனால் இதனை காதில் விழாதது போல அடுத்த தேர்தலுக்கும் தயாராகிவிட்டனர் ஆட்சியாளர்கள்.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியைப் பெறுவதற்கு ஆளும் தரப்பினரும், எதிரணியினரும் ஏட்டிக்கு போட்டியான வியூகங்களை வகுக்கத் தொடங்கியுள்ளனர்.

தமிழ் பேசும் வாக்காளர்கள் இம்முறை முன்புபோல தமக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்பது பொ.ஜ.முன்னணியினருக்கு நன்கு தெரிந்ததேயாகும். அவ்வாறிருந்தும் தமிழ்க் கட்சிகளின் துணையுடன் ஒரு குறிப்பிட்டளவு வாக்குகளை பெற்றுக் கொள்ளும் திட்டம் இருக்கிறது.

இ.தொ.கா. மூலம் மலையகத்திலும், ஏனைய தமிழ்க் கட்சிகள் மூலம் வடக்கு-கிழக்கிலும் வாக்குகளை கொய்வதற்கு ஆளும் அணி திட்டமிடுவதாக தெரிகிறது.

ஆனால் இ.தொ.காவின் நிலைப்பாடு எதுவோ, அதுவே மலையக தமிழர்களது நிலைப்பாடு என்ற காலம் மலையேறிவிட்டது. மலையகத் தமிழ் மக்கள் கடந்த மாகாணசபைத் தேர்தல்களில் தம் சொந்த சிந்தனையை சார்ந்தே தமது வாக்குரிமையை பயன்படுத்தியிருந்தனர்.

வடக்கு-கிழக்கில் கூட்டணியினரையே அம்மையார் நம்பியிருந்தார். வடக்கு-கிழக்கில் கூட்டணிக்கு முன்பிருந்த செல்வாக்கு இல்லையானாலும், தமிழ்க் கட்சிகளில் நிரந்தர வாக்கு வங்கி உள்ள கட்சி கூட்டணிதான்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டணிக்கு குறிப்பிட்டளவு ஆதரவு நிலவுகிறது. ஆயினும் சந்திரிக்கா அம்மையாருக்கு வாக்களிக்குமாறு கூட்டணி கோருமானால், அதற்கு வரவேற்பிருக்காது என்பதும் தெளிவானது.

வரவேற்பிருக்காது என்பது ஒருபுறமிருக்க, விடுதலைப் புலிகளின் வேட்டுக்கு மார்பைத் திறந்து காட்டுவதும் ஒன்றுதான், சந்திரிக்கா அம்மையாருக்கு வாக்களிக்குமாறு கோருவதும் ஒன்றுதான் என்பது கூட்டணியினருக்கு நன்கு தெரியும். எனவே கூட்டணியினர் இம்முறை சந்திரிக்கா அம்மையாரை வெளிப்படையாக ஆதரிக்க முன்வரமாட்டார்கள்.

ஆனால் மறைமுகமாக சந்திரிக்கா அம்மையாருக்கு உதவும் முயற்சிகள் தற்போதிருந்தே கூட்டணி வட்டாரத்தில் தென்படத் தொடங்கியுள்ளன.

வேலை வாய்புக்களில் இன விகிதாசார முறைக்கு மாற்றீடான முறையொன்றை கண்டுபிடிக்க நீதியமைச்சர் குழு ஒன்றை நியமித்துள்ளார்.

அக் குழுவில் நீலன் திருச்செல்வமும் நியமிக்கப்பட்டுள்ளார். தேர்தல் நெருங்கும் காலங்களில் இவ்வாறான குழுக்கள் அமைக்கப்படுவது ஒரு பிரசார உத்தியாகவே அமைவதுண்டு.

இனவிகிதாசார முறை கடைப்பிடிக்கப்படாமையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் பேசும் மக்களை திருப்தி செய்வதே இக் குழுவின் நோக்கமாகும்.

மேல் மாகாணம் உட்பட ஐந்து மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெற்றபோது பெரிய அறிவித்தல் ஒன்று வெளியாகியிருந்தது. கொழும்பில் தமிழ்ப்பகுதிகளில் பிறப்பு, இறப்பு பதிவாளர்களாக தமிழர்கள் உடனடியாக நியமிக்கப்படுவார்கள் என்பதே அந்த அறிவிப்பாகும்.

அதேபோல வலிகாமம் காணிச் சுவீகரிப்புக்கான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி இரத்துச் செய்யப்போவதாகவும் செய்தி வெளியிடப்பட்டது. கூட்டணியினரே இச் செய்தியை வெளியிட வைத்தனர்.

மேல் மாகாணசபைத் தேர்தல் முடிந்து மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. இன்றுவரை மேற்கண்ட இரு வாக்குறுதிகளும் ஏறெடுத்தும் பார்க்கப்படவில்லை.

மேற்கண்ட இரு வாக்குறுதிகளும் தமிழ் வாக்கு வங்கிகளை கவருவதற்காக வீசப்பட்டவையே என்பதில் ஐயமில்லை

இவ்வாறான தந்திரங்களுக்கு வழி சொல்லிக் கொடுப்பதோடு, தொல்லை தவிர்ப்புக் குழு மற்றும் இன விகிதாசாரத்துக்கு மாற்றுக் கண்டுபிடிக்கும் குழு போன்ற திசை திருப்பும் குழுக்கள் ஊடாக ஆட்சியாளர்களுக்கு நற்பெயர் தேடிக் கொடுக்கும் காரியங்களில் கூட்டணியினர் ஈடுபடக்கூடும். இவை மறைமுகமான பிரசாரங்களேயாகும்.

மேல் மாகாணசபைத் தேர்தல் நேரத்தில் வலிகாமம் காணிச் சுவீகரிப்பு திட்டத்தால் தமிழ் வாக்குகள் கொழும்பிலும் திசை திரும்பும் என்று ஆட்சியாளர்களுக்கு தமிழ் அரசியல்வாதிகள் சிலரே எடுத்துக் கூறினராம். அவ்வாறு இருந்தும் தன் வாயால் எந்த வாக்குறுதியும் வழங்க அம்மையார் முன்வரவில்லை. அதன் காரணமாகவே அனாமதேய செய்திபோல வெளியாக வைத்திருந்தனர்.

மறைமுகமான பிரசாரங்களில் மட்டுமே ஈடுபடவேண்டிய தமது துர்ப்பாக்கிய நிலை குறித்தும் கூட்டணியினர் முன்கூட்டியே அம்மையாரிடம் கூறிவிட்டதாகத் தெரிகிறது.

இதனையடுத்து முன்னாள் முதல்வர் வரதராஜப் பெருமாள்மீது ஆட்சியாளரின் பார்வை திரும்பியுள்ளது. வரதராஜப் பெருமாள் தனது அரசியல் நடவடிக்கைகளை துரிதமாக்கத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு ஆட்சியாளர்கள் முன்வந்துள்ளனர்.

வடக்கு-கிழக்குக்கு எப்போது வேண்டுமானாலும் தகுந்த பாதுகாப்புடன் சென்று வருவதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்பட்டுள்ளன. அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு இரண்டாவது தடவையாக வரதராஜப் பெருமாள் சென்று வந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய கட்சிகள் மதில்மேல் பூனையாக உள்ளன. இக் கட்சிகளும் அம்மையாருக்கு பகிரங்க ஆதரவு கொடுக்க தயக்கம் கொண்டுள்ளதாகவே தெரிகிறது. ஆனாலும் அடுத்த ஜனாதிபதியாகவும் அம்மையார் வருவார் என்ற சூழ்நிலை இருக்குமானால் இக்கட்சிகளது



நிலைப்பாடும் தளம்பலாகும்.

ரெலோ சென்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சியின் காமினி திசநாயக்காவை ஆதரித்து பிரசாரம் செய்தது. அதற்கு கைமாறாக கணிசமான நிதியுதவியை பெற்றுக் கொண்டதாகவும் கூறப்பட்டது.

இம்முறையும் ரெலோ அமைப்பு சந்திரிக்கா அம்மையாரை ஆதரிக்கப்போவதில்லை என்றே நம்பக் கூடியதாகவுள்ளது.

இதற்கிடையே இன்னொரு தகவலும் அரசியல்வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

தமிழ் வாக்குகள் இம்முறை தமக்கு கிட்டப்போவதில்லை என்று பொது ஜன முன்னணியினர் உறுதியாக நம்புகின்றனராம். ஆகவே தமக்கு கிட்டாத தமிழ் வாக்குகள் ஐ.தே.கட்சிக்கு செல்லாமல் தடுப்பதற்காக வரதராஜப் பெருமாளை ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட வைப்பது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டுள்ளதாம்.

இதனை அறிந்த ஐ.தே.கட்சியினர் வரதராஜப்பெருமாள் ஈழப்பிரகடனம் செய்தது தொடர்பான பழைய பிரச்சனையை மறுபடி கிளறுவதுடன், வரதரைக் கைதுசெய்யுமாறும் கோரிக்கை விடத் தயாராகி வருகின்றனராம். வரதர் போட்டியிட முன்வந்தால், ஐ.தே.கட்சி பழசைக் கிளறும் என்று கூறப்படுகிறது.

'தமிழ்க் கட்சிகளோடு பொ.ஜ.மு. இரகசியப் பேரங்களில் ஈடுபட திட்டமிட்டுள்ளது. பாராளுமன்ற தேர்தலில் உதவுவதாக கூறி, அதற்கு பிரதியுபகாரமாக ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு கோருகிறார்கள்' என்று ஐ.தே.கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால் ஐ.தே.கட்சியும் தமிழ் வாக்குகளை கவருவதற்கு தந்திரமான வலைகளை விரிக்க பின் நிற்கப்போவதில்லை.

இனப்பிரச்சனைத் தீர்வு பற்றியும், யுத்தத்தின் கொடுமை பற்றியும் நெஞ்சை உருக்கும் விதமாக ஐ.தே.கட்சியும் அதன் தலைவர் ரணிலும் உரையாற்றத் தொடங்கியுள்ளனர்.

தமது கட்சியில் உள்ள தமிழ் உறுப்பினர்களை தலைப்பாகை கட்டி முன்னால் விட்டு, தமிழ் பேசும் மக்களது பிரச்சனைகளையிட்டு தீர ஆராய்வது போல பாசாங்குகள் தொடங்கிவிட்டன.

ஜனாதிபதி ஆட்சி முறையில் உள்ள ஒரேயொரு நன்மை இதுதான். தேர்தலில் தமிழ் பேசும் வாக்காளர்களின் தயவும் பெரும்பான்மை இன வேட்பாளர்களுக்கு கண்டிப்பாக தேவையாகும்.

அதனால்தான் கொஞ்சமாவது அடக்கமாக இனிப்பாக உதட்டளவிலேனும் பேசுவதற்கு முன்வருகிறார்கள். இல்லையெனில் திரும்பியும் பாரார்கள்.

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

வடக்கு-கிழக்கு கல்வியமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவின் குடும்பத் திருமணம் கொழும்பில் கோலாகலமாக நடந்தேறியது.

வடக்கு-கிழக்கு மாகாணசபை அதிகாரிகளில் அநேகமாக அனைவரும் குறித்த நேரத்திற்கு முன்னரே ஆஜராகிவிட்டனர். அவர்கள்தவிர வடக்கு-கிழக்கு பாடசாலைகளது அதிபர்கள், உப அதிபர்கள், ஆசிரியர்கள் பெரும்பாலானோர் ஆஜராகியிருந்தனர்.

வடக்கு-கிழக்குத் தமிழ் எம்.பிக்களில் கூட்டணியில் அனைவரும் ஆஜராகியிருந்தனர். மற்றும் ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப், ரெலோ, ஈரோஸ் தலைமைப்பீடத்தினர் பலரும் அங்கு சமுகமளித்திருந்தனர். அமைச்சர்கள் அஷ்ரப், அலவி மௌலானா ஆகியோரும் வந்திருந்தனர்.

கல்யாணம் நடைபெற்ற மண்டபம் முன்பாக இரவோடு இரவாக சுவரொட்டிகள் சில முளைத்திருந்தனவாம். டிவகலாலாவுக்கு எதிரான வாசகங்கள் காணப்பட்டன. பெரும்செலவில் திருமணம் நடத்த வருமானம் எப்படி வந்தது? என்றும் கேள்வி தொடுக்கப்பட்டிருந்தது. உடனடியாக அவை கிழித்துப் போடப்பட்டன.

கல்யாண வீட்டில் மாகாணசபை உயரதிகாரிகள் தான் வரவேற்பாளர்கள். உள்ளே தட்டேந்தி உபசரிப்பு நடத்தித் திரிந்தவர்கள் ஆசிரியப் பெருமக்கள். உணவு பரிமாற்றத்தை கண்காணித்து ஓடியாடித் திரிந்தவர்கள் பாடசாலை அதிபர்கள்.

இவர்களில் பலர் டிவகலாலாவின் கண்ணில் படத்தக்கதாக ஏ.சி. மண்டபத்திலும் வியர்க்க, விறு விறுக்க ஓடியாடித் திரிந்தது கண்கொள்ளாக் காட்சி.

இக் கல்யாணம் பற்றி மாகாணசபை உத்தியோகத்தர் ஒருவர் கூறிய அபிப்பிராயம் இது; 'வடக்கு-கிழக்கு மாகாணசபையின் உத்தியோகபூர்வ கல்யாண வீடு'.

விழாக்களுக்கு தமிழ்க் கட்சியினரை அழைக்கக் கூடாது என்ற கட்டுப்பாட்டையும் டிவகலாலா மீறிவிட்டார். அதனால் என்ன புலிகளையும் சமாளித்துக் கொள்ள அவருக்கா தெரியாது?!

★★★

### எய்பவன் நல்லவன் அம்பு கூடாது!

நாங்கள் என்ன தவறு செய்தோம்? அவசர காலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கிறோம். பின்னர் ஏன் புலிகள் கோபமாக உள்ளனர்? என்று கூட்டணி எம்.பி ஒருவர் கேட்டாராம்.

தம்பிமாருக்கு தலைக்குள் எதுவும் கிடையாது என்று நம்புவது கூட்டணியின் பழமைமிக்க பண்பாடு. இப்போதும் பண்பாடு மாறவில்லை.

அவசரகாலச்சட்டத்தை எதிர்க்க வேண்டும் என்பது கடமைதான். அதனை கூட்டணி செய்வதும் நன்றுதான். ஆனால் கூட்டணி ஏனைய விடயங்களில் அரசை ஆதரித்து வருகிறது. போர் நிதியையும் உள்ளடக்கிய வரவு செலவுத் திட்டத்தை கூட்டணி ஆதரித்தே வாக்களித்தது.

இ.தொ.கா. தலைவர் தொண்டமானின் அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு தோற்கடிக்கப்பட்ட போது அரசுக்கு ஆதரவாக துள்ளியெழுந்து கை உயர்த்தியவர் கூட்டணி எம்.பி. துரைராஜசிங்கம்.

அவசரகாலச் சட்டம் மட்டும் கூடாது, அரசு நல்லது என்பது, அம்புகூடாது, அதனை எய்பவன் நல்ல மனிதன், நாணயமானவன் என்று கூறுவதைப் போன்றது.

"எய்தவன் இருக்க அம்பை நோகக்கூடாது!" என்பதுதான் பழமொழி.

இங்கு அம்பையும் தடுத்து நிறுத்த வேண்டும். எய்பவனையும் எதிர்க்க வேண்டும். இந்த இரண்டில் ஒன்றை மட்டும் செய்வது கலப்படமில்லாத ஏமாற்று வித்தை! மக்களை முட்டாள்களாக நினைக்கும் செயல்!

இதனைப் புலிகள் விளங்கிக் கொள்ள மாட்டார்கள் என்று நினைப்பது வேடிக்கை! 'தம்பி மாருக்கு ஆயுதம் ஏந்த மட்டும்தான் தெரியும்' என்றே இவர்கள் இன்னமும் நம்பிக் கொண்டிருக் கிறார்கள் என்று பொருள்!

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 70

**கடந்தவாரம்**

**அமீனின் ஐந்தாவது மனைவியும் அவளது உறவினரும் அமீனால் கொல்லப்படுகின்றனர். அமீன் இராணுவத்தில் இருந்தபோது இராணுவ அதிகாரி ஒருவரது மனைவியோடு தொடர்பு ஏற்படுகிறது. அதனால் படைவீரர்கள் மத்தியில் நிர்வாணமாக ஓட வைக்கப்பட்டான். அதனையும் நினைவுகூருகிறான் அமீன்.**

**இனி....**

# இடி அமீன்

மக்களை கவருவதற்கு என்ன செய்யலாம்? என்று சிந்தித்த அமீனின் மூளையில் நகர்வல யோசனை உதித்தது.

தனது யோசனையை அதிரடியாக நடைமுறைப்படுத்தி மக்களைத் திகைக்க வைக்க முடிவெடுத்தான் அமீன். அந்த முடிவால் பல சுவாரசியமான காட்சிகளை உகண்டா மக்கள் கண்டனர். கம்பலா நகரின் பிரதான சந்தையில் எப்போதும் கூட்டம் அலைமோதும்.

தனது நகர்வலத் திட்டத்திற்கு அமீன் முதலில் தெரிவு செய்தது அந்த சந்தையைத்தான்.

திடீரென்று ஒருநாள் காய்கறிகள் ஏற்றிவரும் லொறியில் வந்து சந்தையில் இறங்கினான் அமீன்.

முதலில் யாருமே நம்பவில்லை. அமீனைப் போல உருவ ஒற்றுமை உள்ள யாரோ ஒருத்தன் வேடிக்கை காட்டுவதாகவே நினைத்தார்கள்.

பிரதான சந்தையைச் சுற்றி லொறியில் பவனி வந்தான் அமீன். அங்கு கூடியிருந்தவர்களோ அமீனைப் போலவே இருக்கும் ஒரு நபரைப் பார்க்கும் ஆர்வத்தோடு முண்டியடித்து அவனைப் பார்த்தார்கள்.

அன்று மாலை வானொலியைக் கேட்ட பின்னர்தான் பிரதான சந்தைக்கு விஜயம் செய்தது அமீன்தான் என்பது உறுதியானது.

'கம்பலா சந்தையின் நிலவரத்தை நேரில் கண்டறிய அதிபர் இடி அமீன் திடீர் விஜயம். மக்கள் உற்சாகமாக வரவேற்பளித்தனர்!' என்று உகண்டா வானொலி தனது செய்தி அறிக்கையில் தெரிவித்தது.

அன்றிலிருந்து மூன்றாவது நாள் மற்றொரு காட்சி.

கம்பலா நகரில் சைக்கிளில் அமீனும் அவனது மெய்க்காப்பாளர்கள் ஐந்து பேரும் பவனி வந்தனர்.



மக்கள் கூட்டமாக நிற்கும் இடங்களில் சைக்கிளை விட்டிறங்கி அவர்களுடன் உரையாடினான் அமீன்.

அமீன் தங்களுடன் உரையாடுவதை நம்புவதற்கே பலருக்கு கஷ்டமாக இருந்தது.

தங்கள் முன்பாக நிற்பது அமீனா? அல்லது போலியா? என்று பலருக்கு சந்தேகம் போகவில்லை.

அப்படியிருந்தும் அவனுடன் பேசுவதற்கு முண்டியடித்தனர். முக்கியமான வீதிகள் வழியாக சைக்கிளில் சுற்றினான் அமீன்.

**"மக்களோடு மக்களாக இருக்கவே நான் விரும்புகிறேன். மக்களுடன் மக்களாக, அவர்களது கஷ்ட நஷ்டங்களை நானும் அனுபவிக்க ஆசைப்படுகிறேன். அதுதான் சைக்கிள் உலா!"** என்று பேட்டி அளித்தான் அமீன்.

திடீர் திடீர் என்று சைக்கிள்களில் அமீனும் அவனது காவலர்களும் பவனி வந்தமையால் போக்குவரத்துப் பொலிசாரும் பதட்டமடைந்தனர்.

'கடமையைச் சரியாகச் செய்யாத நாற்பது போக்குவரத்து பொலிசார் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். போக்குவரத்து பொலிஸ் துறையில் களையெடுப்பு நடந்துள்ளது. இனிமேல் போக்குவரத்து பொலிஸ் சுறுசுறுப்பாக செயற்படும்!" என்று வானொலி அறிவித்தது.

உண்மையாகவே அமீனின் சைக்கிள் பயணியை அடுத்து போக்குவரத்து பொலிசார் தமது கடமையைச் செய்ய ஆரம்பித்தனர்.

அதனால் போக்குவரத்துகள் சீராக நடைபெற ஆரம்பித்தன.

அரச அலுவலகங்களுக்கும் சைக்கிளில் திடீர் என்று சென்று இறங்கினான் அமீன்.

இங்கு வந்து காத்திருக்கும் மக்களை அழைத்து குறைகளைக் கேட்டு, உடனுக்குடன் உத்தரவுகளைப் பிறப்பித்ததோடு, பணியில் அலட்சியமாக இருந்த அதிகாரிகள் சிலரையும் உடனடியாக வீட்டுக்கு அனுப்பினான்.

ஒரு வார காலத்தில் முப்பதுக்கு மேற்பட்ட அதிகாரிகள் வேலையில் இருந்து நீக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டனர்.

அவர்களுக்குப் பதிலாக நியமிக்க தகுதியானவர்கள் கிடைக்கவில்லை. அதனால் அரச அலுவலகங்களில் கோப்புகள் குவிந்தன; பணிகள் தேக்கமடைந்தன.

அதே நேரம் அமீனின் நடவடிக்கைக்கு மக்களிடையே ஓரளவு வரவேற்பு ஏற்பட்டிருந்தது. அதிகாரிகளது அலட்சியங்களால் பாதிக்கப்பட்ட மக்கள், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுவதை பாராட்டினார்கள்.

அலுவலகங்களில் ஏற்பட்டுவரும் பணி முடக்கத்தை தயங்கித் தயங்கி அமீனின் கவனத்திற்குக் கொண்டு சென்றனர் உயர் அதிகாரிகள்.

**"புதிதாக ஆட்களை வேலைக்குச் சேர்க்க வேண்டியதுதானே!"** என்று கூறினான் அமீன்.

அமீனுக்கு நிலைமையை எப்படி புரியவைப்பது என்று தெரியாமல் திருதிருவென்று முழித்தனர் உயரதிகாரிகள்.

**"என்ன முழிக்கிறீர்கள்? நாட்டில் வேலைக்கு ஆளே கிடையாதா? வேலை இல்லாத் திண்டாட்டம் இருப்பதாகக் கூறுவது பொய்யா?"** என்று கேட்டுச் சிரித்தான் அமீன்.

"அனுபவமுள்ள அதிகாரிகள் சிலரை யாவது திருப்பி அழைக்க வேண்டும்! புதியவர்களை படிப்படியாகத்தான் பழக்கி எடுக்க வேண்டும்!" என்று பவ்வியமாக எடுத்துக் கூறினார்கள்.

அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுத்தமைக்கு மக்களிடம் வரவேற்பு இருந்ததால் மறுபடி அவர்களை பகிரங்கமாக பணியில் சேர்க்க அமீன் விரும்பவில்லை.

**"மக்களுக்குத் தெரிந்தால் கொந்தளிப்பார்கள். ஆகவே அவர்களை இரகசியமாகப் பணியில் திரும்பச் சேருங்கள்!"** என்று உயரதிகாரிகளுக்கு கூறினான் அமீன்.

அவ்வாறே செய்யப்பட்டது. ஆனால் பலர் மறுபடி பணிக்கு திரும்ப மறுத்தனர். மரியாதை இல்லாத பதவியில் மறுபடி ஒட்டிக்கொள்ள விரும்பவில்லை!" என்று கூறினார்கள்.

அமீனுக்குத் தகவல் கூறப்பட்டது. **"அப்படியா கூறுகிறார்கள்? தேசத் துரோகிகள் என்று செத்துப்போக ஆசைப்படுகிறார்களா? அமீனின் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசத் துணிந்ததே முதல் குற்றம்!"** என்று முஷ்டியை மடக்கி இறுக்கினான்.

அமீனின் கோபம் அன்றிரவே வெளிப்பட்டது. பணிக்குத் திரும்ப மறுத்த அதிகாரிகளின் வீடுகளுக்கு இராணுவம் போனது. அத்தனைபேரையும் குண்டுக்கட்டாக தூக்கி வந்தது; அமீனுக்கு முன்பாக நிறுத்தியது.

அந்த நள்ளிரவிலும் கண்விழித்து காத்திருந்த அமீனைக் கண்டதுமே அதிகாரிகளுக்கு கிலி பிடித்துக் கொண்டது. தங்கள் உயிர் இனித் தங்காது என்று முடிவு செய்து கொண்டனர்.

**"என்ன, பணிக்குத் திரும்ப மாட்டோம் என்று, என் கட்டளையை மீறத் துணிந்துவிட்டீர்களாமே? உயிர்மேல் ஆசையே கிடையாததப்பா உங்களுக்கு?"** என்று இடிச்சிரிப்பை உதிர்த்தான் அமீன்.

அந்த இரவு நிசப்தத்தில் அமீனின் இடிச் சிரிப்பு மரண தேவனின் ஓசைபோல ஒலித்தது.

அதிகாரிகளில் ஒருவர் துணிந்து பொய் கூறினார்; "தங்கள் உத்தரவு என்பது எங்களுக்குத் தெரியாது!"

தருவது ரசிகன்

அந்தப் பொய் தங்கள் உயிரைக் காக்கும் என்பதால், ஏனைய அதிகாரிகளும் ஒரே குரலில் "ஆம், எங்களுக்கும் அவ்வாறு கூறப்படவில்லை அதிபர் அவர்களே!" என்றனர்.

அவர்கள் தூய பொய் கூறுகிறார்கள் என்பது தெரிந்தும், **"அதுதானே பார்த்தேன். உங்களுக்கு சரியாக எடுத்துக்கூறத் தவறிய முட்டாள்களைத்தான் முழங்காலில் இருக்க வைத்து சுட்டுக் கொல்ல வேண்டும்!"** என்றான் அமீன்.

மறுநாளே அத்தனை அதிகாரிகளும் பணிக்கு திரும்பினார்கள். அவர்கள் பணிக்கு திரும்பியது இரகசியமாக வைக்கப்பட்டது.

மக்களிடம் நல்ல பெயர் எடுப்பதற்கு தம்மை பந்தாடும் அமீனின் போக்கு அரச அதிகாரிகளுக்குப் பிடிக்கவில்லை. ஆனாலும் பயம் காரணமாக பகிரங்கமாக வெறுப்புக் காட்டாமல் இருந்தனர். மறைமுகமாக ஒத்துழையாமை தொடர்ந்தது. உகண்டா அரச மருத்துவமனையில் மருந்துகள் காணாமல் போகத் தொடங்கின. அம்பியூலன்ஸ் வண்டிக்காக வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட உதிரிப்பாகங்கள் களஞ்சிய அறையில் இருந்து களவாடப்பட்டன. களஞ்சிய அறையில் இருந்த டயர்களும் மர்மமாக மறைந்தன.

மருத்துவ அமைச்சர் இதனை அமீனின் கவனத்திற்குக் கொண்டு சென்றபோது; **"அங்கே என்ன.... பிடுங்கிக் கொண்டா இருக்கிறார்கள?"** என்று தாறுமாறாக கோபப்பட்டான் அமீன்.

மருத்துவமனைக்கு செல்லும் மக்கள் மருந்துகள் இல்லாமல் அமீனையும், ஆட்சியையும் வசைபாடிக்கொண்டு திரும்பிச் செல்வதாக புலனாய்வுப்பிரிவு தகவல் கூறியது.

**"லொறியில் சுற்றி, சைக்கிளில் அலைந்து நற்பெயர் தேட, யாரோ சில வேசிமக்கள் என் பெயரைக் கெடுக்கிறார்கள்!"** என்று குமுறினான் அமீன்.

மருத்துவ மனை களஞ்சியப் பகுதிக்கு ஆயுதம் தாங்கிய பொலிஸ் படை காவலுக்கு நிறுத்தப்பட்டது. சிலவாரங்களின் பின்னர் அங்கு சென்று பார்வையிட்ட அதிகாரிகளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. காவலுக்கு நின்ற பொலிசாரைக் காணவில்லை. அவர்களது ரைபிள்கள் மட்டும் அநாதரவாகக் கிடந்தன. களஞ்சியத்தில் இருந்து மருந்துப் பொருட்கள் யாவும் மறைந்திருந்தன.

**"பொலிசுக்குள் திருடர்கள் இருக்கிறார்கள். திருடர்களை காவலுக்கு போட்ட அதிகாரி யார் என்று பார்த்து மூன்றுமாத சம்பளத்தை அரசுக்கு வழங்கச் சொல்லுங்கள்!"** என்று பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டான் அமீன்.

இந்தத் தகவல் பொலிஸ் வட்டாரத்தில் பரவியதால், பணிகளுக்கு பொலிசாரை தெரிவு செய்து அனுப்ப பொலிஸ் உயரதிகாரிகள் பயந்தார்கள்.

தாம் அனுப்பும் பொலிசார் தவறிழைத்தால் தாமே தண்டப் பணம் கட்ட வேண்டியிருக்கும் என்றுதான் பயம்.

இக் காலகட்டத்தில் அமீனைத் தீர்த்துக் கட்ட தான்சானியா நாட்டின் ஆதரவுடன் ஒரு குழு தயாரானது.

'அமீனுக்கு பெண் சபலம் பெரும் பலவீனம். அப் பலவீனம் மூலமே அவனை ஒழித்துக்கட்டிவிடலாம்' என்று அக் குழு திட்டமிட்டது.

அமீனை மயக்கக்கூடிய அழகியைத் தேடிப்பிடிக்க வேண்டும். அந்த அழகி அமீனை நெருங்கிப் பழக வழிதேட வேண்டும். இந்த இரண்டு காரியமும் கைகூடினால்தான் நினைத்தபடி திட்டம் நிறைவேறும்.

அக்குழு தனது முயற்சிகளை ஆரம்பித்தபோது அமீனின் அதிஷ்டம், அக் குழுவுக்குள் விரிசல் ஏற்பட்டுவிட்டது.

அமீனை மயக்க ஒரு அழகியைத் தேடிப் பிடித்தனர். அந்த அழகியைக் குழுவில் உள்ள ஒருவன் அடைய நினைக்க, குழுவுக்குள் பிரச்சனை வெடித்து விரிசலானது.

அழகியை அடைய நினைத்தவன் அமீனிடம் சென்று முழுத் தகவலையும் கொட்டிவிட்டான்.

அதனை எதிர்பார்த்ததால் குழுவில் உள்ளவர்கள் முன்கூட்டியே தலைமறைவாகி விட்டனர். அதனால் தப்பினார்கள்.

தகவல் கொடுத்தவனையும் அமீன் விட்டு வைக்கவில்லை.

**"தகவல் தந்துவிட்டதால் தப்பிக் கொள்ளலாம் என்று நினைக்காதே அப்பனே! என்னைக் கொல்லத் துணிந்த கூட்டத்தில் நீயும் ஒருவன்! அந்தத் துணிச்சலுக்கு என் வெகுமதி நிச்சயம் உண்டு. இந்தா! பெற்றுக்கொள்!"** என்று தன் இடுப்பில் இருந்த பிஸ்டலை வேகமாக உருவிச் சுட்டான்.

இரத்தம் பீறிட தரையில் சரிந்து, சில நிமிஷம் துடித்துவிட்டு அந்த இளைஞன் அடங்கிப்போனான்.

தனது உயிருக்கு உலைவைக்க சதிகள் நடப்பதாக அறிந்ததால் சைக்கிள் பவனி உட்பட நகர்வலங்களை அமீன் நிறுத்தி விட்டான்.

தனது தற்பாதுகாப்புக்காக பிஸ்டலை மட்டுமே கொண்டு செல்லும் அமீன், பின்னர் கைக்குண்டுகளையும் தனது கைப்பையில் கொண்டு செல்ல ஆரம்பித்தான். இயந்திரத் துப்பாக்கியையும் தன் அருகில் வைத்திருந்தான்.

அமீனின் மெய்காவலர் எண்ணிக்கையும் அதிகமானது. படைகளுக்குள் கட்டுப்பாடின்றி நடந்து அதிகாரிகளால் தண்டிக்கப்பட்ட பலர் அமீனின் மெய்காவலர் குழுவில் சேர்க்கப் பட்டனர்.

அவர்கள் அமீனின் காவலர்கள் என்ற பெயரில் கட்டுபாடின்றி நடந்து கொள்ள ஆரம்பித்தனர்.

ஒரு நாள் பெரும் விபரீதம் ஏற்பட்டது. அவர்களது கொட்டம் கட்டுக்கடங்காது சென்றது.

**(இடி தொடரும்)**

## ஞானத்தந்தை

டயானாவைப் போலவே இளவரசர் வில்லியமுக்கும் பெரும் செல்வாக்கு ஏற்பட்டு வருகிறது.



கிரேக்க நாட்டு அரச பரம்பரையில் பிறந்த குழந்தை ஒன்றுக்கு ஞானத் தந்தையாக இருக்குமாறு வில்லியமிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

16 வயதான வில்லியம் ஞானத் தந்தையாக இருக்க சம்மதித்துள்ளார்.

பிரிட்டிஷ் அரச குடும்பம் போன்று கிரேக்க அரச குடும்பமும் பண்டைய பெருமை வாய்ந்த குடும்பம். இரு நாடுகளதும் அரச குடும்பங்களும் விக்டோரியா மகாராணியின் வாரிசுகளே.

கிரேக்க நாட்டின் முன்னாள் அரசரான கொன்ஸ்ரெனின் பேரனான இளவரசர் கொன்ஸ்ரன்ரைனின் அலெக்ஸியஸ் என்னும் ஐந்து மாதக் குழந்தைக்கே வில்லியம் ஞானத் தந்தையாகியுள்ளார்.

இளவரசர் வில்லியம் பிரிட்டனில் மட்டுமன்றி உலகெங்கும் செல்வாக்கு பெற்ற ஒருவராக மாறிவருகிறார். அதே சமயம் சிறு வயதிலேயே நிதானமாக சிந்திக்கும் பக்குவத்தையும் பெற்றுள்ளார் என்று கூறப்படுகிறது.

## செத்த பாம்பும் ஆபத்து

பாம்புக்கு பழி வாங்கும் குணம் இருப்பது தெரிந்ததுதான். ஆனால் செத்த பாம்பும் பழிவாங்கும் என்பது புதிய தகவல்.

அமெரிக்காவில் பொஸ்டன் நகரில் உள்ள விஞ்ஞானிகள் இந்த புதிய தகவலை வெளியிட்டுள்ளனர்.

பாம்பின் தலையை வெட்டினாலும் அது செத்தது போல இருக்கும். ஆனால் துன்புறுத்தியவர்களை பழிவாங்கும். கொத்தும். 'ரேட்டில் பாம்பு' என்னும் ஒருவகையான விஷப் பாம்புகளுக்கு இந்தக் குணம் உண்டு என்று கண்டுபிடித்துள்ளனர்.

செத்தபாம்பு என்று கருதப்பட்ட பின்னர், அந்தப் பாம்பு கடித்து பலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுபற்றிய விபரங்கள் இங்கிலாந்தில் இருந்து வெளியாகும் 'மருத்துவம்' என்னும் ஆங்கில இதழில் விரிவாக இடம்பெற்றுள்ளன.

## புதிய மாத்திரை

'வயாக்ரா' செக்ஸ் மாத்திரைக்கு போட்டியாக பல மாத்திரைகள் விற்பனைக்கு வந்துள்ளன. இந்தியாவிலும் வயாக்ரா மாத்திரைக்கு போட்டியாக மாத்திரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



பாங்கொக்கிலும் சமீபத்தில் புதிய செக்ஸ் வீரிய மாத்திரை கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

பாங்கொக்கில் உள்ள சுலாலாங்கோர்ண் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் இந்த மூலிகை மாத்திரையை உருவாக்கியுள்ளார்.

இதனை பரிசீலித்துப் பார்த்த தாய்லாந்துப் பிரதமர் பூரித்துப் போனாராம். அதனால் இந்த மாத்திரை தயாரிக்கும் அனுமதியை தாய்லாந்து அரசு வழங்கியிருக்கிறது.

இந்த மூலிகை மாத்திரை வயாக்ராவைப்போல உட்கொண்ட அரைமணி நேரத்தில் விந்தை காட்டாது. மூன்று நான்கு நாட்கள் ஒழுங்காக பயன் படுத்திய பின்னரே பலன் தெரியும்.


செக்ஸ் வீரிய மாத்திரை தயாரிப்பதில் தமிழர்களும் சளைத்துவிடவில்லை. தமிழ் நாட்டில் சென்னையில் வயாக்ராவுக்கு போட்டி மாத்திரை தயாரிக்கப் பட்டுள்ளது. 'விகரஸ் கோல்ட்' என்று இதற்கு பெயரிட்டுள்ளனர்.

சித்த மருத்துவ முறையில் தயாரிக்கப் பட்டுள்ள இந்த மாத்திரை வயாக்ராவை தோற்கடிக்கும் என்று கூறுகிறார்கள் தயாரிப்பாளர்கள்.

இந்த மாத்திரையை அறிமுகம் செய்து வைக்கும் விழா அண்மையில் சென்னையில் நடந்தது. தமிழக கல்வி அமைச்சர் அன்பழகன் அறிமுகம் செய்து வைத்தார்.

## விஜய் பிடிவாதம்

நடிகர் விஜய் திருமணம் எதிர்வரும் ஆகஸ்ட்மாதம் நடைபெற உள்ளது. இரண்டாயிரம் ஆண்டிலேயே திருமணத்தை நடத்த விஜய்யின் பெற்றோர் திட்டமிட்டிருந்தனர்.



ஆனால் விஜய் அப்படித் தள்ளிப் போடுவதை விரும்பவில்லை. விரைவாக திருமணத்தை முடிக்க விரும்பினார்.

இதனால் 'நெஞ்சினிலே' படப்பிடிப்பில் விஜய்க்கும் தந்தை சந்திரசேகருக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது.

யாருக்கும் சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று இலண்டன் பறந்துவிட்டார் விஜய். அங்கு தன் காதலி வீட்டிலேயே தங்கியிருந்தார்.

ஆகஸ்ட் மாதம் திருமணம் நடத்த சந்திரசேகர் ஒப்புக்கொண்டபின்னரே விஜய் இந்தியா திரும்பியதாகக் கூறப்படுகிறது. அதன்பின்னரே நெஞ்சினிலே படத்தின் மிகுதிக் காட்சிகளும் படமாக்கப் பட்டன.

'நெஞ்சினிலே' படத்தில் பல காட்சிகளில் விஜய் ஏனோ தானோவென்று காணப்படுவதும் மனக் கசப்பின் பிரதிபலிப்புத்தானாம்.

எதிர்வரும் ஆகஸ்ட் 25ம் திகதி விஜய்-சங்கீதா திருமணம் சென்னையில் நடைபெறவுள்ளது. இதற்காக மூன்று திருமண மண்டபங்கள் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன. 25ம் திகதி காலை 9 மணி முதல் 10.30 மணிக்குள் ராணி முத்தையா அரங்கில் திருமணம் நடக்கிறது.

## வயாக்ரா கேக்

இதுவும் சுவாரசியமான விவகாரம்தான். தைவான் நாட்டு வியாபாரி ஒருவரது கில்லாடியான யோசனை இது.




'வயாக்ரா கேக்' என்று தயாரித்து அமோகமாக விற்பனை செய்து வருகிறார். கேக்கில் வயாக்ரா மாத்திரையை வைத்து செய்கிறாராக்கும் என்று நினைக்க வேண்டாம்.

பலவிதமான மூலிகைகளால் இந்த கேக் தயாரிக்கப்படுகிறது. இந்த மூலிகைகள் ஆண்மை உணர்வை தூண்டக் கூடியவையாம். தாம்பத்திய உறவின் நேரத்தை நீடிக்கச் செய்யுமாம்.

தைவானில் வயாக்ரா மாத்திரைக்கு பலத்த மவுசு. கடந்த தேர்தலில் வேட்பாளர் ஒருவர் வயாக்ரா கொடுத்துத் தான் வாக்கு வாங்கினாராம்.

வயாக்ராவுக்கு அத்தனை மதிப்பு இருப்பதால், அதனை பயன்படுத்தி இந்த கேக் தயாராகிவிட்டது. இதற்கும் மவுசு கிடைக்கும் தானே!

# பா...பா...பாவாடை



## புதுசு

↑ சந்தையில் புதிது புதிதாக கமராக்கள் வந்து கொண்டிருக்கின்றன. சின்னக் குழந்தைகூட 'கிளிக்' செய்ய முடியும். கமரா என்பதும், படம் பிடிப்பதும் பெரிய சங்கதியாக இருந்த காலம் போயாச்சு.

படத்தில் உள்ள கமராவை மிக அண்மையில் ஜப்பான் ஒலிம்பஸ் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. சி-900 சூம் டிஜிட்டல் கமரா.

வேறு எந்த கமராவிலும் இல்லாத வசதி இதில் யாதெனில்; தூசு மற்றும் தண்ணீரால் பாதிக்கப்படமாட்டாது. கமராவின் மேல் பாகம் கண்ணாடியால் உருவாக்கப்பட்டுள்ளதால் உள்பாகங்களின் செயற்பாட்டையும் கண்ணால் காணலாம்.


## மாறாத கோலம்



↘ சூடான் நாட்டின் உள்நாட்டு யுத்தம் சப்பித் துப்பிய சக்கை இது! பசியால் மெலிய வைத்து, பட்டினிபோட்டு பணியவைக்கும் கொடூர வழிமுறை புதிது அல்ல. ஹிட்லரின் ஜெர்மன் படைகள் தம்மால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் பல இலட்சம் மக்களை பட்டினி போட்டன.

யூத இனத்தை ஒழிக்க சபதம் செய்து யூத மக்களையும், அவர்தம் எதிர்கால குருத்துக்களையும் இப்படித்தான் பட்டினி போட்டான் ஹிட்லர்.

காலம் மாறினாலும் அடக்குமுறைகளது அடிப்படைக் கோலங்கள் எங்குமே மாறவில்லை.



↗ பாவாடை தாவணியில் பார்த்த உருவமா? என்று பாட்டு இருக்கிறது. ஆனால் இந்தப் பாவாடை அணிந்தால் ஆளைப் பார்க்க முடியாது. பாவாடையின் அளவைத்தான் பார்க்க முடியும்.

ஆம், உலகிலேயே மிகப் பெரிய பாவாடை இதுதான்! ஸ்பெயின் நாட்டு ஆடை அலங்கார நிபுணர் ஒருவர் இதனைத் தயாரித்துள்ளார்.

இந்த பாவாடையின் சுற்றளவு மட்டும் நூறு மீட்டர். உயரம் 8.5 மீட்டர். நூறு மீட்டர் துணி பயன்படுத்தப்பட்டுள்ளது. கின்னஸிலும் இந்தப் பாவாடை கலக்கப் போகிறது.

## விளக்கின் விளக்கம்



→ இது சரவிளக்குத்தான்; ஆனால் சாதாரண சரவிளக்கல்ல. இதன் விலையைக் கேட்டால் தலைசுற்றும். இதன் மதிப்பு ஒரு மில்லியன் டொலர்! நம்நாட்டு மதிப்பில் சுமார் 7 கோடி ரூபாய்!

அப்படி என்ன விசேஷம் இருக்கிறது? இரண்டு இலட்சத்து இரண்டாயிரம் பச்சைக் கற்களுடன், 36 சிவப்புக் கற்களும் இந்த விளக்கில் பொறிக்கப்பட்டுள்ளன. முத்தும் பொறிக்கப்பட்டுள்ளது. முத்து 36 காரட் மதிப்புடையது.

மரகதப்பச்சை மற்றும் சிவப்பு கற்களது மதிப்பு 880 காரட்டுக்கள். விளக்கு எரியும் போது குளிர்ச்சியாக இருப்பதற்காக பச்சை நிறத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. பச்சையாக தெரிவது கற்களின் உபயம்.

இதனை நூறு கலைஞர்கள் ஒரு வருடமாக உழைத்து கலை உணர்வுடன் உருவாக்கியுள்ளனர். இந்த விளக்கின் பெயர்: நந்தன்வான்.

இந்தியர் ஒருவருக்கு சொந்தமான இந்த சரவிளக்கு சமீபத்தில் துபாயில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டது. விளக்கைப் பற்றியே எத்தனை விரிவாக விளக்க வேண்டியிருக்கிறது பார்த்தீர்களா?! பெறுமதி அப்படி!

## வெண் குரங்கு



→ இந்தவெண்தாடி வேந்தர் லங்கூர் இனத்தைச் சேர்ந்தவர். இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் ரண் தம்போர் சரணாலயம் இருக்கிறது. இந்த சரணாலயப் பரப்பளவு 392 சதுர கிலோ மீட்டர்.

இந்த சரணாலயத்தில் வித்தியாசமான பல விலங்குகள் உள்ளன. அவற்றில் இந்த லங்கூர் இனக் குரங்கும் அடக்கம்.

வெள்ளைமுடி படர்ந்த உடலும் வாலும் கொண்ட லங்கூர் குரங்குகளுக்கு முகம் மட்டுமே கறுப்பு. அதுகூட குழந்தைப் பருவத்தில் வெளுப்பாகத்தான் இருக்கும்.

இவற்றிடம் சிறப்பான குணம் ஒன்றுண்டு. தமது குட்டிகளை மட்டுமன்றி, தம் இனத்தில் உள்ள சகல குட்டிகளையும் ஒவ்வொரு குரங்கும் தம் குட்டிபோலவே சீராட்டி பாராட்டி பராமரிக்கும். பொது நலக் குரங்குகள்.

## பெரும் நகல்

↓ இது அமெரிக்காவின் சுதந்திர தேவி சிலை என்பது பார்த்ததும் தெரியும். ஆனால் இது அசல் அல்ல. நகல்!

இது பிரமாண்டமான பலூன் பொம்மை! இதன் உயரம் 30 அடி. அமெரிக்காவில் உள்ள சீட்டில் பகுதியில் உள்ள மலைப்பூங்காவில் இந்த பிரமாதமான பலூன் பொம்மை பார்வைக்கு வைக்கப்பட்டு பலரையும் கவர்கிறது. சிறுவர்கள் கூட்டம் கூட்டமாக சென்று பார்வையிட்டு மகிழ்கிறார்கள். பலூனில் இவ்வாறு தத்ரூபமாக செய்வது அதிசயம்தானே!



# தகவல் பெட்டி



## அபூர்வ பறவை

↑ இது அபூர்வமான பால்கன் பறவை. இஸ்ரேலியர் ஒருவரால் இப்பறவை காப்பாற்றப்பட்டுள்ளது. இதனை பாதுகாத்து பராமரிக்க இஸ்ரேலும், பாலஸ்தீனமும் உடன்பாடு செய்துள்ளமைதான் குறிப்பிடத்தக்க விஷயம்.

ஒரு பறவையைக் காப்பாற்ற இத்தனை கரிசனை! மனிதர்களது உயிர் பறப்பதைத் தடுக்கவும் இப்படி கரிசனை காட்டினால் நன்றாயிருக்குமன்றோ!

# மாற்றப்பட்ட நடிகை

## சென்னையில் திடீர் வேட்டை

தமிழ்நாட்டிலிருந்து மயன்



**பூ** வேலி போட்ட நான்கெழுத்து நடிகையுடன் கார்கால நடிகருக்கு கசப்பு ஏற்பட்டு விட்டது.

நடிகைக்கு அவர் விடுத்த அழைப்புக்களுக்கு நயமான மறுப்புதான் பதிலாக வந்ததாம். பூவேலி போட்டபோது, பூவை நெருங்கி தேன் உண்ட வண்டானவர் நடிகர்.

தேன் உண்ட வண்டு தேன்மலரை மறுபடி தேடியபோதுதான் பூ மறுத்துவிட்டது. வண்டுக்கு கோபம் உச்சியில் ஏறிவிட்டது.

கார்கால நடிகரின் நடவடிக்கைகள் சில நடிகைக்கு கலக்கத்தை ஏற்படுத்தியதால்தான் மறுபடி தனிமையில் இனிமை காண தயங்கிப் பிணங்கினாராம்.

நான்கெழுத்து நடிகையிடம் அப்படி என்ன கண்டாரோ, கார்கால நடிகருக்கு நடிகையின் மறுப்பு தாங்க முடியவில்லை; பலமுறை கெஞ்சிப் பார்த்தாராம்.

இத்தனைக்கும் கார்கால நடிகர் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடிச் சென்று கேட்டதைக் கொடுக்க பல நடிகைகள் தயாராக இருக்கின்றனர்.

நான்கெழுத்து நடிகையை தனது புதிய படம் ஒன்றிலும் சிபாரிசு செய்தார் நடிகர். அதுவும் மலர்களோடு சம்பந்தப்பட்ட பெயருள்ள படம்தான். மலர்களின் இளவரசி அப்படத்தின் பெயரில் ஒரு பாதி.

அத் தகவல் கிடைத்தும்கூட நடிகை அசரவில்லை. அந்தளவுக்கு நடிகரின் செயற்பாடுகளால் கதிகலங்கிப் போயிருந்தார் நடிகை.

பொறுத்துப் பார்த்த நடிகர், இறுதியில் நான்கெழுத்து நடிகையை புதிய படத்திலிருந்து தூக்கிவிடுமாறு இயக்குநருக்கு பணித்துவிட்டார்.

தற்போது இரண்டெழுத்து நடிகை ஒருவர் கார்கால நடிகரால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளார். பிரபலமான காதல் காவியம் ஒன்றின் நாயகியின் பெயரைக் கொண்டவர் இந்த நடிகை.

இவர் காந்த நடிகருடன் ஒரு படத்தில் நடித்தவர். தற்போது பல படங்களில் தனது 'பழநமுறை' மூலமே வாய்ப்புக்கள் பெற்றுள்ளார்.

இவரை சிபாரிசு செய்த கார்கால நடிகர், படப்பிடிப்பு முடிந்ததும் அழைத்துக் கொண்டு மாயமாகிவிடுகிறார். இது பற்றித்தான் படப்பிடிப்பு குழுவில் கிசுகிசுக்கிறார்கள்.

இந்த நடிகையையும் கார்கால நடிகர் பயந்து அலறிட வைக்காவிட்டால் சரிதான்.

### வர்த்தகர் உதவி

**மூ**ன்றெழுத்து தொடையழகி நடிகை பற்றி இரகசியமான, ஆனால் கோடம்பாக்கம் வட்டாரத்தில் பகிரங்கமாக அறியப்பட்ட தகவல் இது.

வளர்ந்துவரும் இளம்புயல் நடிகரை கைக்குள் போட்டுக் கொண்டாராம் நடிகை. இளம் புயலுக்கு காதலி இருந்தாலும் கூட நடிகையின் தொடையழகில் மயங்கித்தான் போனார்.

தொடர்ந்து அந்த நடிகைக்கு சில வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுத்து நட்பை இறுக்கியும் கொண்டார்.

'இது காதல் அல்ல, ஆசை. 24 மணிநேரமும் பிஸியாக நடிக்கும்போது, இப்படியான ஓய்வுகளும் தேவைதான். ஓய்வுக்கு அமோகமாக ஒத்துழைக்கிறார் நடிகை' என்று தன் நண்பர்கள் வட்டாரத்தில் கூறியுள்ளாராம் இளம் நாயகன்.

இந்த விவகாரம் நடிகரின் தந்தைக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. நடிகையிடம் ஏடாகூடமாக மகன் மாட்டிக் கொண்டால் என்னாவது? என்று பயப்படுகிறார்.

ஆனால் அந்த நடிகை அப்படிப்பட்டவரல்ல. நட்புடன் எந்தளவு ஆழமாகப் பழகினாலும் அதனைக் காதல் என்று கருத மாட்டார் என்று நம்புகிறார் இளம் புயல் நாயகன்.

இதற்கிடையே நடிகை ஒரு வர்த்தக நிறுவனமும் தொடங்கியுள்ளார். பிரபல உணவு விடுதிதான் அந்த வர்த்தக நிறுவனம்.

இந்த நிறுவனத்திற்கான முதலீடு வேறு ஒரு வர்த்தகப் பிரமுகருக்கு சொந்தமானதாம்.

நடிகையின் நட்பு அந்த வர்த்தகப் பிரமுகருக்கும் கிட்டியதால், நட்புக்கு பரிசாக உணவு விடுதி உருவாக்கிக் கொடுத்துள்ளார்.

மார்க்கெட் போனாலும் கைவசம் ஒரு தொழில் இருப்பது நல்லதுதானே. நடிகையின் உறவினர் ஒருவர்தான் விடுதியைப் பார்த்துக் கொள்கிறாராம்.

### திடீர் வேட்டை

**செ**ன்னை நகரில் 2.07.99 அன்று மாநகரப் பொலிசாரால் திடீர் 'விபசார' வேட்டை ஒன்று நடத்தப்பட்டது.

சென்னையில் பிரபலமான பங்களாக்களில் சினிமா மற்றும் தொலைக்காட்சி நடிகைகள் விபசாரத்தில் ஈடுபடுவதாக கிடைத்த தகவலை அடுத்தே, வேட்டை நடத்தப்பட்டது.

எதிர்பார்த்ததுக்கும் மேலாக சுமார் நூறு அழகிகள் வரை கைது செய்யப்பட்டனர். இவர்களில் இரண்டு பேர் சினிமா நடிகைகள். மூன்று பேர் தொலைக்காட்சி நடிகைகள். வேறு பலர் துணை நடிகைகள். நடனக் காட்சிகளில் கூட்டத்தோடு கூட்டமாக நின்று ஆடுபவர்கள். நடிகைகளின் பெயர்களை வெளியிட பொலிசார் மறுத்துவிட்டனர்.

முன்னணி நடிகைகள் தங்கள் வீடுகளிலும், நட்சத்திர விடுதிகளிலும் 'பிஸ்னஸ்' என்ற பெயரில் இதையேதான் செய்கிறார்கள். எங்களை மட்டும் கைது செய்கிறீர்களே? இதென்ன நியாயம். நாம் வருமானம் போதாத காரணத்தில்தானே இத் தொழிலில் ஈடுபட்டோம்' என்று கைதான குட்டி நடிகைகள் சிலர் பொலிசாரிடம் கூறினார்களாம்.




### கெட்டிக்காரி

'வாலி' படத்தில் பிரமாதமான வெற்றியால் நக்மாவின் தங்கை ஜோதிகாவுக்கும் கை மேல் பலன் பல படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார். 'வாலி' படத்தில் அஜித்தின் கற்பனைக் காதலியாக வந்தவர்தான் ஜோதிகா. 'பூவெல்லாம் கேட்டுப்பார்' 'உயிரிலே கலந்தது' போன்ற படங்களில் ஜோதிகாவுக்கு மற்றொரு திருப்பம் காத்திருக்கிறது. நக்மாவின் இன்னொரு தங்கை மாலரோஷினியால் நக்கைப் பிடிக்க முடியவில்லை. ஜோதிகா கெட்டிக்காரி.

## மாறிய காட்சிகள்

சமீபத்தில் 'சன் ரிவி' 'மாணிக்கம்' படத்தை ஒளிபரப்பியது. இங்கு 'சக்தி'யில் வெளியானது. இப்படத்தில் ராஜ்கிரண், வனிதா விஜயகுமார் நடித்திருந்தனர்.

படத்தின் இறுதிக் காட்சியில் ராஜ்கிரண் எதிரிகளால் கொல்லப்பட்டு, அப்படியே சிலையாக மாறிவிடுவார். இதுதான் முன்பு வெளியான படத்தின் உச்சக்கட்ட காட்சி. (கிளைமாக்ஸ்)

ஆனால் படம் தோல்வி கண்டதால் அதனை மாற்றி ராஜ்கிரண் எதிரிகளை அழித்துவிட்டு உயிரோடு இருப்பதுபோல மறுபடி படமாக்கி சேர்த்து விட்டனர்.

இவ்வாறு உச்சக்கட்ட காட்சிகள் பல படங்களில் மாற்றப்பட்டுள்ளன. விஜயகாந்த்-லைலா நடித்து சமீபத்தில் வெளியான 'கள்ளழகர்' படத்தில் லைலா கடைசிக் காட்சியில் இறந்து போகிறார்.

படம் தோல்வி கண்டதால், லைலா உயிருடன் இருப்பதுபோல படமாக்கி புதிய 'கிளைமாக்ஸ்' காட்சியுடன் காண்பித்து வருகின்றனர்.

## நாயகன் வாய்ப்பு

'சக்தி' தொலைக்காட்சித் தொடர் மூலம் பிரபலமானவர் சதீஷ்குமார். அதில் ஸ்ரீராம் என்ற பாத்திரத்தில் தோன்றுகிறார். 'நீதி' 'பஞ்சமி' ஆகிய தொலைக்காட்சித் தொடர்களிலும் நடித்து வருகிறார்.

தற்போது இவருக்கு திரைப்பட வாய்ப்பு கதவைத் தட்டியிருக்கிறது. 'உஷ்' என்ற பெயரில் தயாராகப் போகும் படத்தில் கதாநாயகன் இவர்தான். சதீஷ் என்ற பெயரில் அறிமுகமாகிறார்.


இவருக்கு ஜோடியாக வைசாலி நடிக்கிறார். 'நேசம் புதிது' படத்தில் இரண்டாவது நாயகி நடித்திருப்பவர் வைசாலி. எம்.எஸ்.மன்சூர் கதை, திரைக்கதை வசனம் எழுதி இயக்குகிறார்.

## இன்னொரு மீனா

'சங்கமம்' படத்தில் ரகுமான் ஜோடியாக நடித்திருப்பவர் விந்தியா. அசப்பில் மீனாவைப் போலவே இருக்கிறார்.

'ஆறுவதுசினம்' படத்தில் மீனாவின் வாய்ப்பை தட்டிப் பறிக்கவும் இந்த உருவ ஒற்றுமை ஒரு காரணம். மள மளவென்று, பல படங்களில் ஒப்பந்தமாகியிருக்கிறார்.

பிரபு நடிக்கும் 'திருநெல்வேலி' படத்திலும் விந்தியாதான் நாயகி. ஆனால் பிரபுவுக்கு ஜோடியாக அல்ல. உதயா என்னும் புதுமுகத்தின் ஜோடியாக நடிக்கிறார்.



சாக்ஷி
படம்: சத்திய தாமன்

## வசூல் கொட்டும் முத்து

### படையப்பாவும் போகிறது

ரஜினியின் 'முத்து' படம் ஜப்பான் நாட்டில் அமோகமாக ஓடிக் கொண்டிருப்பதை பல மாதங்களுக்கு முன்னரே தெரிவித்திருந்தோம்.

தற்போதும் 'முத்து' ஒரு ஆண்டைக் கடந்து அங்கு கொடி நாட்டி கொண்டிருக்கிறது. 'முத்து' படத்தில் 'குலுவாலிலே' பாடல் ஜப்பானியர்களின் உதடுகளிலும் ஊர்வலம் வருகிறது.

இதனையடுத்து படையப்பாவை ஜப்பானிய விநியோகஸ்தர் ஒருவர் [illegible] லட்சம் கொடுத்து வாங்கியுள்ளார். இந்தியப் படம் எதற்கும் [illegible] இந்த விலை கொடுக்கப்பட்டதில்லை.

ஜப்பானில் ஜாக்கிசான் படங்களுக்கு நிகராக ரஜினி படம் வசூல் குவிக்[illegible] வரை ஜப்பானில் 'முத்து' அறுவடை செய்துள்ள வசூல் ஜப்பான் [illegible] கோடி.

[illegible] தொடர்ந்து சுமார் பத்துப் படங்கள் ஜப்பானில் திரையிடப்பட்டன. நாயகன், தளபதி, அஞ்சலி, அருணாச்சலம், பாட்ஷா, எஜமான் போன்ற படங்களே திரையிடப்பட்டன. இவற்றில் ரஜினி படங்களே அதிகம்.

ஜப்பானில் ரஜினி படங்கள் உட்பட தமிழ்ப்படங்கள் திரையிட வாய்ப்புள்ளதால் தமிழ்ப் பட தயாரிப்பாளர்களது பார்வை அங்கும் திரும்பியுள்ளது. சீனா, ஹொங்கொங் போன்ற நாடுகளிலும் தமிழ்ப் படங்களை திரையிட ஆலோசித்து வருகின்றனர்.

ஜப்பான் விளம்பர நிறுவனம் ஒன்று 'முத்து' படப் பாடலான 'குலுவாலிலே முத்து வந்தல்லோ..' என்ற பாடலை போல, இந்தியா மைசூரில் வந்து 60 இலட்சம் செலவில் படமாக்கிச் சென்றுள்ளதாம். ரஜினியின் ஸ்டைல் ஜப்பானியர்களுக்கும் பிடித்துவிட்டது.

[illegible] ரெட்டி [illegible] வரை.

**முகப்பில்**
மீனா
மணிவண்ணன்

♣ மெகா ஸ்டார் மம்முட்டி கதாநாயகனாக நடிக்கும் படமொன்றை ஆர்.கே. செல்வமணி இயக்கவுள்ளார். ஆர்.கே. செல்வமணி இயக்கத்தில் மம்முட்டி 'மக்கள் ஆட்சி', 'அரசியல்' போன்ற படங்களில் ஏற்கனவே நடித்துள்ளார்.

♣ 'மோனிஷா என் மோனாலிசா' படத்தில் நாயகியாக அறிமுகமான மும்தாஜ் இப்போது அப்பாஸ் ஜோடியாக 'மலபார் பொலிஸ்' படத்தில் நடித்து வருகிறார். அத்துடன் 'பூந்த்' என்ற இந்திப்படத்திலும் நடிக்கவுள்ளார்.

♣ தமிழில் அர்ஜுனை வைத்து 'முதல்வன்' படத்தை இயக்கிவரும் ஷங்கர், இந்திப் பதிப்பையும் தானே இயக்கத் திட்டமிட்டுள்ளார். இந்தி 'முதல்வனி'ல் ஷாருக்கான் நாயகனாக நடிக்கிறார்.

♣ ரஜினியின் 'அருணாச்சலம்' படத்தில் இடம் பெற்ற 'மாத்தாடு மாத்தாடு மல்லிகே..' என்ற பாட்டின் தலைப்பில் கன்னடப் படமொன்று தயாராகவுள்ளது. 'மாத்தாடு மாத்தாடு மல்லிகே' என்பதும் கன்னடச் சொல்தான்.

♣ 'பூவெல்லாம் கேட்டுப்பார்', 'ரிதம்' ஆகிய படங்களை இயக்கி வரும் வசந்த், இவற்றை முடித்துவிட்டு, பிரசாந்த் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.

## மினி சினி

♣ தமிழில் படமெதுவுமின்றி மலையாளத்தில் நடித்து வருகிறார் சங்கீதா. சென்ற வருடத்தின் கேரள அரசின் சிறந்த நடிகைக்கான விருதை 'சிந்தா விஷடயாய சியாமளா' என்ற படத்தில் நடித்ததன் மூலம் பெற்றுள்ளார்.

♣ பார்த்திபன் தமிழில் நடித்து வெற்றிபெற்ற படங்கள் தெலுங்கில் மொழி மாற்றப்படுவதுண்டு. அந்த வரிசையில் இவரது 'புதுமைப்பித்தன்' 'ஒகா வோட்டு' (ஒரு வோட்டு) என்ற பெயரில் மொழிமாற்றப்படுகிறது.

♣ மணிரத்னத்தின் 'தில்சே' (தமிழில் 'உயிரே') படத்தில் அறிமுகமான ப்ரீத்தி ஸிந்தா இப்போது, 'காஷ்மீர்' என்ற இந்திப்படத்தில் நாயகியாக நடிக்கிறார். இப்படத்தை வினோத் சோப்ரா தயாரிக்கிறார்.

♣ கே.எஸ். ரவிக்குமார் இயக்கத்தில் விஜய்-ரம்பா-புதுமுகம் மோனிகா நடிக்கும் 'மின்சாரக் கண்ணா' படத்தின் பாடல் காட்சிகள் ஜெர்மனி, சுவிற்ஸர்லாந்து, ஒஸ்ரியா ஆகிய நாடுகளில் படமாக்கப்படவுள்ளன.

♣ கவிதாலயாவின் 'பூவிலங்கு' படத்தில் கதாநாயகியாக அறிமுகமான குயிலி பின்னர் கவர்ச்சி நடிகையானார். நீண்ட காலமாக நடிக்காமல் இருந்த குயிலி கவிதாலயாவின் 'ரோஜாவனம்' படத்தின் மூலம் மறுபடி திரையில் தோன்றவுள்ளார்.

# வரலாறு சமைப்போம்...!

கோபுரமே சரிந்தாலும்
கும்பிட்டுக் குனிவதில்லை
தமிழன் வரலாறு!
**
போரென்ன வந்தாலும்
தீயாகிச் சுட்டாலும்
தோற்றோடும் பண்பாடு
கண்டதில்லை!
**
வேரோடு வெட்டிச்
சாய்த்தாலும்
விழுதாகித் தாங்கி நிற்கும்
வீர வரலாறு!
**
செம்மணியில் விதையாகி
தேசத்தின் விழுதாகி
நவயுகத்தின் முதலாகும்
வரலாறு!
**
நந்திக்கடல் பொங்கி
வான்முட்டும்– ஒலியெழுப்பும்
தோள் கொடுக்கும்
இரணைமடுவும் இலுப்பைக்குளமும்
**
மட்டுவில் காற்றெழுந்து
மணற்காட்டில் சேதி
சொல்லும்!
**
பொன்னாலை, இளவாலை
பேசாலை, தங்காலை
மண் கூட்டி
கோபுரங்கள் ஆயிரம்
கோடி கோடி கோட்டைகள்
கட்டிடுவோம்
வரலாற்றில்!

ப. ராதா-வவுனியா.

# நிலவின் ஆனந்தம்

ஒரு
பட்டுப் பூச்சியாய்
பருவத்தில்
வட்டமிட்ட
உனது கனவுச்
சிறகுகளில் அப்பிய
அவலச் சேற்றினால்
சிதைந்து போனது
எனது வானவில்!
••
வானத்தைத் தொலைத்த
ஏக்கங்களால்
இரு மின் கம்பியில்
அகப்பட்ட வௌவாலாய்
நீ தொங்கிக்
கொண்டபோது
என் கழுத்தில்
மாட்டப்பட்டிருந்தது
தூக்கு.
••
உன் சுவாசத்தில்
நீயே கலந்துகொண்ட
விஷவாயு
என் மூச்சையும்
நிறுத்திப் போட்டது.
••
உன்னில்
ஒரு காதலின்
தலைப் பிரசவம்
சவமாகிப்போன
நிமிஷத்தில்!
••
என் உயிரின்
ஆணிவேர்
அறுந்து போனது.
••
பார்வையில் இருண்ட
பௌர்ணமிக்கோர்
விடிவெள்ளியைத்தேடி
விழிகள்தான் குருடானது.
••
நிலவின் வம்சமே
மறுபடி ஒளிரும்
உன் வானத்தைப் பார்த்து
மௌனமாய் சிரிக்கிறேன்.
••
நீ சிந்திய
கண்ணீர் மழையால்
கழுவப்பட்ட உனது
சிறகுகள் இன்று
இன்னொரு வானில்
சிறகடிப்பதில்
ஆனந்தம்
உனக்கு மட்டுமல்ல;
எனக்கும்தான்!

கட்டாரிலிருந்து மெய்யன்
நட்ராஜ்.



# யார் இவர்?

தமிழ்த் திரையுலக மார்க்கண்டேயரின் சிறு வயதுச் சிங்காரத் தோற்றம் இது. யார் இவர் என்று நீவீர் அறிவதில் இல்லையல்லவா சிக்கல்?
விடையைச் சரிபார்க்க விரைவீர் பக்கம் 18க்கு!

# தாய்

எந்த வரட்சியிலும்
ஈரங்காயாத
மேகம்!

கதிர்-
பிட்டியகந்தை.

# தேன் கிண்ணம்

# சுதந்திர கனவு

இந்து சமுத்திரத்தின்
முத்து...
இல்லை இல்லை
இது
இந்து சமுத்திரத்தின்
புதையல்!
□★□
அங்கோர் சூரியகந்தை
துரையப்பா அரங்கு
இன்னும்...
அரியாலை கொட்டடி...
ஏதேதோ...!
□★□
தமிழன் என்று
சொல்லடா
தலை நிமிர்ந்து
நில்லடா
இங்கோ...
தலை குனிந்து
செல்லடா!
□★□
1948...
எல்லோருக்கும் சுதந்திரம்
கிடைத்ததாய் நினைத்தோம்.
எங்களுக்கு மட்டும்
அது...
எட்டாக் கனி?
ஆகவே
எங்களை
எங்கேயும்
புதைக்கலாம்...!

அ. சிவராசா-
வவுனியா.

# வாழ்த்துகிறேன்

உன்
விளையாட்டுத் திடலாகியது
என்
வாழ்க்கை.
★
என்
காதலின் கோடுகளை
கிழித்ததும் நீதான்!
அழித்ததும் நீதான்!
★
உன்
சுகம்பற்றியே
நான் சிந்தித்ததாலா
சோகத்தை
தந்துவிட்டுப் போகிறாய்?
★
உன்
மௌனத்தில் கூட
எனக்கு
மரண வேதனை தரும்
மந்திரத்தை
எங்கு கற்றாய்?
★
என்
யாசகத்தின்
வாசகத்தை
யோசித்துப்
பார்க்கிறேன்...
பல விருத்தங்களில்
நீ
விட்டுச் சென்ற
வருத்தங்கள்தான்
கருத்தாய்
பரிணமித்திருக்கிறது!
★
என்
வேதனையின் விலாசம்
உன்னால்தான்
வரையப்பட்டது.
ஆனாலும்...
உன்
வாழ்வுக்காகவே
பன்னீர் தெளித்து
வாழ்த்துகிறது...
என்
கவிதையும்...
கண்ணீரும்...

நக்கிள்ஸ் கிறிஸ்டோ- தவளந்தன்னை.

# சுதந்திரம்

சுதந்திரத்தின் சுடரை ஏற்றி
வருவதற்காக கனத்த
இருளில் அவன் சென்றான்!
திரும்பி வருவேன்
எனக்காக காத்திருங்கள் என்றான்!
★★
எங்கே சென்றான்?
சோகத்தில் கறுத்த
பனைக் கோடுகளுக்குள்–
தத்தளிக்கும் கருநீலக்
கடல் வெளியினூடே
எத்தனை தடைகளை
அவன் தகர்த்திருப்பான்?
கடுமையான முனைகளில்
எப்படிப் போரிட்டான்?
★★
தெரியவில்லை.
★★
தெரிவதெல்லாம்
சுதந்திரத்தை மீட்டு வருவதாகத்
தந்த உறுதி மொழிகள்...!
காத்திருக்கச் சொன்ன நம்பிக்கைகள்...!
★★
அவனுக்காகச் சில காலம்
காத்திருப்பேன்!
பிறகு, அவனும் வரவில்லையெனில்
நானே போவேன்!
நானும் திரும்பாவிட்டால்
எனது பையன்களும் போவார்கள்!

...சுனில் கங்கோபாத்யாய
எழுதிய வங்காளக் கவிதையைத் தழுவியது.

# பேனா நண்பர்



**பெயர்:** எம். திசரூபன்
**வயது:** 24
**முகவரி:** SCHILDGASSE STRASSE-22, 79618, RHEINFELDEN, GERMANY.
**பொழுது போக்கு:** பத்திரிகை, சினிமா.

# ஹலோ டாக்டர்!



**கே: என் ஒரு குழந்தை கலகலப்பாக இருக்கிறது. இன்னொரு குழந்தை உம்... மென்று இருக்கிறதே?**

ப: இப்போதே அடையாளம் கண்டு கொண்டு செயல்படுவது நல்லது. பொறுமையுடன் ஊக்கப்படுத்துங்கள். உம்...மென்ற குழந்தை கூட கலகலப்பாகிவிடும் மனோதத்துவ டாக்டரை பாருங்கள். சரியான ஆலோசனை கிடைக்கும்.

**கே: என் பையன் ஒவியம் வரைவதில் தீவிரமாக இருக்கிறான். வெளியில் போய் நான்கு பேரிடம் பேசத் தயங்குகிறான்?**

ப: அவனை ஒவியம் வரைய ஊக்கப் படுத்துங்கள். கால்பந்து போன்ற வெளிப்புற விளையாட்டுக்கு போனால் தான் பழக முடியும் என்று நினைக்காதீர்கள். பொது நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச்சென்று பழகவிடுங்கள். குணம் மாறும்.

**கே: பெரியவனான என் மகன் உம்... மென்றுதான் இருக்கிறான். அதிக கோபம் வருகிறது அவனுக்கு?**

ப: பொறுமையாக கண்காணியுங்கள். உங்கள் அரவணைப்பு அவனை மாற்றக் கூடும். இல்லையெனில் டாக்டரை ஆலோசியுங்கள்.

# இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கார்னா'

18.07.99 முதல் 24.07.99வரை

**மேடம்:**
சனிகாலமும் வியாழனின் நட்புப் பார்வைப்பலமும் மனதில் நம்பிக்கையைக் கொடுக்கும். கிரகப்பார்வை ஸ்தான பல யோகத்தால் பண வசதியும், பொருள்வரவும் காணப்படும். தடைப்பட்ட சில கருமங்கள் கைகூடும். அச்சுவினி நட்சத்திரருக்கு சிறப்பான காலம்.
அதிஷ்ட நாட்கள்:- வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம்:- வெள்ளை; எண்: 2.
அதிஷ்ட திகதிகள்:- 20, 22.

**இடபம்:**
கிரககால அமைப்பும் 12ம் இடக் கிரகஸ்தான நிலையும் நற்பலன்களைக் கொடுக்கும். சில விடயங்கள் தடை தாமதங்களையும் கொடுக்கலாம். கல்வி, தொழில் சீர்சிறப்பாக அமையும். ரோகினி நட்சத்திரகாரர்களுக்கு மேன்மையைக் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள்:- செவ்வாய், புதன்.
அதிஷ்ட நிறம்:- பச்சை; எண்: 4.
அதிஷ்ட திகதிகள்:- 22, 23.

**மிதுனம்:**
11ம் இடம் கிரக பலம் அடைவதும், கால யோக தெளிவும், சுக்கிரன் 2இல் பலம் கொள்வதுமாகக் காணப்படுவதால் விவாக விடயங்கள், பிள்ளைகளின் பொறுப்புக்கள் என்பன நன்றாக நடைபெறும். புதியவர்களினால் பண உதவிகள் கல்வி வசதி வாய்ப்புக்கள் புநர்பூச நட்சத்திரக்காரருக்கு ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள்:- புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்:- இளமஞ்சள்; எண்: 3.
அதிஷ்ட திகதிகள்:- 19, 21.

**கடகம்:-**
10ம் இடத்தில் சனியும் வியாழனும் 1ம் இடத்தில் சுக்கிரன் அமைவதும் உடலில் நோய் துன்பங்களைக் கொடுக்கும். தடைப்பட்ட விவாக விடயங்கள் நடை பெறலாம். நண்பர்களின் உதவி கிடைக்கும். கொடுக்கல் வாங்கலில் சஞ்சலங்கள் தென்படும். பூச நட்சத்திரப் பெண்களுக்கு சிறந்த நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள்:- புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்:- இளமஞ்சள்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள்:- 23, 20.

**சிம்மம்:**
பாக்கியஸ்தானமும் துர்வயோக பலமும் கூடும் நேரத்தில் கிரகநிலைகள் உள்ளதால் பல காலங்கள் தடைப்பட்ட கருமங்கள் நிவர்த்திபெறும். கொடுக்கல் வாங்கல் சோலிகள் பல்வேறுபட்ட கடன் பிரச்சனைகள் நிவர்த்திபெறும். மக நட்சத்திரருக்குச் சிறப்பு கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள்:- திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம்:- மஞ்சள்; எண்: 1.
அதிஷ்ட திகதிகள்:- 19, 23.

**கன்னி:**
அட்டமஸ்தானமும் மறைவுக்கிரகமும் சிக்கல்களை பிரச்சனைகளை உருவாக்கும். மனதில் கஷ்டங்கள் தோன்றலாம். உத்தர நட்சத்திரப் பெண்களுக்கு வெளிவட்டாரத்தால் பிரச்சனைகள் தலை தூக்கும்.
அதிஷ்ட நாட்கள்:- வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம்:- இளம்பச்சை; எண்: 7.
அதிஷ்ட திகதிகள்:- 20, 22.

**துலாம்:**
ஜென்ம வீட்டில் பார்வைக் கிரகங்களின் பலம் கூடுவதால், கிரக அனுகூலத்தால் பல சிறப்புகள் அடையலாம். வியாழன், புதன், சுக்கிரன் ஸ்தான நற்சிறப்புக் கொடுப்பதாலும், பணவசதி, உறவினர் சந்திப்பு புதிய தொழில் வாய்ப்புக்களுண்டு
அதிஷ்ட நாட்கள்:- திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம்:- வெள்ளை; எண்: 6.
அதிஷ்ட திகதிகள்:- 19, 24.

**விருச்சிகம்:**
மறைவுஸ்தான பலம் இருப்பினும் 5ம் இடத்தில் வியாழன் அருள் செய்யும் பலனும் 6இல் சனி உதவும் குணமும் கொண்ட வாரமாகக் காணப்படும். அத்துடன் உறவினர் சகோதரர்களைச் சந்திப்பார்கள். மன மகிழ்ச்சி ஏற்படும். கேட்டை நட்சத்திரக்காரருக்கு சிறப்பான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள்:- வெள்ளி, செவ்வாய்.
அதிஷ்ட நிறம்:- மருண்வர்ணம்; எண்: 3.
அதிஷ்ட திகதிகள்:- 18, 23.


**தனுசு:**
5ல் வியாழன் இலாபத்தையும் பண வரவையும் தரும். தடைப்பட்ட விடயங்கள் கைகூடும். கல்வி, தொழில் பரீட்சைகள் சிறப்பைத் தரும் உத்திராட, மூல நட்சத்திரருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள்:- புதன், சனி.
அதிஷ்ட நிறம்:- மஞ்சள்; எண்: 8.
அதிஷ்ட திகதிகள்:- 19, 22.

**மகரம்:**
4ல் சனி, வியாழன் நன்றாக இல்லாத காரணத்தால் குடும்பத்தில் பிரச்சனைகள் தலைதூக்கும். பண விடயங்களர்ல் சிக்கல்கள் உருவாகும். குடும்பத்தில் நல்ல விடயங்கள் தடைப்படும். கல்வி, தொழில் மந்தகதியில் இயங்கும். திருவோண நட்சத்திரப் பெண்களுக்கு சிறப்பு இல்லை.
அதிஷ்ட நாட்கள்:- வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம்:- நீலம்; எண்: 4.
அதிஷ்ட திகதிகள்:- 20, 22.

**கும்பம்:**
3ம் இடச் சனியும் வியாழனும் உள்ளதால் எடுக்கும் விடயங்கள் தடைதாமதத்துடன் நகரும். உடலில் நோய்துன்பங்கள் ஏற்படும். எதிர்ப்புக்கள், சிக்கல்கள் தொடரும். பூரட்டாதி நட்சத்திரருக்கு ஓரளவு நல்லபலன் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள்:- புதன், திங்கள்.
அதிஷ்ட நிறம்:- சிவப்பு; எண்: 9.
அதிஷ்ட திகதிகள்:- 18, 24.

**மீனம்:**
2இல் வியாழனும் 6இல் சுக்கிரனும் உள்ளதால் கல்வி, தொழில் உயர் வளர்ச்சி ஏற்படும். குடும்ப உறவினரின் பாராட்டுக் கிடைக்கும். பிரயாணங்கள் வெற்றி பெறும். தூர இடத்து செய்திகள் நன்மையைத்தரும்.
அதிஷ்ட நாட்கள்:- வியாழன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்:- இளநீலம்; எண்: 1.
அதிஷ்ட திகதிகள்:- 19, 23.

# நில்-கவனி-முன்னேறு



வாழ்க்கையை நன்கு அனுபவித்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருவதை நாம் நம்முடைய முக்கிய குறிக்கோளாக ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

தன் உள்ளத்திலேயே நிறைய சந்தோஷம் புதையுண்டு கிடப்பதை பெரும்பாலானவர்கள் கண்டு கொள்ளுவதில்லை. அவர்கள் சந்தோஷத்தை வெகு தூரத்தில் தேடுகிறார்கள். பலர் மலை வாசஸ் தலங்களுக்கும், அயல் நாடுகளுக்கும் சென்று சந்தோஷத்தைத் தேடுகிறார்கள். ஆடம்பரம் நிறைந்த ஐந்து நட்சத்திர விடுதிகளில் தங்கி அங்கு சந்தோஷத்தைத் தேடுகிறார்கள்.

துன்பங்களை மறந்து மகிழ்ச்சியைக் காண மதுவை நாடிச் செல்லுபவனும், மாதைத் தேடிச் செல்லுபவனும் சந்தோஷத்தையும் மன அமைதியையும் கண்டதாக சரித்திரமே கிடையாது. இப்படிப்பட்டவர்கள் முடிவில் தங்களுடைய சொத்து, பணம், ஆரோக்கியம் போன்றவைகளை இழந்து தாங்க முடியாத அவமானத்தைக் கண்டு, தங்களை அழித்துக் கொண்டு வந்திருப்பதைத்தான் நாம் கண்டு வந்திருக்கிறோம்.

வெளியில் எங்கேயாவது சந்தோஷத்தை தேடினால் முடிவில் ஏமாற்றம்தான் கிட்டும். ஒருவன் சந்தோஷத்தை தன் உள்ளத்திற்குள் உற்பத்தி செய்துகொள்ள வேண்டும்.

"என் சந்தோஷம், என் வெற்றி, என் வாழ்க்கை போன்றவைகளை அழிக்க முயற்சி செய்பவன் வெளியே எங்கும் இல்லை. அப்படிப்பட்டவன் எனக்கு உள்ளேயே வாழ்ந்து வருகிறான்!" என்று ஓரிஸன் ஸ்வெட் மார்டென் என்பவர் கூறியிருக்கிறார்.

"நமக்கு விருப்பமானவைகளைச் செய்யும்போதுதான் சந்தோஷம் கிடைக்கும் என்று அனைவரும் தவறாக நினைத்து வருகிறார்கள். அதற்கு மாறாக நாம் செய்வது அனைத்தையும் நமக்கு விருப்பமானவைகளாக மாற்றிக்கொள்ளும்போதுதான் நமக்குச் சந்தோஷம் கிட்டும்!" என்று ஜெ.எம். பெர்ரி என்பவர் கூறியிருக்கிறார்.

"முட்டாள் மகிழ்ச்சியைத் தூரத்தில் தேடுகிறான். அறிஞன் அதை தன் கால்களின் அருகிலேயே வளரும்படி பார்த்துக் கொள்கிறான்," என்று ஜேம்ஸ் ஓபன் ஹிம் என்பவர் கூறியிருக்கிறார்.

"சுவர்க்கம் வேறு எங்கும் இல்லை. அது நீங்கள் இருக்கும் இடத்திலேயே இருக்கிறது. மகிழ்ச்சியை வெளியில் தேடாதீர்கள். அதை எப்போதும் உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள்!" என்று ஒரு அறிஞர் கூறியிருக்கிறார்.

சந்தோஷம் நிறைந்த நல்ல காலம் வரும் என்று கைகளைக் கட்டிக்கொண்டு சந்தோஷத்திற்காகக் காத்திருந்து வாழ்க்கையை அனுபவிப்பதை தள்ளிப் போடாதீர்கள். உங்களுடைய உள்ளத்தில் சந்தோஷத்தை நிரப்பிக்கொண்டு சந்தோஷமான வாழ்க்கை வாழ இந்த வினாடியிலிருந்தே முயற்சி செய்யுங்கள்.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## பாற் பற்கள் பெற்றோர் கைகளில்

குழந்தைகளுக்கு முளைக்கும் பாற்பற்களைக் காப்பது பெற்றோர்கள் கையில்தான் உள்ளது.

'பல்போனால் சொல் போய்விடும்' குழந்தைகளின் பாற்பற்களைக் காப்பதற்குச் சில வழிமுறைகளைப் பெற்றோர் கண்டிப்



பாகப் பின்பற்றியாக வேண்டும்.

குழந்தை பால் குடித்து முடித்தவுடன் ஈரத்துணியால் வாயை நன்றாகத் துடைத்து விட வேண்டும். முதல் பல் முளைக்க ஆரம்பித்தவுடனே அதைக் கூடத் துலக்கி விட வேண்டும்.

முக்கியமாக பால் போத்தல்கள் மூலமாகத்தான் குழந்தைகளுக்கு பல் சொத்தை அதிகம் ஏற்படுகின்றது. அதனால் குழந்தை பால் குடித்து முடித்தவுடன் பால் போத்தலை வாயில் இருந்து எடுத்து விட வேண்டும்.

இனிப்புச் சேர்த்த பால், பழச்சாறு, தேன் போன்றவை கொடுத்தவுடன் குழந்தையின் வாயைத் தண்ணீரால் நன்றாகக் கழுவிவிட வேண்டும்.

இல்லையேல் வாயில் தங்கும் இனிப்பு சுவையினால் குழந்தைகளில் பற்களை கிருமிகள் தாக்கி அழித்துவிடும்.

குழந்தைகளைத் தூங்க வைப்பதற்காக சில பெற்றோர்கள் பால் போத்தலை குழந்தையின் வாயில் திணித்து விடுவது வழக்கம். இது குழந்தைக்குத் தீங்கு விளைவிக்கும்.

பற்களைத் தாக்கும் கிருமிகள் பல்வேறு நோய்களுக்கும் காரணமாக இருப்பதால் குழந்தைகளின் பற்களைக் காப்பது அவசியமாகும்.

## நகம் கடிக்கலாமா?

நம்மில் சிலருக்கு நகம் கடிக்கும் பழக்கம் இருக்கும். சிலரோ பதற்றத்தின் உச்சத்தில் நகத்திற்குப் பதிலாக விரல் நுனியைக் கூடக் கடித்துத் துப்பிக் கொண்டிருப்பார்கள்.



நகம் கடிக்கும் பழக்கத்தை நாம் விடுவதற்காக ஏதேதோ செய்து பார்த்தும் பயனில்லையே என வருத்தப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள். இனி நகம் கடிக்கும் ஆசை தோன்றும்போது நகம் தெரியாத வண்ணம் மூன்று நிமிஷம் கையை இறுக மூடிக் கொள்ளுங்கள்.

இலண்டனில் இதற்கென தனியாக ஆய்வு நடத்தி இந்த முறையைக் கண்டறிந்துள்ளனர். இந்த ஆய்வில் பங்குகொண்ட நகம் கடிக்கும் பிரியர்களுக்கு அவர்களது நகத்தை அழகான வண்ணங்களால் பூசி அழகு படுத்தினர்.

மற்றொரு பிரிவினருக்கு, நகம் கடிக்கத் தோன்றும் போதெல்லாம் 'டயரி'யைப் பிரித்து வைத்து எழுதச் சொன்னார்கள். ஆனால் இந்த இரு பிரிவினருக்கும் நகம் கடிக்கும் பழக்கம் அவ்வளவு எளிதில் போகவில்லை.

ஆனால் விரல்களை நகம் தெரியாதவாறு இறுக மூடிக்கொண்டிருக்கச் சொன்ன பிரிவினருக்கு நகம் கடிக்காமல் இருப்பது எளிதாக இருந்தது.

பலருக்குப் பயனளித்த மூடு வித்தை உங்களுக்குப் பயனளிக்காமலா போகும்?

## கண்ணே கண்ணே



கண் ஆரோக்கியத்திற்குத் தேவையான உணவுகள்:

குழந்தைகளுக்கு இயல்பாகவே இப்போது பார்வை சக்தி குறைவு ஏற்படுகின்றது. பார்வை சக்தியை அதிகரிக்கும் பல வகையான உணவுகளை வழங்க வேண்டும்.

* விட்டமின்-ஏ உணவில் அதிகம் சேர்க்கப்பட வேண்டும். கீரை வகைகள், முருங்கைக்காய், கரட், பால், முட்டை, மீன் இறைச்சி ஆகியவைகளை உணவில் அதிகம் சேர்க்க வேண்டும்.

* பெண்கள் கர்ப்பிணியாக இருக்கும் போதே மேற்கண்ட சத்துணவை சாப்பிட்டு வந்தால் குழந்தை பிறந்த பின்பும் ஆரோக்கியமாக இருக்கும்.

* கண் பார்வை குறைவான குழந்தைகளுக்கு அதிக கண் மையை பயன்படுத்தக் கூடாது. அவர்களது கண்கள் எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும்.

* துகள்கள், அழுக்கு, புகை அதிக அளவிலான சூரிய வெளிச்சம் அவர்களின் கண்களில் படக்கூடாது.

* குழந்தைகளுக்குத் தனியான துவாய், கைக்குட்டைகளைப் பயன்படுத்துங்கள்.

* ஆறு வயதுக்கு கீழுள்ள குழந்தைகளை அதிக நேரம் சிறிய எழுத்துக்களை வாசிக்க அனுமதிக்க வேண்டாம்.

* வெளிச்சமான அறையில் இருந்து தொலைக்காட்சி பார்க்க வேண்டும். தொலைக்காட்சிக்கும் குழந்தைக்கும் 10 அடி தூர வித்தியாசம் அவசியம்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை GB

பெயர்:......................

முகவரி:......................

......................

தொழில்:......................

கையொப்பம்:......................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 24-07-1999

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 96

புவனா

டயானாவின் மரணம் திட்டமிட்ட சதி என்று பரவலான சந்தேகங்கள் ஏற்பட்டன. அச் சந்தேகங்களைக் கற்பனை என்று சுலபமாக ஒதுக்கித் தள்ளிவிட இயலாது.

ஃபிரான்ஸ் விசாரணையாளர்களும் சதி என்ற கோணத்திலும் விசாரணைகளை முடுக்கி விட்டனர்.

டயானா, டோடி ஆகியோரது காரைச் செலுத்திய ஹென்றிபோல் பற்றியும் விலாவாரியாக ஆராயப்பட்டது.

அப்படி ஆராயப்பட்டபோது ஹென்றி போல் பற்றி நல்லவிதமான அபிப்பிராயங்கள் கிட்டவில்லை.

ஹென்றிபோல் பிரிட்டனில் பிறந்து வளர்ந்தவர். விமான ஓட்டியாக வரவேண்டும் என்ற ஆசையில் 16 வயதிலேயே பயிற்சிபெற்றார். ஆனால் அவரது கண்பார்வை சீரானதாக இல்லாமையால் விமான ஓட்டியாக முடியவில்லை.

ஹென்றிபோல் பற்றிய விசாரணையில் விசாரணையாளர்களைச் சந்தேகப்பட வைத்தது அவருடைய வங்கிக் கணக்கு.

விபத்து நடப்பதற்குச் சில நாட்கள் முன்பாக அவருடைய வங்கிக் கணக்கு திடீரென்று அதிகரித்திருந்தது. ஏராளமான பணம் அவருடைய கணக்கில் இருந்தது.

இந்தளவு பணம் ஹென்றிபோலிடம் எப்படிவந்தது? என்று விசாரணையாளர்கள் குழம்பிப் போனார்கள்.

ஏதாவது உளவு நிறுவனம் ஒன்றுக்கு இரகசியமாகத் தகவல் கொடுக்கிறாரா? அல்லது டோடி போன்ற பணக்காரர்களின் அந்தரங்கங்கள் பற்றி வேறு யாருக்காவது தகவல் கொடுத்து உழைத்தாரா? என்று பல்வேறு கோணங்களில் ஆராய்ந்தனர்.

இதனையடுத்து கிடைத்த இன்னொரு தகவலும் ஹென்றி போல் பற்றிய மர்மத்தை அதிகரித்தது.

1997இன் ஆரம்பத்தில் 20 வயதான ஓர் அழகியுடன் ஹென்றிபோலுக்கு தொடர்பு ஏற்பட்டது.

அந்த அழகியும் ஹென்றிபோலும் பல முறை தனியாக சந்தித்தனர். ஆனால் அந்த அழகி பற்றி தன் நண்பர்களிடம் ஹென்றி போல் எதுவும் கூறவில்லை.

தன் பெண் நண்பிகள் பற்றி சிநேகிதர்களிடம் மறைக்காது கூறிப் பெருமைப்படும் ஹென்றி போல், அந்த அழகி பற்றி மட்டும் ஏன் மறைத்தார்? என்பது புதிராக இருக்கிறது.

அந்த அழகி பற்றிய தகவலைத் திரட்ட முயன்றபோது மேலும் சந்தேகங்கள் எழுந்தன.

அவள் பிரிட்டனைச் சேர்ந்தவள். ஹென்றிபோல் இறந்த சோகத்தில் அவரது பெற்றோர்கள் இருந்தபோது, அவர்களிடம் சென்றிருக்கிறாள்.

ஒரு சாவியை ஹென்றிபோலின் பெற்றோரிடம் கொடுத்துவிட்டு, "இனி இந்தச் சாவி எனக்கு தேவையாக இருக்காது!" என்று கூறிவிட்டுப் போய்விட்டாள்.

தனது பெயரைக்கூட அந்த அழகி கூறவில்லை என்பதுதான் மர்மம். பிரிட்டன் உளவுப் பிரிவைச் சேர்ந்தவளாக இருப்பாளோ? என்று விசாரணையாளர்கள் சந்தேகித்தனர்.

### உளவுச் சதி?

எம்.ஐ.5, எம்.ஐ.6 ஆகிய பிரிட்டன் உளவு நிறுவனங்கள்மீதே சந்தேகம் தோன்றியது. பிரிட்டிஷ் அரச குடும்பத்தினருக்காக டயானாவை தீர்த்துக்கட்ட ஏதாவது ஒரு பிரிட்டன் உளவு நிறுவனமே சதி செய்திருக்கலாம் என்று பரவலான புகார்கள் கூறப்பட்டன.

பிரிட்டனின் உளவுப் பிரிவுகளில் ஒன்றான எம்.ஐ.5 நிறுவனத்தில் உயர் அதிகாரியாக பணியாற்றிய ஒருவரால் 'த ஃபெதர்மான்' என்றொரு நூல் எழுதப்பட்டது.

அந்த நூலில் பிரிட்டன் உளவு நிறுவனங்கள் மேற்கொண்ட இரகசியச் சதிகள், கொலைகள் பற்றி கூறப்பட்டிருந்தது.

1977 முதல் 1990 வரை 14 வருடங்களில் பல கொலைகள் செய்யப்பட்டன. 'கிளினிக்' என்ற பெயரில் தனியார் நிறுவனம் ஒன்றை உருவாக்கி, அதன் மூலமாக கொலைகள் கச்சிதமாகச் செய்யப்பட்டன.

அக் கொலைகள் பற்றி அந்த நூல் வெளியாகும்வரை யாருக்கும் சந்தேகமே ஏற்படவில்லை.

அந்த நூலைப் படித்தவர்களுக்கு டயானாவையும் பிரிட்டிஷ் உளவுத்துறை சதி செய்து கொன்றிருக்கலாம் என்பது



நம்பகக்கூடியதாகவே இருந்தது.

### புதிய தகவல்

டயானா, டோடி ஆகியோர் சென்ற காரை ஃபியட் கார் ஒன்று மிக வேகமாகப் பின்தொடர்ந்தது. அந்த வெள்ளை நிறக்கார் தான் டயானா சென்ற பென்ஸ்மீது மோதி விட்டு சென்றது என்று படப்பிடிப்பாளர் சிலர் கூறினார்கள்.

இதனையடுத்து அந்த வெள்ளைநிற

## பின்தொடர்ந்த ஃபியட்



ஃபியட் காரைத் தேடி ஃபிரான்ஸ் பொலிசார் வலை விரித்தனர்.

ஃபியட் கார்கள் ஏதாவது சமீபத்தில் திருத்த வேலை செய்துள்ளனவா? நிறம் மாற்றப்பட்டுள்ளதா? போன்ற தகவல்களும் துருவப்பட்டன.

இன்னொரு புதிய தகவலும் வெளியாகியது. டயானா சென்ற பென்ஸ் காரை விபத்தில் சிக்கவைக்க வேண்டுமானால் என்ன செய்திருப்பார்கள்? என்று அத் தகவல் விளக்கியது.



எலத்திரோனினால் இயங்கும் ஒரு சிறு பெட்டியை குறிப்பிட்ட காரின் இயந்திரப் பகுதிக்குள் வைத்துவிட வேண்டும்.

பின்னர் இக் காரின் முன்னாலோ, பின்னாலோ ஒரு குறிப்பிட்டளவு தூரத்தில் ரிமோட் கொண்ரோலுடன் செல்ல வேண்டும்.

குறிப்பிட்ட நேரத்தில் 'ரிமோட் கொண்ரோலை அழுத்தியதும் கார் நிலை தடுமாறும். தறிகெட்டு ஓடி எங்காவது மோதும். இதனைக் காண்பவர்களுக்கு சாதாரண விபத்துப் போன்றே தெரியும்.

இப்படித்தான் டயானா சென்ற பென்ஸ் காரும் நிலைதடுமாறும்படி செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது.

ஆனாலும் வெள்ளை நிற ஃபியட் கார் பற்றிய மேலதிக தகவல்களை ஃபிரான்ஸ் பொலிசாராலும் பெறமுடியவில்லை.

லே விண்டர் என்பவர் கூறிய தகவலும் பரபரப்பாக பத்திரிகைகளில் வெளியாகியது.

அமெரிக்காவின் சி.ஐ.ஏ உளவு நிறுவனமும், பிரிட்டனின் எம்.ஐ.6 உளவுப் பிரிவும் இணைந்தே டயானாவையும், டோடியையும் கொன்றனர்.

இத் தகவலுக்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் லே விண்டர் கூறினார்.

அமெரிக்கரான லே விண்டர் கலிபோர்னியாவில் உள்ள சட்ட வல்லுநர் ஒருவரிடமே இத்தகவல்களைக் கூறினார்.

அந்த சட்டவல்லுநர் டோடியின் தந்தையான அல் ஃபாயிட்டுடன் தொடர்பு கொண்டு மேற்படி தகவல்களைக் கூறினார்.

டோடி, டயானா இருவரும் பலியானதற்குக் காரணம் சதி முயற்சியே என்று அல் ஃபாயிட் உறுதியாக நம்பியிருந்தார். அதனால் லே விண்டர் கூறிய தகவல்கள் அவருக்குத் தேவையாக இருந்தன.

ஆதாரமான ஆவணங்களை கையளிக்க ஒரு கோடி பவுண் தரவேண்டும் என்று லே விண்டர் பேரம் பேசினார். 15 ஆயிரம் பவுண் முற்பணமாகக் கொடுக்கப்பட்டது.

மிகுதிப் பணத்தை ஒஸ்ட்ரியா நாட்டின் தலைநகரான வியன்னாவில் வைத்துத் தருவதாகவும், அங்கு ஆவணங்களை கையளிப்பது என்றும் முடிவானது.

லே விண்டர் வியன்னா சென்றபோது ஒஸ்ரியா பொலிசாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். அவரிடமிருந்த ஆவணங்களும் கைப்பற்றப்பட்டன. அத்தனையும் போலியாக தயாரிக்கப்பட்டவை என்ற உண்மையும் வெளியானது.

கொலம்பியா பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவரின் மகனான லே விண்டர் சி.ஐ.ஏ. முகவராக சில காலம் பணியாற்றியவர். பின்னர் அதிலிருந்து விலகி சி.ஐ.ஏ.யின் பெயரில் மோசடிகளில் ஈடுபட்டார் என்பது அம்பலமானது. அல் ஃபாயிட்டுக்கு 15 ஆயிரம் பவுண் நஷ்டம்.

உண்மையில் டயானா விபத்து கொலையா? அல்லது வெறுமனே விபத்துத்தானா? சந்தேகம் தீர்ந்தபாடில்லை.

டயானாவின் முக்கியமான இறுதி நிகழ்வுடன் அடுத்தவாரம் இத் தொடர் நிறைவுபெறுகிறது.

(அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### ஹொரணை வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | திருமதி சுமித்திரா டேவிட், களுப்பானை டிவிஷன், பேர்த் தோட்டம், ஹொரணை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## அம்மன் ஜுவல்ஸ்–முரசு இணைந்து வழங்கும்

### வைர மோதிரப் போட்டி

- முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாகக் காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
- பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
- இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.

அம்மன்–முரசு கூ வைர மோதிரப் போட்டி





> சக்தி தனக்கே கருவியாக்கு-அது
> தாரணியும் மேலுலகுந் தாங்கும்-தோள்
> சக்தி தனக்கே கருவியாக்கு-அது
> சக்தி பெற்று மேருவென ஓங்கும்!
>
> -சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# வாசத்துக்கு வாசம்

முன்னொரு காலத்தில் மேட்டூர் என்ற ஊரில் குட்டி என்பவன் வசித்து வந்தான். அவன் மிகவும் ஏழை. அடுத்த ஊரில் உள்ள தனது நண்பனைக் காண அவன் சென்று கொண்டிருந்தான்.

மதியம் சாப்பிடுவதற்காக அவன் சாப்பாடு கட்டி வந்திருந்தான். நடந்து வந்த களைப்பு. நல்ல வெய்யில் வேறு. பசி வாட்டியது.

ஒரு மரத்தடியில் அமர்ந்தான். அந்த மரத்திற்குப் பக்கத்தில் ஒரு உணவு விடுதி இருந்தது. மரத்தடியில் அமர்ந்து சாப்பாட்டுப் பார்சலைப் பிரித்தான். வெறும் சோறு மட்டும்தான் இருந்தது. வேறு ஒன்றும் இருக்கவில்லை.

உணவு விடுதிக்குள் இருந்து பொரித்த மீன் வாசம் வந்து கொண்டிருந்தது. 'ஆஹா!' என்று மீன் வாசத்தை மூக்கு நிறைய இழுத்துக் கொண்டு, சோற்றைக் கவளம் கவளமாகச் சாப்பிட்டான்.

சாப்பிட்டு முடிந்ததும் 'ஏவ்!' என்று ஏப்பம் விட்டான். இதையெல்லாம் உணவு விடுதிக்காரன் உட்கார்ந்திருந்தபடி நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான்.

சாப்பிட்டு முடிந்த குட்டி, உணவு விடுதிக்காரனிடம் தண்ணீர் கேட்டான். அவனும் ஒரு செம்பில் தண்ணீர் எடுத்துக் கொடுத்தான்.

தண்ணீரைக் குடித்து விட்டு "மிகவும் நன்றி!" என்று புறப்பட எத்தனித்தான் குட்டி.

"எங்கே போகிறாய்? எடு ஐந்து ரூபாய்!" என்றான் விடுதிக்காரன்.

அதிர்ந்து போன குட்டி, "ஒரு செம்புத் தண்ணீருக்கு ஐந்து ரூபாயா?" என்று கேட்டான்.

"தண்ணீருக்கு இல்லையப்பா. பத்து மீனைப் பொரிக்கிற வரைக்கும் அந்த வாசத்தை இழுத்து இழுத்து சாப்பிட்டாயே. அதற்குத்தான் ஐந்து ரூபாய்!" என்று மிரட்டினான் உணவு விடுதிக்காரன்.

இருவருக்குமிடையே தகராறு நீடித்தது. இறுதியில் இருவரும் அவ்வூர்த் தலைவரிடம் சென்றார்கள். ஊர்த்தலைவரிடம் தமது பிரச்சனையை இருவரும் தனித்தனியே சொன்னார்கள்.

இருவரையும் விசாரித்த ஊர்த்தலைவர், குட்டியை அழைத்து,

"தம்பி! ஐந்து ரூபாய் கொடு" என்று கேட்டார். குட்டியும் தன்னிடமிருந்த ஒரே ஒரு கசங்கிய ஐந்து ரூபாய்த் தாளைக் கொடுத்தான்.

காசை வாங்கிய ஊர்த்தலைவர் இப்போது உணவு விடுதிக்காரனை அழைத்தார்.



உணவு விடுதிக்காரன் அருகில் வந்ததும், ஐந்து ரூபாய்த் தாளை அவனது மூக்கின் முன் நீட்டி,

"உம்...... வாசத்தை இழுத்து இழுத்துப் பிடியுங்கள்!" என்று ஊர்த்தலைவர் சொன்னார். உணவு விடுதிக்காரன் திகைத்து நிற்க, "உம் வாசம் பிடிங்க!" என்று மறுபடி சொன்னார் ஊர்த்தலைவர்.

வேறு வழியின்றி ரூபாய்த் தாளின் வாசத்தைப் பிடித்தான் உணவு விடுதிக்காரன். பின் அவனைப் பார்த்து,

"வாசத்துக்கு வாசம் சரியாகப் போச்சு" என்று சொல்லிவிட்டு, குட்டியிடம் ஐந்து ரூபாய்த் தாளைக் கொடுத்து அனுப்பினார்.

மிகுந்த ஏமாற்றத்தோடும் அவமானத்தோடும் உணவு விடுதிக்காரன் திரும்பிச் சென்றான்.

# அதிசயம் - ஆனால் உண்மை!



← இந்தியாவில் உள்ள பைராம் காட் பகுதியில் அமராவதி ஏரி ஓராண்டு நீர் நிரம்பி இருந்தால் அடுத்த இரண்டு வருடம் நீரின்றி வரண்டிருக்கும்.



→ இந்தியாவை ஆண்ட பிரதாப் கட் என்ற மன்னன் தான் தோற்கடித்த அரசனை அவமானப்படுத்த, தோற்கடித்த மன்னனின் நாட்டிற்கு நரி ஒன்றை மன்னனாக்கினான். அந்த நரி 12 ஆண்டுகள் ஆட்சி புரிந்தது.



1954ல் இங்கிலாந்தின் ஸிலி தீவின் அருகே காணப்பட்ட ஸீல் எனப்படும் கடல்நாய் தன் கழுத்தில் மோட்டார் டயர் ஒன்றை அணிந்திருந்தது.

# பாறைப் படிவங்கள்



இங்கிலாந்தில் டோவர் என்ற மலைப் பாங்கான இடம் உள்ளது. கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள இந்த இடத்தில், கடல் வாழ் உயிரினங்களின் இறந்த உடல்கள், பாறையோடு பாறையாகப் படிந்துள்ளன.

இலட்சக்கணக்கான வருடங்களுக்கு முன் இந்தப் படிவங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மலை இயற்கையிலேயே அடுக்குப் பாறைகளினால் ஆனது. ஒவ்வொரு அடுக்கிலும் கடல் வாழ் உயிரினங்களின் எலும்புக் கூடுகள் பதிந்துள்ளன. பாறையோடு பாறையாக இறுகிப் போயிருப்பதால் தனியாகப் பிரித்தெடுக்க முடியாத நிலையில் உள்ளன.

# ஏன் தெரியுமா?



அமாவாசை நாட்களில் கடல் கொந்தளிப்பு அதிகம் ஏன் என்று தெரியுமா?

சூரியனின் ஈர்ப்பு சக்தி காரணமாக பூமி சூரியனைச் சுற்றி வருகிறது. அதே போல் பூமியைச் சந்திரனும் சுற்றி வருகிறது.

சந்திரன்மீது பூமியின் ஈர்ப்பு சக்தி உள்ள அதே நேரத்தில், சந்திரனும் சிறிய அளவில் பூமியின் மீது ஈர்ப்பு சக்தியைச் செலுத்துகின்றது.

அமாவாசையன்று சூரியன், சந்திரன், பூமி என்ற வரிசையில் இந்த மூன்றும் அமைந்துள்ளன. சூரியன், சந்திரன் ஆகிய இரண்டும் சேர்ந்து ஒரே புறத்திலிருந்து ஈர்ப்பு சக்தியைச் செலுத்துவதால், அன்றைய தினம் கடலின் கொந்தளிப்பு அதிகமாக இருக்கிறது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **24.07.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **305**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 303

**பரிசுக்குரியவர்:**
க. சுசாந்தி,
பாடசாலை நு/வ/இராகலை தமிழ் மகா வித்தியாலயம்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செல்வன் ச. குணதீபன், நு/ நட்போர்ன், த.வி., டய்கம. | செல்வி ஷர்மினா கிரிதரன், சைவமங்கையர் கழகம், வெள்ளவத்தை, கொழும்பு-6. |
| த. சுமித்திரன், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டி. | பே. தினேஸ்குமார், கோளாவில் விநாயகர் மகாவித்தியாலயம், அக்கரைப்பற்று. |
| ஷி ஃபனா முஸம்மில், ஆமினா தேசிய கல்லூரி, மாத்தளை. | க. வினோத் ராஜ், தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. |
| நிஷாந்தினி ரட்ணம், இ/ பலாங்கொடை த.ம.வி, பலாங்கொடை. | செல்வி எம்.வை. ஸஹாருவன், மதீனா முஸ்லிம் வித்தியாலயம், கனேதேன். |
| ஏ.எம். ஸாமிலா றுமானா, பு/ எருக்கலம்பிட்டி முஸ்லிம் ம.வி, பாலாவி. | செல்வி சன்ரா விஜேக்குமார், மெதடிஸ்த கல்லூரி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. |

# வரவேற்பு

எமது வீடுகளுக்கு உறவினர்கள் அல்லது நண்பர்கள் வரும்போது வணக்கம் சொல்லி வரவேற்போம். எமது அண்டை நாடான இந்தியாவிலும் இப்படித்தான் வரவேற்பார்கள்.

சில நாடுகளில் உள்ள மக்கள் எப்படி வரவேற்பார்கள் என்பதையும் தெரிந்து கொள்ளுங்களேன்.

**ஜப்பானியர்கள்:**

விருந்தினர் வந்தவுடன் முழந்தாளிட்டு தரை மட்டும் குனிந்து வரவேற்பார்கள். வீட்டிற்கு வந்தவர்களும் பதிலுக்கு அப்படியே செய்வார்கள்.

**சோவியத் யூனியன்:**

இவர்கள் உறவினர் அல்லது நண்பர்களைச் சந்திக்கும்போது ஒருவர் கன்னத்தை உரசி வரவேற்பார்கள். செக் நாட்டிலும் இப்படித்தான் செய்வார்கள்.

**அரபுக்காரர்கள்:**

அரபு நாடுகளில் உள்ளவர்கள் தமது நண்பர்களைச் சந்தித்துக் கொள்ளும்போது ஒருவருடைய மூக்கு நுனியுடன் மற்றவரது மூக்கு நுனியை உரசி வரவேற்பர். அந்நியரிடம் இவ்வாறு செய்யமாட்டார்கள்.

# கண்ணீர்ச் செய்திகள்



ஒரு சொட்டுக் கண்ணீரில் 98.2 சதவீதம் வெறும் தண்ணீர்தான். புரதம், குளோரைட், குளுக்கோஸ், சோடியம், பொட்டாசியம் ஆகிய இரசாயனப் பொருட்களும் கண்ணீரில் உள்ளன. இதனால்தான் கண்ணீர் உப்புக் கரிக்கிறது.

'லிசாசிமி' என்ற பொருளும் எமது கண்ணீரில் இருக்கிறது. இது தொற்று நோய்க் கிருமிகளைக் கொல்லக்கூடியது.

நாள்தோறும் கண்களில் 13 சொட்டு கண்ணீர் சுரக்கின்றது. அதில் 7 சொட்டுக்கள் ஆவியாகிவிட, மீதி 6 சொட்டுக்கள் மூக்கிற்குச் செல்கின்றன.

# இரு அர்த்தங்கள்

வட அயர்லாந்தில் ஒரு பிடி வைக்கோலை வீட்டுவாசலில் செருகி வைத்திருந்தால் அந்த வீட்டில் நாய் இருக்கிறது என்று அர்த்தம். இதே போல் இங்கிலாந்தில் ஒரு பொருளை மற்றவர்கள் பார்வையில் படும்படி வைத்து அதன் மேல் வைக்கோலை வைத்திருந்தால் அப்பொருள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது என்று அர்த்தம்.

# பெயர் வரக் காரணம்



இரசிகர்களை விசிறிகள் (FANS) என்று சொல்கிறார்கள். இரசிகருக்கும் விசிறிக்கும் என்ன தொடர்பு?

1933ம் ஆண்டு அமெரிக்காவில் சில நடிகர்களுக்கு ஏராளமான இரசிகர்கள் இருந்தார்கள். அவர்கள் தமது அபிமான நடிகர்களின் ஆடை அலங்காரங்கள், சிகையலங்காரங்களை அப்படியே பின் பற்றினர்.

இரசிகர்களின் இந்த வெறியைக் கண்ட சில பெரியவர்கள், அவர்களை FANATICS(ஃபானரிக்ஸ்-பைத்தியக்காரர்கள்) என்று வேடிக்கையாக அழைத்தனர். இது சுருங்கி FAN (ஃபான்) என்றும் தமிழில் விசிறி என்றும் மாறி விட்டது.

# தாழும் நகரம்

மெக்ஸிக்கோ நகரம், பூமிக்கடியில் ஏராளமாக நீர் உள்ள இடத்தின் மீது அமைந்துள்ளது. அங்கு வசிக்கும் ஒன்றரைக் கோடி மக்களுக்குத் தேவைப்படும் நீர் நிலத்தின் அடியில் இருந்து எடுக்கப்படுவதால் மெக்ஸிக்கோ நகரம் வருடத்துக்கு ஆறு அங்குலம் வீதம் தாழ்ந்து போய்க் கொண்டிருக்கிறது.

# பைத்தியகார மன்னன்



ஹிலியோ காபலஸ் என்பவன் ரோமா புரியை ஆண்ட மன்னர்களில் ஒருவன். இவன் கி.பி.218-222 வரை ரோமாபுரியை ஆண்டான்.

இவன் கோமாளியா, கொடூரமானவனா என்று கூறமுடியாத அளவிற்கு இவனுடைய நடத்தை இருந்தது. இவன் பிரமுகர்களை விருந்துக்கு அழைப்பான். கண்ணாடி, சலவைக்கல் ஆகியவற்றைத் தூளாக்கி உணவாகப் பரிமாறச் செய்வான். அதை விருந்தினர்கள் சாப்பிடும்படி கட்டாயப்படுத்துவான்.

உணவருந்தியவர்களை சிங்கம், கரடிகள் உள்ள கூண்டுகளில் அடைக்க உத்தரவிடுவான். பிரபுக்களுக்கு தவளை, பாம்பு, தேள் போன்றவற்றைப் பரிசாக அனுப்பி வைப்பான்.

தான் குளிப்பதற்கு நீர்த்தொட்டி ஒன்றை அமைக்கச் சொல்வான். ஒரே ஒரு முறை அதை உபயோகப்படுத்தி விட்டு, அதை இடித்துவிட உத்தரவிடுவான்.

இத்தகைய பைத்தியகாரச் செயல்களால் அரசாங்கப் பணம் காலியாகிவிட்டது. அவனுடைய கொடூரத்தைச் சகிக்காத அவனது பாட்டி, மன்னனின் மெய்காப்பாளனைக் கொண்டே கொலை செய்து விட்டாள்.

### இதுவரை

**பாக்கியத்தின் மகள் வர்ணாவின் நாய் பிங்கிக்கு 'டிஸ்டெம்பர்' எனப்படும் கொடிய நோய் வருகிறது. அதனை காப்பாற்றவே முடியாது என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர். ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர் பிழைக்கிறது.**

**இதேவேளை, சொர்ணம், நீலமேகம் தம்பதியின் மகள் பூவிழி கொலையாகிறாள். பொலிஸ் விசாரிக்கிறது.**

**இனி...**

# 12 கையில் சிக்கிய மின்னல்

ரத்னவேல் ஈஸ்வரை வியப்பாகப் பார்த்தார்.

"மறுபடியும் வர்ணாவோட வீட்டுக்குப் போலாம்ன்னு சொல்றீங்களா?".

"ஆமா..."

"வேண்டாம் ஈஸ்வர்..."

"ஏன்?"

"என்னைப் பொறுத்தவரைக்கும் இது தேவையில்லாத அதாவது நாம, அக்கறை எடுத்துக்கொள்ள முடியாத அளவுக்குள்ள விஷயம்... இதை இக்னோர் பண்ணிட்டு நம்ம வேலையைப் பார்ப்போம்."

"இல்லை ரத்னவேல்... சில விஷயங்கள் நமக்கு குழப்பமாயிருந்தா அதைத் திரும்பவும் ஒரு தடவை பார்த்துத் தெளிவுபடுத்திக்கிறதுல எந்தத் தப்பும் இல்லை. நீங்களும் நானும் மறுபடியும் வர்ணா வீட்டுக்குப் போவோம். வீட்டுக்குள்ளே எது மாதிரியான சூழ்நிலை நிலவுதுன்னு பார்க்கலாம்."

"ரெண்டு டாக்டர்ஸும் எதுக்காக மறுபடியும் நம்ம வீட்டுக்கு வர்றாங்கன்னு வர்ணாவும், அவளோட அம்மாவும் சந்தேகப்பட மாட்டாங்களா?"

"உடனே போக வேண்டாம். ரெண்டு நாள் கழிச்சு திடீர்னு வீட்டுக்குப் போவோம். கேட்டா நாய் எப்படியிருக்குன்னு பார்க்கறதுக்காக வந்தோம்னு சொல்லிவிடலாம்."

ரத்னவேல் தலையாட்டினார்.

"சரி... போய்ப் பார்ப்போம். பட், பார்க்கிறதோடு விஷயத்தை நிறுத்திக்குவோம். மேற்கொண்டு எதுவும் கிளறக்கூடாது."

"பயப்படறீங்களா?"

"இது பயம் கிடையாது. தேவையில்லாத ரிஸ்க் எதுக்கு...? இந்த நாய்க்குட்டி விவகாரம் ஒரு ஈவில் பவராக இருந்துட்டா வீ ஹேவ்... டுஃபேஸ் த ப்ராப்ளம்ஸ் ஆரம்பத்திலேயே ஒதுங்கிடறது பெட்டர் இல்லையா..."

"வர்ணாவோட வீட்டுக்குள்ளே ஒரு ஈவில் பவர்தான் இருக்கும்னு உறுதியா நம்பறீங்களா?"

"ஷ்யூர்...நோ...டவுட்! இந்த நாயோட உடம்புக்குள்ளே இருக்கிற ஊதா நிற இரத்தம் ஒண்ணே போதும். இது ஒரு ஈவில் பவர்தான்னு சொல்றதுக்கு..."

"சரி...! இதையெல்லாம் வர்ணாகிட்ட சொல்லி அவளைப் பயப்படுத்தாதீங்க... அதுக்கப்புறம் அந்த நாயை அவகையால கூடத் தொட மாட்டா..."

"எனக்கு இதெல்லாம் தெரியாதா என்ன...? வர்ணாகிட்ட எப்படிப் பேசணுமோ அப்படிப் பேசிக்கிறேன்..."

இருவரும் அறையைவிட்டு வெளியே வந்தார்கள். வர்ணா முன்னறையில் ஜன்னலுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து வெளியே வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க, பிங்கி அவளுடைய கால்களுக்குக் கீழே விளையாடிக் கொண்டிருந்தது.

டாக்டர்களைப் பார்த்ததுமே சின்ன தாய்க் குரைத்துவிட்டு மறுபடியும் தன் விளையாட்டை ஆரம்பித்தது.

வர்ணா எழுந்தாள்.



"டாக்டர் நாய்க்கு எந்த ஆபத்தும் இல்லையே...?"

"ஒரு ஆபத்தும் கிடையாது."

"பின்னே ப்ளட் ஊதா நிறத்தில் இருந்ததே...?"

"அது இம்ப்யூர்ட் ப்ளட். டிஸ்டெம்பர் நோயால் பாதிக்கப்பட்ட நாய்களுக்குக் கொஞ்ச நாட்கள் வரைக்கும் ப்ளட் இந்த மாதிரி ஊதா நிறத்தில் இருக்கும். பயப்பட வேண்டியதில்லை. போகப் போகச் சரியாயிடும்."

"மறுபடியும் நாய்க்கு அந்த டிஸ்டெம்பர் நோய் வந்துடாதே டாக்டர்...?"

"வராது..."

"தேங்க் யூ டாக்டர்..." முகத்தில் சந்தோஷம் மின்னச் சொன்ன வர்ணா, நாயை இரண்டு கைகளாலும் அள்ளி எடுத்துக் கொண்டாள்.

"நான் கிளம்பறேன் டாக்டர். அம்மா வீட்ல தனியா இருப்பாங்க. மறுபடியும் நாயை ஏதாவது டெஸ்ட்டுக்குக் கொண்டு வரணுமா டாக்டர்...?"

"அதெல்லாம் வேண்டாம்மா. ரெண்டு நாள் கழிச்சு நானும், இந்த டாக்டரும் உன்னோட வீட்டுக்கே வர்றோம். நாயை அங்கே வெச்சே டெஸ்ட் பண்ணிப் பார்த்துக்கலாம்..."

"தேங்க் யூ வெரிமச் டாக்டர். ஒரு நாய்க் குட்டிக்காக நீங்க எடுத்துக்கற அக்கறைக்காக அயாம் வெரி கைண்ட் ஆஃப் யூ.."

வர்ணா கிளம்பினாள். பிங்கியை அணைத்துக் கொண்டு வேக வேகமாய் தன் வீட்டைநோக்கி நடை போட்டாள்.

பத்து நிமிஷ நடை.

அவள் குடியிருக்கும் தெரு வந்தது. தெருவுக்குள் நுழையும்போதே வர்ணாவுக்குள் ஒரு அதிர்ச்சி அலை அடித்தது.

அவள் வீட்டு வாசலுக்கு முன்னால் ஒரு பொலிஸ் ஜீப் நின்றிருந்தது.

கொஞ்சம் தள்ளி கறுப்பு பெயிண்டில் குளித்த ஒரு மார்ச்சுவரி வேன்.

தெரு முழுக்க ஜனம். மாடி ஜன்னல்களில் கவலையாய் முகங்கள்.

❋

**வி**ஷால் எழுந்து ஜன்னல் வழியாய்ப் பார்த்தான்.

கோபி வியர்த்த முகமாய் வேகவேகமாய் போர்டிகோ மாடியேறி வந்து கொண்டிருந்தான்.

விஷால் இன்ஸ்பெக்டர் பலராமனை ஏறிட்டான். "ஸார்... கோபியைத் தேடிக்கிட்டு நாம போகவேண்டியது இல்லை. அவனே வந்துகிட்டு இருக்கான்..."

கோபி உள்ளே நுழைந்தான். கலைந்த தலை, சிவப்பேறிய கண்கள். எண்ணெய் பூசிய தினுசில் வியர்த்த முகம். உள்ளே நுழைந்த கோபி இன்ஸ்பெக்டர் பலராமனைப் பார்த்ததும் வெகுவாய் முகம் மாறினான்.

விஷால் சற்றே பதற்றமான குரலில் சொன்னான். "வா...கோபி... இன்ஸ் பெக்டர் கிட்ட உன்னைப் பத்தித்தான் சொல்லிட்டிருக்கேன். உனக்கு விஷயம் தெரியுமா? பூவிழியை யாரோ மர்டர் பண்ணிட்டாங்களாம்... அது சம்பந்தமான விசாரணைக்காகத்தான் இன்ஸ்பெக்டர் வந்திருக்கார்..."

கோபி கண்கள், குரல் தழதழத்தான். "நானும் அந்த விஷயத்தைக் கேள்விப்பட்டுத்தான் உன்கிட்ட விஷயத்தைச் சொல்லலாம்னு வந்தேன்."

பலராமன் கோபியிடம் நிமிர்ந்தார். "பூவிழி கொலை செய்யப்பட்ட விஷயம் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"கொஞ்சம் நேரத்துக்கு முந்தி பூவிழி வீட்டு வழியா எதேச்சையா போனேன்: அவ வீட்டுக்கு முன்னாடி ஷாமியானா பந்தல் போட்டு நாற்காலிகளில் நிறையப்பேர் உட்கார்ந்திருந்தாங்க. பூவிழி வீட்ல இருக்கிற பெரியவங்க யாராவது தவறியிருப்பாங்கோன்னு நினைச்சு ஒரு பெட்டிக்கடைக்காரர்கிட்ட விபரம் கேட்டேன். இறந்து போனது பூவிழிதான்னு அவர் சொன்னதும் நான் அப்படியே ஆடிப்போயிட்டேன்... பூவிழி கொலை செய்யப்பட்ட விவரத்தை பெட்டிக்கடைக்காரர் மூலமாகவே தெரிஞ்சுக்கிட்டு அதை விஷால் கிட்ட சொல்றதுக்காக ஆட்டோ பிடிச்சு வர்றேன்..."

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்**

பலராமன் தன் வலது சுட்டுவிரலை உயர்த்தினார்.

"லுக் மிஸ்டர் கோபி...! பூவிழி மர்டர் சம்பந்தமா நான் இப்போ கேட்கப்போகிற கேள்விகளுக்கு உங்ககிட்டயிருந்து எனக்கு உண்மையான பதில்கள் மட்டுமே வேணும். பொய்யான பதில்களைச் சொன்னா மாட்டிக்கப்போறது நீங்க தான். ஏன்னா இந்த கேஸ்ல முக்கியமான நபர் நீங்க."

கோபி கை கூப்பினான்.

"ஸார்... பூவிழி மேல நான் ஆசைப்பட்டு, அவளைக் காதலிச்சது உண்மை. ஆனா அவ என்னைக் காதலிச்சாளா இல்லையான்னு எனக்குத் தெரியாது. பூவிழிகிட்ட நான் இதுவரைக்கும் பேசினது கூட இல்லை."

"தினசரி அவளை ஃபாலோ பண்ணிப் போவீங்களா?"

"தினசரி கிடையாது ஸார். வாரத்துல ஒரு தடவை இல்லேன்னா ரெண்டு தடவை..."

"நீங்க ஃபாலோ பண்ணினா பூவிழியோட ரியாக்ஷன் எப்படியிருக்கும்...?"

"ஒரு ரியாக்ஷனும் இருக்காது ஸார். என்னைப் பார்க்கிற பார்வையில் கோபமும் இருக்காது. காதலும் இருக்காது. அவ கோபமாகப் பார்த்திருந்தாலோ அல்லது திட்டியிருந்தாலோ என்னிக்கோ அவளை ஃபாலோ பண்றதை விட்டிருப்பேன்."

"சரி... நேத்திக்குக் காலையில் பூவிழியை ஃபாலோ பண்ணீங்களா?"

"ஆமா..."

"அவ எங்கே போனா..."

"ஆபீசுக்குத்தான்..."

"பூவிழி ஆபீசுக்கே வரலைன்னு அந்த ஆபீஸ்ல சொல்றாங்களே..."

"அது பொய் சார்... நானும் பூவிழியும் ஒரே பஸ்ஸில் ஏறித்தான் பயணம் பண்ணினோம். வழக்கமான பஸ் ஸ்டாப்பில் அவ இறங்கினா. நானும் இறங்கி இருபதடி இடைவெளி விட்டு ஃபாலோ பண்ணிப் போனேன். பூவிழி அவ ஆபீஸுக்குள்ளே நுழைஞ்சா..."

"நீங்க பார்த்தீங்களா...?"

"பார்த்தேன்... ஸார். பூவிழி அவ ஆபீஸுக்குள்ளே நுழையும்போது ஒரு தடவை என்னைத் திரும்பிப் பார்த்துட்டுத்தான் போனா."

"பஸ் ஸ்டாப்பிலிருந்து பூவிழியோட ஆபீஸ் எவ்வளவு தூரம்...?

"நூறு மீட்டர் தூரம் இருக்கும்..."

"வழியில் பூவிழி யார்கிட்டேயாவது பேசினாளா?"

"இல்ல ஸார்..."

"பூவிழி கத்திக்குத்துக் காயங்களோட உயிருக்குப் போராடிக்கிட்டு இருக்கும்போது உன்னை இந்த நிலைமைக்குத் தாக்கினது யாருன்னு கேட்டோம். அந்தக் கேள்விக்கு அவ பதில் சொல்ல முயற்சி பண்ணி 'மி' என்கிற ஒரு எழுத்தை மட்டும் சொன்னா. 'மி' என்கிற எழுத்தில் ஆரம்பிக்கிற எந்த நபரின் பெயராவது உங்களுக்குத் தெரியுமா?"

கோபி சில விநாடிகளை யோசிக்க எடுத்துக் கொண்டுவிட்டு பிறகு சொன்னான்.


"தெரியும் ஸார்..."

(தொடர்ந்து வரும்)

---

**இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் இருக்கிறது அஜ்மீர். அங்கு இருந்து ஆட்சி புரிந்த மகாராஜாக்களது அந்தப்புர கதைகள் சுவாரசியமானவை. அவைதான் இங்கு அரங்கேறுகின்றன.**

# 03 அஜ்மீர் அரண்மனை இரகசியங்கள்



**பி**ரார்த்தனை முடித்து மகாராஜாவை அவர் குறிப்பிடும் ராணியின் அல்லது அழகியின் அந்தப்புரத்துக்கு அழைத்துக் கொண்டு போய்ச் சேர்ப்பார்கள்.

சில இரவுகள் மகாராஜாவுக்கு மிகுந்த திருப்தி ஏற்படுத்தும் இரவுகளாக அமைந்துவிடும். அத்தகைய இரவு அமைந்து விட்டால் மறுநாள் அரண்மனைச் சிப்பந்திகளுக்கு அதிர்ஷ்டமான நாளாகி விடும்.

மகாராஜா எல்லாருக்கும் ஏராளமான பரிசுகளை வாரி வழங்குவார்.

தனது சிப்பந்திகள் உண்மையாகவே நல்ல முறையில் பிரார்த்திக்கிறார்கள் என்று கூறி மகிழ்வார். மகாராஜாவிடமிருந்து பரிசுகள் கி[illegible]க்க வேண்டுமென்பதற்காக சிப்பந்திகளு[illegible] வெகு அக்கறையுடன் பிரார்த்திப்பார்கள்.

சில நாள் காலையில் மகாராஜா கடுகடுவென்று மகா கோபத்துடன் இருப்பார். குறிப்பிட்ட ராணி சரியாக அவரைத் திருப்தி செய்யவில்லை என்று அர்த்தம்.

அன்று சில சிப்பந்திகளுக்குச் சவுக்கடி கூட விழும். திருப்தி தராத ராணிக்கு மறுநாள் எந்தவித உணவும் வழங்கப்பட மாட்டாது.

அதனால் அத்தகைய ராணிகள் மறுநாளைக்கான உணவை முதலிலேயே பதுக்கி வைத்துக் கொள்வதும் உண்டு.

மகாராஜாவுக்கு நாட்டுப் பிரச்சனையை விட மகாராணிகளின் பிரச்சனையே அதிகமானதாக இருக்கும்.

அந்தப்புரத்தில் ராணிகளின் நடவடிக்கைகளைக் கவனிக்க உளவாளிகளை வைத்திருந்தார்.

அவர்களில் ஒரு ராணிக்கு கள்ளக் காதலன் இருந்தான். அவன் மகாராஜாவின் காரியதரிசிகளில் ஒருத்தன். மகாராஜா லண்டன் போயிருந்தபோது அவரை நன்கு உபசரித்த ஒரு ஓட்டல் வெயிட்டர்தான் அவன்.

அங்கே தங்கியிருந்த சமயம் மகாராஜாவின் மனம் மகிழப் பல பெரிய இடத்துச் சீமாட்டிகளை அறிமுகம் செய்து தொடர்பு ஏற்படுத்தித் தந்தவன்.

அவனுடைய சேவையை மெச்சித் தன்னோடு தனது சமஸ்தானத்துக்கு வந்துவிடுமாறு அவனை அழைத்தார்.

அவனும் வந்துவிட்டான்.

ஆறேகால் அடி உயரத்துக்கு வாட்ட சாட்டமாகவும், அழகாகவும் இருந்தான்.

அவன் மாதிரி ஒருவன் தனது சமஸ்தானத்தில் தனக்கு காரியதரிசியாக இருப்பதை மகாராஜா ஒரு கௌரவமாக நினைத்தார்.

ஆனால் அதெல்லாம் கொஞ்ச நாள்தான்.

அவனுடன் அந்தப்புரத்து ராணிகளில் சிலர் அடிக்கடி பேசிப் பழகுவதாக மகாராஜாவின் காதுக்குச் செய்தி எட்டியது.

ஒரு குறிப்பிட்ட ராணியின் படுக்கை அறைக்கு அவன் தொடர்ந்து ஆஜராவதாகக் கூட ஒரு 'கிசு கிசு' அவர்களுக்கு எட்டியது.

மகாராஜா அந்த ராணியைத் தானே கண்காணிக்க விரும்பி, கையில் துப்பாக்கியுடன், அரண்மனைத் தோட்டத்தில் இரவு செடிகளுக்கு நடுவே மறைந்திருந்தார்.

வெள்ளைக்கார வெயிட்டர் இரவு ஒரு மணிக்குத் தோட்டத்துப் பக்கம் வந்தான். ஆந்தை போலக் குரல் எழுப்பினான்.

ராணியின் அந்தப்புர ஜன்னல் அகலத் திறந்தது. ஒரு நீண்ட புடவை கீழே கயிறுபோல இறங்கியது.

வெயிட்டர் அனாயாசமாக அதைப் பற்றிக் கொண்டு மேலே ஏறி ஜன்னலை அடைந்தான்.

மகாராஜாவின் விரல்கள் துப்பாக்கி விசையை அழுத்தத் துடித்தன. ஆனாலும் அடக்கிக்கொண்டார்.

ராணியைக் கவரும் அளவுக்கு அந்த வெள்ளைக்காரத் தடியன் என்னதான் வித்தைகள் செய்கிறான் என்பதைப் பார்க்க விரும்பினார்.



சில வினாடிகளில் தானும் அந்தச் சீலையைப் பற்றிக்கொண்டு மெதுவாகச் சத்தமின்றி ஏறி ஜன்னல் அருகே ஒளிந்து கொண்டு படுக்கை அறையைப் பார்த்தார்.

ராணியும் வெள்ளைக்கார வெயிட்டரும் எல்லா விளக்குகளையும் போட்டுக் கொண்டு மன்மதனும் ரதியும் போலக் கேளிக்கைகளில் வித விதமாக ஈடுபட்டதை மகாராஜா கண் குளிரப் பார்த்தார்.

இப்படியெல்லாம் கூட உலகில் சுகம் அனுபவிக்கும் முறைகள் இருக்கின்றனவா என்று எண்ணி ஆச்சரியப்பட்டார்.

ஓசைப்படாமல் கீழே இறங்கித் தன் சயன அறைக்குத் திரும்பி வெகு நேரம் தூக்கமில்லாமல், படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார்.

மறுநாள் வெள்ளைக்காரக் காரியதரிசியைக் கூப்பிட்டு, அவனுக்கு ஒரு ரத்தின ஆரம் பரிசளித்தார். "வெள்ளைக் காரர்களிடம் நாங்கள் எவ்வளவோ வித்தைகள் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது என்பதை நேற்று இரவு நான் தெரிந்து கொண்டேன். இன்னும் மூன்று தினங்கள் நீ அந்த வித்தைகளைச் செய்து காட்ட அனுமதிக்கிறேன். அதற்குப் பிறகு நீ அவளுடன் உன் தேசத்துக்குப் போய் அவளுடன் மகிழ்ச்சியாக இரு" என்று பெருந் தன்மையாகக் கூறி மன்னித்துவிட்டார்.

அந்த மூன்று தினங்களும் குறிப்பிட்ட ராணியும் வெள்ளைக்கார வெயிட்டரும் மகா ராஜாவின் கட்டளைப்படியே நடந்து கொண்டனர்.

மகாராஜா திரைக்கு மறைவில் ஒரு நாற்காலிபோட்டு அமர்ந்து கேளிக்கைகளைப் பார்த்து மன்மதக் கலையின் நெளிவு சுளிவுகளை நன்கு தெரிந்துகொண்டார்.

நான்காவது தினம் அவர் வாக்களித்தபடியே குறிப்பிட்ட ராணியையும் அந்த வெயிட்டரையும் லண்டனுக்குத் தாமே அனுப்பிவைத்தார்.

ராணிக்குப் புற்று நோய் என்றும் சிகிச்சைக்காக வெளிநாடு செல்வதாகவும் அரண்மனை வட்டாரங்கள் பேசிக்கொண்டன.

(இரகசியம் தொடரும்)

# கோகிலா என்ன செய்து விட்டாள்?

**11**

**மு.க.சுருக்கம்**

**அனந்தராமன் ஒரு பத்திரிகையாளன். அவனது மனைவி கோகிலா. இருவருக்கும் இடையே மன ஒற்றுமை நிலவவில்லை. இருவருக்கு இடையேயும் மனஸ்தாபங்கள் ஏற்படுகின்றன. கோகிலாவின் பால்ய நண்பன் அவளை சந்திப்பதும் அனந்தராமனுக்கு பிடிக்கவில்லை. அவனது சந்தேகங்களால் கோகிலா வீட்டைவிட்டு வெளியேறுகிறாள்.**

**இனி....**

**தமிழ் நாட்டின் முற்போக்கு எழுத்தாளர் ஜெயகாந்தன். அவரது எழுத்துக்கள் உலகப் பிரசித்தமானவை. பலகோடி வாசக நெஞ்சங்களை வசீகரம் செய்தவை.**

## ஜெயகாந்தன்

'தனியாவா வந்தே?'ன்னு கேட்பான்னு எதிர் பார்த்தேன்: கேக்கலை. 'அவரை அழைச்சிண்டு வரலியா?'ன்னு விசாரிப்பான்னு எதிர்பார்த்தேன்; விசாரிக்கலை. 'அடுத்த தடவை வரும்போது அவரோடு வா'ன்னு சொல்லுவான்னு எதிர்பார்த்தேன்; சொல்லலை... அவா என்னை மதிக்கலைன்னு புரிஞ்சுண்டேன். நம்மை மதிக்காத இடத்துக்கு நாம போகலாமா?"

"நான்ஸென்ஸ் எனக்காகவா? அவா கூப்பிட்டா நான் வந்துடுவேனா?"

அவன் பேச்சைக் குறுக்கே புகுந்து வெட்டுவது போல் அவள் சொன்னாள். "அது வேறே விஷயம். உங்களை மதிக்கணும்னு நான் நினைக்கிறது உங்களுக்காக இல்லே. அவா உங்களை மதிச்சாத்தான் என்னை மதிக்கிறதாக அர்த்தம்." என்று அவள் சொல்லும்போது, அப்போதும் கூட அவன் தனது சுய குணத்தைக் காட்டினான்: "நீ என்னை அவ்வளவு தூரத்துக்கு மதிக்கறயா என்ன?"

"அதிலென்ன உங்களுக்குச் சந்தேகம் வந்தது? நமக்குள் ஆயிரம் இருக்கலாம். மத்தவாளுக்கும் அதுக்கும் சம்பந்தமில்லே. மத்தவா அதைத் தெரிஞ்சுக்கிறதை, நாலு சுவருக்கு மத்திலே எனக்குள்ள என் சொந்தப் பிரச்சனை என் நெஞ்சை விட்டு வெளியே வர்றதைக்கூட நான் விரும்பலை. புரியுதா? நாம ரெண்டு பேரும் கலியாணம் பண்ணிண்டது சரியா தப்பாங்கறது நம்ம பிரச்சனையே தவிர மத்தவாளுக்கு அதிலே சம்பந்தமில்லை." என்று அவள் தன்னிடம் அன்று சொன்னது இப்போ நினைவுக்கு வருகையில்...

அவள் நிச்சயம் அங்கே போயிருக்க மாட்டாள் என்று அவன் உறுதியாக நம்பினான்.

'வேறு எங்கே போயிருப்பாள்? அவனும்.. அவன் தான் கெய்ரோவுக்குப் போய்விட்டானே. சீ! இது என்ன நினைப்பு' என்று அவன் குழம்பிக் கொண்டிருக்கையில் வீட்டுக்கார அம்மாள் ஒரு தட்டில் இரண்டு தோசைகளை வைத்து இன்னொரு தட்டால் அதை மூடி எடுத்துக் கொண்டு வந்து அவனருகே ஒரு ஸ்டூலை இழுத்துப் போட்டு அதன்மேல் வைத்த பின் "இருங்கோ ஜலம் கொண்டு வரேன்" என்று சொல்லி அடுக்களைக்குள் சென்றாள். கையில் தண்ணீர் தம்ளருடன் வரும்போது அவள் சொன்னாள்: "கண்ட கண்ட ஹோட்டல்லேயும் போய்ச் சாப்பிட்டு ரெண்டு நாளைக்காக உடம்பைக் கெடுத்துக்க வாண்டாம். கோகிலா வர வரைக்கும் பேசாம நம்மாத்திலேயே சாப்பிடலாம்" என்று தண்ணீரை அவனருகே வைத்துவிட்டு அவன் பதிலுக்குக்கூடக் காத்திராமல் படியிறங்கிப் போனாள்.

அவளைப் பற்றிய நினைவே இல்லாத ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில்- மூன்று நாட்களுக்குப் பிறகு ஒருநாள் காலையில்- அனந்தராமன் டாக்ஸியில் ஆபீஸுக்குப் போய்க்கொண்டிருந்த போது ஜன நெரிசல் மிகுந்த பட்டணத்து வீதியில் பேவ்மெண்டுகளில் ஆபீசுக்குப் போகிற கும்பல் அணி வகுத்ததுபோல் வரிசை வரிசையாகச் சென்று கொண்டிருக்கும் நேரத்தில்- அந்தப் பெரிய வீதியைக் குறுக்கே கடப்பதற்காகப் போடப்பட்டுள்ள பாதசாரிகளின் பாதையில் விரைந்து செல்லும் ஜனக் கும்பலுக்கு வழிவிட்டு அந்த டாக்ஸி நின்றபோது, கையிலொரு பிளாஸ்டிக் கூடையுடன் கூலிங்கிளாஸ் அணிந்து- அவனைக் கலியாணம் செய்து கொள்வதற்கு முன் ரிஸப்ஷனிஸ்டாகப் பணி புரிந்தபோது வருவாளே, அந்தத் தோற்றத்தோடு அவள் நடந்து கொண்டிருக்கையில் கோகிலாவை அவன் பார்த்தான். பார்த்த சில விநாடிகளுக்குப் பிறகே அவளைப் பற்றி அவன் நினைத்தான். அவளைக் கூப்பிட வேண்டுமென்றோ, அவளோடு பேச வேண்டுமென்றோ முதலில் அவனுக்குத் தோன்றவில்லை. அவளும் அவளைச் சேர்ந்த கும்பலும் வீதியைக் கடந்து பிளாட்பாரத்தின் மீது ஏறி இவனுக்கும் இவனைச் சேர்ந்த வாகனாதிகளின் வரிசைக்கும் வழிவிட்டபின், அந்த டாக்ஸி நகரும்போது பிற கார்கள் வரிசையாக ஹாரனை முழக்கியவாறு இவன் பின்னால் அணி வகுத்து வரும்போது, திடீர் என்று அங்கே வண்டியை நிறுத்துவது சாத்தியமற்றது என்று உணராமல் "டிரைவர்! இங்கே நிறுத்திக்கோ!" என்று உத்தரவிட்டான். டாக்ஸி டிரைவர் எரிச்சலுடன் இவனைத் திரும்பிப்பார்த்தான். அவன் தெருவில் போகிற ஒரு பெண்ணை வெறித்தவாறு இருப்பதை வேறுவிதமாகப் புரிந்து கொண்ட டிரைவர் லேசாக வாய்க்குள் சிரித்துக் கொண்டான். வண்டி போய்க் கொண்டிருந்தது. கும்பலில் மறைந்தும் தெரிந்தும் போய்க் கொண்டிருக்கும் அவள் மீதிருந்த பார்வையை மாற்றாமல் பொறுமை இழந்து கத்தினான் அனந்தராமன்: "ஐ ஸே ஸ்டாப் இட்."

"இங்கே நிறுத்த முடியாது ஸார்..." என்று பதிலுக்குக் கத்திவிட்டு வண்டியை வேறு இரண்டு கோடுகளுக்கு நடுவே பாதை மாற்றி ஓட்டி அவள் அவன் பார்வையை விட்டு மறைந்த பிறகு ஒரு பஸ் ஸ்டாப் அருகே டாக்ஸியை நிறுத்தினான் டிரைவர்.

கையிலிருந்த சில்லரையை எண்ணிப் பார்க்காமல்கூட டாக்ஸி டிரைவரிடம் கொடுத்துவிட்டுக் கும்பலில் புகுந்து அவள் சென்ற திசையை நோக்கி ஓடினான் அனந்தராமன். குறுக்கே வந்த கும்பலை விலக்கிக் கொண்டு அந்த நெடிய வீதியில் இரண்டு பர்லாங் தூரத்தில் அவளது ஒளி வீசும் சிவப்பு வர்ணப் புடவையை அடையாளம் வைத்துக் கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கையில் அவன் மனத்தில் அந்த எண்ணம் வந்தது. 'இவள் எங்கே போய்க்கொண்டிருக்கிறாள்... எங்காவது வேலையில் சேர்ந்திருக்கிறாளோ? அல்லது ஒரு வேளை... வேலை' தேடி அலைந்து கொண்டிருக்கிறாளோ' என்று நினைக்கையில் அவனை அறியாமல் அவள்பால் அவன் மனம் குழைந்தது. இருபது அடி தூரத்தில் அவளை அவன் நெருங்கியபோது நடையின் வேகத்தை அவன் குறைத்துக்கொண்டான். ஓடி வந்த களைப்பாலும், உணர்ச்சியின் வேகத்தாலும் அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. கழுத்தில் இறுகிக் கிடக்கும் டைக்குக் கீழே வியர்வையின் ஈரம் கறையிட்டது. கோட்டுப் பாக்கெட்டிலிருந்து கர்சீப்பை எடுத்து உதறி முகத்தை அழுநத் துடைத்துக் கொண்டான். இதற்கு மேல் அவளை அணுகுவது எப்படி என்பது அவனுக்கு இப்போது பிரச்சனையாயிற்று. அவன் அவள் பின்னாலேயே நடந்துகொண்டிருந்தான். ஷூஸ் அணிந்த பாதங்களின் ஒரு குறிப்பிட்ட லயத்தோடு கூடிய சத்தம் தன்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதை அவள் உணர்ந்தாள். அது தன்னை நெருங்கி நெருங்கி வருவதையும் அவளால் உணர முடிந்தது. அது தன்னை அணுக வருகின்ற பாதங்களின் சப்தம்தான் என்ற தீர்மானம் வந்ததும் அவள் சட்டெனத் திரும்பிப் பார்த்தாள்.

வெகு தூரம் விலகிப்போய்விட்ட அவர்களின் இந்த நெருக்கமான, நேருக்கு நேர் ஏற்பட்ட திடீர் சந்திப்பின் நெருக்கடியில் சிக்குண்டு இருவருமே திணறினர்.

அவள் தனது கூலிங் கிளாசைக் கழற்றி முந்தானையால் துடைத்தாள். அவன் ஏற்கனவே துடைத்த முகத்தை மீண்டும் ஒருமுறை கர்ச்சீப்பால் துடைத்துக் கொண்டான். பின்னர் மௌனமாக இருவரும் அருகருகே சேர்ந்து நடந்தனர். அவர்கள் இருவர் மனத்திலும் பரஸ்பரம் ஒருவரைப் பற்றி இன்னொருவருடைய நினைப்பு என்னவாக இருக்கும் என்ற நினைவே மேலோங்கி இருந்தது.

ஒரு காலத்தில் அவர்கள் இருவரும் ஒரே ஸ்தாபனத்தில் பணியாற்றியபோது வழக்கமாக வந்து டீ அருந்தும் சாக்கில் மணிக்கணக்காய்ப் பொழுது போக்குவார்களே. அந்த ரெஸ்டாரண்டைக் கடக்க நேர்ந்தபோது அனந்தராமன் சற்று நின்றான். நட்பு முறையில் மட்டுமே பழகிய ஒருத்தியிடம் கேட்பதுபோல் மரியாதையாக அவளிடம் கேட்டான்.

"ஹவ் அபௌட் எ டீ?"

தனது சம்மதத்தைத் தெரிவிக்கும் முறையில் உரிய வார்த்தையை அவள் கூற விரும்பிய போதிலும் ஓர் அந்நியனிடம் பழகுவது போல் இவனிடம் பழகிநாளாகிவிட்டபடியினால் நெஞ்சில் வந்த வார்த்தையை தொண்டையில் விழுங்கிக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்தாள் கோகிலா.



அந்த ஏர்கண்டிஷன்ட் ரெஸ்டாரெண்ட் ஒரு கட்டடத்தின் மாடியில் அமைந்து இருந்தது. அனந்தராமனும் கோகிலாவும் அந்த ஹோட்டலுக்குள் வந்தபோது அந்த ஹால் முழுமையும் காலியாக இருந்தது. ஜன நெருக்கடி அதிகமாக இருந்தாலும்கூட வருகின்றவர்கள் தங்கள் தனிமையைக் காப்பாற்றிக் கொள்ளும் விதத்தில் நீண்ட இடைவெளி விட்டு மேஜைகள் போடப்பட்ட அந்தப் பெரிய ஹால் 'ஹோ' வென்று இருந்தது... மறுகோடியில் இருந்த வாசல் வழியே வெள்ளுடை தரித்த வெய்ட்டர் மட்டும் வந்தான். வரிசையாக 'நோ ஸர்வீஸ்' போர்டுகள் வைத்த பல மேஜைகளைக் கடந்து அந்த ஹாலின் ஒரு மூலையில் கிடந்த டேபிளை அடைந்து அவர்கள் இருவரும் எதிரெதிரே அமர்ந்தனர்.

(கோகிலா.... தொடரும்)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

**20**

# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

அப்படி அவள் சொல்லும் போது, அவள் மடியிலே தான் சாய்ந்திருந்தான் குமாரசாமி.

'பளிச்' சென்று டெலி:போனை பிடுங்கி; "நான் அவளை கைவிட மாட்டேன் அண்ணி!" என்று கத்தினான்.

"ரொம்ப சந்தோஷம்!" என்று சொல்லி :போனை வைத்து விட்டாள் நளாயினி.

மறுநாள் காலையில் கல்கத்தாவில் இருந்து, இருவரும் புறப்படுவதாக ஏற்பாடு செய்து கொண்டார்கள்.

லலிதா வாங்கி வைத்திருந்த ஒரு லாரி சாமான்களும் புதிய காரில் ஏற்றப்பட்டன.

இருவரும் அறையை விட்டு புறப்படப் போன சமயம், ஒரு ஓட்டல் சிப்பந்தி இரண்டு புதிய பெட்டிகளை அறைக்குள்ளே கொண்டு வந்து வைத்தான்.

"ஏம்பா! அறையை காலி செய்வதற்குள்ளாகவா அடுத்தவர்கள் வர வேண்டும்?" என்று சத்தம் போட்டான் குமாரசாமி.

"அடுத்தவர்கள் இல்லை! யாரோ உங்களுக்குத் தெரிந்தவர்கள்தான்" என்று பணிவோடு சொன்னான் சிப்பந்தி.

"யார் அது..?" கேட்டுக் கொண்டிருக்கும் போதே, "வேறு யார்?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தாள் விஜயா வேதாசலம்.

★★★

அன்றிரவு காந்திநகர் பங்களாவில் மீண்டும் நாங்கள் கூடிய போது, தலைவர் தங்கசாமி, வக்கீல் வரதராஜன் நான் ஆகியோர் மட்டுமே இருந்தோம்.

எங்கள் இரவு நேர சபையில் அடிக்கடி கலந்து கொள்ளக்கூடிய பலர், வேலை நிமித்தம் வெளியூர் சென்றிருந்தார்கள்.

நாராயணசாமி சிங்கப்பூர் சென்று விட்டார். வடநாட்டு நண்பர்கள் தங்கள் ஊருக்குத் திரும்பி விட்டார்கள். அதிகாரி கமலநாதன், "அன்றைக்கு வர முடிய வில்லை" என்று டெலி:போன் செய்து விட்டார்.

கம்பெனி குறைவாக இருந்தாலும் எங்கள் கடை ஆரம்பமாகிவிட்டது.

எவ்வளவு தான் வேலை இருந்தாலும், தங்கசாமியும் வரதராஜனும் இதற்கு நேரம் ஒதுக்கத் தயங்குவதில்லை.

"என்ன செய்வது! ஏகப்பட்ட வேலை!



இன்றைக்கு ஒரு குப்பத்தில் குடிசைகள் பற்றி எரிந்து விட்டன. இந்த மாதிரி நேரங் களில் எங்கள் தலைவரால் சும்மா இருக்க முடியாது. 'ஏழை கண்ணீர் வடிக்கிறான்' என்றால் அவர் அழுதுவிடுவார். பத்தாயிரம் ரூபாய் என்றால் சும்மாவா கிடக்கிறது? அள்ளி அள்ளிக் கொடுத்தார். குடிசையிழந்த பெண்களுக்கு அவர் சும்மா ஆறுதல் சொல்வதில்லை. கட்டிப் பிடித்து, மார்போடு அணைத்து, ஒரு தகப்பன் போல் ஆறுதல் சொல்வார். அவரிடத்தில் ஜனங்களுக்குப் பிரியமிருக்கிறது என்றால், "காரணமில்லாமலா?" என்றார் தங்கசாமி.

"எனக்குத் தெரியாதா, உங்கள் தலைவரை? எந்தப் பெண்ணைக் கண்டாலும் அவர் கட்டியணைப்பார். வெளியுலகத்தில் புத்தன்; அந்தரங்கத்தில் ரோமாபுரி ராஜா. அநுபவித்தால் அவரைப் போல் அநுபவிக்க வேண்டும்."

"இந்த நாட்டில் எவன் அநுபவிக்கவில்லை? விரலை மடக்குங்கள். எதிரியைக் குற்றம் சாட்டுகிற ஒவ்வொருவனும் தன் வரையில் திருடனே! அவனே குற்றவாளியாகிற சந்தர்ப்பம் வருகிறவரை, அவன் மற்றவர்கள்மீது குற்றம் சாட்டிக் கொண்டேயிருக்கிறான்" என்றார் தங்கசாமி.

"எல்லோரும் தவறு செய்கிறார்கள்; உண்மைதான். ஆனால், 'நான் யோக்கியன், உத்தமன்' என்று வேஷம் போடுவதில்லை. உங்கள் தலைவர்தான் அந்த வேஷம் போடுகிறார்" என்றார் வரதராஜன்.

"இந்த நாட்டு ஜனங்களுக்கு அது தேவை. யோக்கியனை விட, யோக்கியனாக நடிப்பவனைத்தான் இவர்கள் அதிகம் நம்புவார்கள். அதன் விளைவாகத்தான் நாட்டு மன்றங்களுக்கு நல்ல பிரதிநிதிகள் கிடைப்பதில்லை. இந்தியாவின் கடைசி வைஸ்ராயாக இருந்த மவுண்ட் பாட்டனிடம், 'வயது வந்தோர்க்கு வாக்குரிமை கொடுக்க வேண்டும்' என நேரு சொன்னபோது, அவரிடம் ஒரு விஷயத்தைச் சொன்னார்: 'நூற்றுக்குத் தொண்ணூற்று ஏழு பேர் தற்குறியாக உள்ள ஒரு நாட்டில் வயது வந்தோர்க்கு வாக்குரிமை கொடுத்தால், பணத்துக்கு ஓட்டை விற்பார்கள், அல்லது பகட்டுக்கு ஓட்டைப் போடுவார்கள். கேவலமான மந்திரிசபைதான் அமையும்' என்றார் அவர். அதைக் கேட்காமல், நேரு வெகுஜன வாக்குரிமையைக் கொடுத்துவிட்டார். அதன் விளைவைத் தான் நாம் அனுபவிக்கிறோம்" என்றேன் நான்.

"நன்றாகச் சொன்னீர்கள். எந்த அரசாங்கம் வந்தாலும், உருப்படாத திட்டங்களைத்தான் ஒவ்வொரு மந்திரியும் பேசுகிறார்களே தவிர, அன்றாடத் தேவையை யாரும் கவனிப்பதில்லை. மந்திரி கருப்பையாவுக்கு, 'காபி பிடிக்காது' என்றால் காபியைத் தடை செய்வார். சுப்பையாவுக்கு வெண்டைக்காய் பிடிக்காது என்றால், வெண்டைக்காயோடு போர் தொடுப்பார். தன்னுடைய எதிரி ஜவுளி மில் வைத்திருக்கிறார் என்றால், ஜவுளிமீது வரி போடுவார். ஒருவரை ஒருவர் வஞ்சம் தீர்த்துக் கொள்ள மக்கள் கருவியாகிறார்கள்" என்றார் வரதராஜன்.

"மற்ற கட்சிகள் எப்படியோ, எங்கள் கட்சியைப் பொறுத்தவரை, நாட்டிலே ஒழுக்கத்தை நிலைநாட்டவே அது பாடுபடுகிறது" என்றார் தங்கசாமி.

"அடடா! நீங்களும் ஒழுக்க சீலர். உங்கள் தலைவரும் உத்தமபுத்திரர். உங்கள் மைத்துனியும் பத்தினிதான். தெரியாதா? எங்களுக்கு?" என்றார் வரதராஜன். அவர் மூன்று ரவுண்டு முடித்திருந்தார்.

"ஏய்! என் குடும்பத்தைப் பற்றிப் பேசாதே! உன் யோக்கியதை தெரியாதா எனக்கு? நீ ஜூனியர் மனைவியோடு சரசமாடுவதைக் கண்டு 'லா' சேம்பரே சிரிக்கிறது" என்றார் தங்கசாமி.

குடித்துக் கொண்டிருப்பவர்கள் தகராறு செய்ய ஆரம்பித்தால், அதை முடித்து வைக்க ஆண்டவனாலும் முடியாது.

குடிப்பவன் எதை நினைக்கிறானோ அதுவே விசுவரூபம் எடுக்கும்.

'எங்கே இது கைகலப்பில் முடிந்து விடுமோ?' என்று நான் பேச்சை மாற்றினேன்.

(அந்தரங்கம் வரும்)

# கொலை

ரமேஷுக்கு உடம்பெல்லாம் உதறிக் கொண்டிருந்தது. எத்தனை உயிர்கள்! ஒரு சிறு எறும்பு கஷ்டப்படுவதையும் காணச் சகிக்காததான், இத்தனை பெரிய பாவத்தைச் செய்வேனென்று அவன் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. ஒரேயடியாக பல உயிர்களை பலியெடுத்துவிட்ட கொலைகாரனாய் தான் மாறி விட்டதை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.



**ஏறாவூர் ஸபீர் ஹாபிஸ்**

அலறும் மனதை அழுத்திப் பிடித்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்த ரமேஷ், எதிரே வந்து நின்ற தன் நண்பன் ரகுவைக் கண்டதும், ஓடி வந்து அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு அழலானான். பெரும் வியப்புடன் அவனை நோக்கிய ரகு, அவனது முகத்தைக் கைகளால் நிமிர்த்தி விட்டான்.

"என்னாச்சு ரமேஷ்? ஏன் அழுறே?"

"ரகு! நான்... நான் கொலை பண்ணிட்டேன்டா,"

"கொலையா..? நீ... என்னடா சொல்றே?"

"ஆமாண்டா! ஒண்ணு ரெண்டில்ல. பத்து உயிரக் கொலை பண்ணிட்டேன்!"

அதிர்ச்சியுடன் சற்று பின் வாங்கினான் ரகு. அவனது கைகள் தன்னிச்சையாக ரமேஷிடமிருந்து விடுதலை பெற்றுக் கொண்டன. அச்சத்தினாலும், ஆச்சரியத்தினாலும் அவனது விழிகள் விரிந்தன.

"ரமேஷ்! நீ கொலை பண்ணினாயா? என்னால நம்பவே முடியல்லடா. கொஞ்சம் வேகமா நடந்தாலும் நிலத்துக்கு வலிக்குமேன்னு எப்பவும் மெல்ல நடந்து போறதையே பழக்கப்படுத்திக்கிட்ட நீயா இந்தக் காரியத்தைப் பண்ணினே? என்ன நடந்ததுன்னு விளக்கமா சொல்றா!"

"ரகு! அவங்க ரொம்ப நாளா எனக்குத் தொந்தரவு குடுத்துக்கிட்டே இருந்தாங்க. எவ்வளவு நாளைக்குத்தான் ஒருத்தன் பொறுமையா இருக்கிறது! என்னைத் தொல்லைப் படுத்தாதீங்கன்னு நானும் எத்தனையோ தடவை சொல்லிப் பார்த்தேன். கேட்கவேயில்லை. இன்னிக்கு ரொம்ப ஓவர். என்னை நிம்மதியாச் சாப்பிடக்கூட விடல்லே. அதனால வந்த ஆத்திரத்த அடக்க முடியாம, அந்த நீளமான இரும்புத் தடிய எடுத்து ஓங்கி ஓங்கி அடிச்சு, அகப்பட்ட பத்துப் பேர்ர உயிர வாங்கிட்டேன்!"

மீண்டும் அழத் தொடங்கினான் ரமேஷ்.

"சரி சரி. சத்தம் போட்டு அழாதேடா. போலிஸ்காரன் யாராச்சும் வந்திடப் போறான். இப்போ, அந்தச் செத்துப் போன பத்துப் பேரும் எங்க கிடக்கிறாங்க?"

"அதோ, அந்த ரூமுக்குள்ளதான்!"

"நீ இங்கேயே இருந்துக்கோ. மனசைத் திடப்படுத்திக்கோ. எல்லாம் ஆண்டவன் செயல். நான் உள்ளே போய்ப் பார்க்கிறேன். அந்த உடம்புகள என்ன பண்றதுன்னு அப்புறம் யோசிச்சு முடிவெடுப்போம்."

ரமேஷ் தலையாட்டினான். சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்ட ரகு, படபடக்கும் இதயத்துடன் அந்த அறையை நோக்கி நகர்ந்தான். அறைக் கதவை அண்மித்ததும், பின்னால் யாரும் வருகிறார்களா என்று ஒரு முறை பார்த்து விட்டு துணிவுடன் உள்ளே நுழைந்தான். விழிகளை சுழல விட்டுக் கொண்டே அறையை நோட்டமிட்டவன், அதன் மூலையில் பார்வையைச் செலுத்தியதும், பலமான அதிர்ச்சியாலும், ஆத்திரத்தாலும் தாக்கப்பட்டான்.

அறையின் ஒரு மூலையிலே, பத்து உடல்கள் உயிரிழந்து இறந்து கிடந்தன. ஆனால் அவை மனித உடல்களல்ல. கரப்பான் பூச்சிகளின் உடல்கள்!?

# மாறும் கோலங்கள்!

**தே**வகியின் வீடு ஒரு வாரமாக அமர்க்களமாக இருந்தது. அக்கிராமமே எதிர்பார்த்து இருந்தது நந்தனின் வரவை.

நந்தன் தேவகிக்கு மச்சான் முறையானவன். பதின்மூன்று வருடங்களுக்கு முன்பு இலண்டன் சென்றவன். இப்போதுதான் வந்துள்ளான். அப்பொழுது தேவகிக்கு வயது பன்னிரண்டு.

அதற்குப் பிறகு எவ்வளவு இழப்புக்கள், காணாமல் போதல்கள், கல்யாண வீடுகள், இழவு வீடுகள். ஆனால் அவனுக்கு இவற்றிற்கு மேலாக, தேவகியின் நினைவு இவற்றை எல்லாம் எங்கோ கொண்டு சென்று மறைத்து விட்டது.

அவளுக்கு மட்டும் நந்தனின் வரவு குழப்பமாகவே அமைந்துவிட்டது. எத்தனையோ சாக்குப்போக்குச் சொல்லி தட்டிக் கழிக்கும் அவளால், இம்முறை தப்புவது கஷ்டமாகவே போய்விட்டது. இருப்பினும் அவள் வளர்த்துக்கொண்ட துணிவினால் தன்னைச் சமாதானப்படுத்துமுன் தந்தையின் குரல் மேலும் நடுநடுங்க வைத்தது.

"இஞ்சரும் தம்பி வரேக்கையாம் விசாவோட வந்தவனாம். நல்ல நாளாப்பார்த்து செய்து போட்டம் எண்டால் பிள்ளையைக் கையோட கூட்டிக்கொண்டு போயிடுவான்."

"என்னப்பா எனக்கு மட்டும் விருப்பமில்லையே, தம்பி உடுத்த உடுப்போட வந்தால் சரி எண்டேக்க, ஏன் அப்பா உதை விடவேணும்." என்று அவளின் தாய் திலகம் புகழ்ந்து தள்ளினாள்.

பாடசாலைக்குப் புறப்பட இருந்தவளுக்கு இருப்புக்கொள்ள முடியவில்லை. இன்று சிவத்தைச் சந்தித்து ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்ற வேகத்துடன் காலை உணவையும் உண்ணாமல், தாய்க்கும் கூறாமல் புறப்பட்டாள்.

தாய் முணுமுணுக்கும் வார்த்தை அவளின் காதில் விழுந்தது. "கல்யாணம் எண்டால் இவளுக்கு கல்லைக் கண்ட நாயை மாதிரி இருக்கிறாள். என்னதான் மனதிலே கிடக்குதோ தெரியாது."

தேவகிக்கு இவை எல்லாம் அலுத்துப் போன வார்த்தைகள். ஏழு செக் பொயிண்ட் கடப்பதை நினைக்க அவளுக்கு வெறுப்புத்தான் வந்தது. "கொயேத யன்னே? கொயே இந்தலாத ஆவே? கொயேத வெட?" போன்ற கேள்விகளுக்கு அவளைப் போன்றவர்களுக்கு பதில் சொல்லி அலுத்துப் போய்விட்டது.

சிவம் நகரில் அமைந்திருக்கும் ரெலிகொம் நிறுவனத்தின் எஞ்சினியராக தொழில் புரிகின்றான். தேவகியின் வீட்டிற்கு எதிர்ப்புறமாக அமைந்திருக்கும் வீதியில் குடியிருப்பவன். நாட்டின் போர்மேகங்கள் இடம்பெயர்வுகள் அதனால் ஏற்பட்ட தனிமைகள் அவலங்கள் போன்றன இருவரையும் இணைத்து விட்டன.

அவர்கள் இருவரின் வாக்குப் பரிமாற்றத்தின்பின் சிவம் தீர்க்கமாகக் கூறினான்.

"நீர் வெளிக்கிட்டு என்ர வீட்டை வந்தால் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். இதைவிட என்னால ஒன்றும் செய்ய ஏலாது. நந்தனிடம் போய் எல்லாம் கதைக்க ஏலாது. வெளி நாட்டில கூட உதுகளுக்குச் சுடுபடுகிறாங்களாம்."

அவள் அவனிடம் இருந்து விடைபெற்று வந்தவள் வழியிலேயே நந்தனைச் சந்தித்தாள்.



**ஜெ. பாஸ்கரன்**

அவன் தமது காதலுக்கு உதவுவான் என்ற நம்பிக்கையுடன் தனது எண்ணம் யாவற்றையும் கண்ணீருடன் கூறிவிட்டாள்.

பல எதிர்பார்ப்புகளுடன் இருந்த நந்தனுக்கு அவளின் காதல் வெறுப்பையே கொடுத்தது.

"அவனின் சாதிக்கு ஒரு காதல், எஞ்சினியர் எண்டாப்போல அதுகள் போய் விடுமோ? புரட்சி ஒன்றும் செய்ய வேண்டாம். இப்பவும் சரி எண்டால் என்னோட இலண்டனுக்கு வரலாம்!" என்றவன் அவள் அப்படிக் கூறுவாள் என்று எதிர்பார்க்கவே இல்லை.

"ஓம் அவர்களின் மூன்று பரம்பரைக்கு முந்தித்தான் அத்தொழில்களைச் செய்தவங்கள். நீங்கள் இப்ப வெளி நாட்டில செய்யிறியள். அங்க மட்டும் சாதி இல்லையே?"

என்றவள்,

'இவங்கள் மாறவே மாட்டாங்கள். மாற்றங்களை ஜீரணிக்க மாட்டார்கள்' என்று எண்ணியவளாய் அவனின் மறுவார்த்தையை எதிர்பார்க்காமல் புறப்பட ஆயத்தமானாள் சிவத்தின் வீட்டை நோக்கி.

# கிழவியின் ஆவி

**கா**ர்த்திகை மாசத்து அடைமழையில் அழுதுகொண்டிருந்த வானம் சூரியனைத் தொலைத்ததுமல்லாமல், சந்திரனையும் சேர்த்தே தலைமுழுகிவிட்டிருந்ததில் பொழுது சாய்ந்ததுபோல நாளும் மிளிரும் பூமி சீக்கிரத்தில் இருண்டுபோய்க் கிடந்தது.

அது குடியிருப்புக்கள் மிகுந்த பெரிய கிராமம், ஆங்காங்கே பல பள்ளமான பாதைகளை, வளைவுகளுடன் கொண்டிருந்தது. மழையதிகமாகப் பெய்யத் தொடங்கியதும் வெள்ளம் பல மைல் கணக்குக்கு நீண்டு, வாரியடித்து ஓடிவந்து பள்ளப்பகுதி வழியே தவழ்ந்து கிழக்குப் புறமாக உள்ள வயல் பகுதிக்குள் தேங்கும், வெள்ளம் முட்டியதும் வயல் வரப்புக்களை உடைத்து, அடுத்து அரைமைலுக்கப்பாலுள்ள கடலுடனிணைக்கும் ஒடக்கரையை



**ஜெ. சூரியன்**

நோக்கி திருப்பி விடுவதுண்டு. திருப்பினாலும் பாதை வழியே ஓடிவரும் தண்ணீர் வற்றுவது மழையைப் பொறுத்திருக்கும். மழை ஓய்ந்தாலும் வெள்ளம் ஓடிவடிய பத்துப் பதினைந்து நாட்கள் பிடிக்கும்.

அப்படியொரு மாரி மழையின் முன்னிருட்டில் பாட்டி வீட்டிலிருக்கும் அவன், அடுத்த தெருவிலுள்ள தனது, தாய் வீட்டுக்குப் போவதற்காக, வந்து கொண்டிருந்தான். கணுக்கால் வெள்ளத்துள் கால்வைத்து நடக்கிற போதுகூட மனதுள் பயத்தை ஏற்படுத்தும் பருவம். மையிருட்டு, சமீபத்தில் இறந்து போன கிழவியின் வீட்டை கடக்கவேணும். என்கிற நினைவு சிலிர்ப்பை ஏற்படுத்த சுற்றிப்பார்த்தான். வேலியோரத்து மரநிழல்கள் இன்னும் அடர்த்தியான இருளை அப்பியிருந்தன. 'எவராவது, ஏதாவது நிற்குமோ...?' சடாரென நாயொன்று வெள்ளத்துள் குதித்து, ஊளையிட்டபடி பாய்ந்ததில் திடுக் கிட்டுப் போய் நின்றவனை நண்பன் ரமேஷ் தட்டினான்.

'அப்பாடி' என்று ராமுக்கு மூச்சு நிதானப்பட்டது.

"எங்கே ராம் அம்மா வீட்டுக்கோ? நானும் சித்திவீட்டுக்குப் போறன். சித்தி பெண்ணுக்கு பிறந்த நாள். எல்லோரும் போயிட்டாங்க. இந்தப் பக்கத்து வீட்டுக் கிழவி செத்தது பயமாக இருக்கிறது. நல்ல வேளை நீ போகிறாய்!" என்றவண்ணம் சேர்ந்து நடந்தான். அது தெம்பாயிருந்தது.

எட்டாம் ஆண்டு மாணவர்களாகிய அவர்களது பேச்சு, நண்பர்களை, பாடசாலை நிகழ்வுகளைச் சுற்றியிருக்க, சற்றுத் தொலைவு வந்ததும், நின்று, நிதானமாக, சுவாரஸ்சியத்துடன் பேச்சிலீடுபட்டனர். சுற்றுப்புறத்தை, இருட்டை, இறந்த கிழவியை, கால் பாதங்களை மேவியோடும் தண்ணீரின் குளிர்ச்சியை மறந்து போயினர்.

எவ்வளவு நேரம் பேசினார்களோ தெரியவில்லை. திடீரென்று தன்னை யாரோ தொடுவது போன்ற உணர்வு உந்தியதில் சற்று, திகைத்துத் திரும்பிய ராமு அப்படியே நடு நடுங்கிப்போனான். பேச்சு நின்றதையுணர்ந்த ரமேஷ் திரும்பினான். இருளில் இன்னுமதிகமான கனத்த இருளை அளக்கும் ஓர் உருவம் தலையை மூடியபடி எந்தவித சலனமுமின்றி நின்றிருந்தது.

அவ்வளவுதான். இருவரும் கையிலிருந்த குடையை அப்படியே தண்ணீருள் போட்டு விட்டுத் திரும்பி தலைதெறிக்க ஓடினர். அவர்களது நினைவில் செத்துப்போன கிழவியினுருவம் மோதியது. தட, தடவென ஓடியதில் வெள்ளம் சிதறி ஆளாளுக்கு நனைந்து போனவர்களாக, மூச்சு வாங்க முதலில் வந்த ரமேஷ் வீட்டு வாசலில் ஏறி முற்றத்து தூணுடன் நின்று தம்மை நிதானப்படுத்த முயன்றனர். பயத்தில் நடுங்கியது. ரமேஷ் வீட்டிலெவரும் இல்லாததில் வெளிச்சமும் இருக்கவில்லை. அந்த வேளையில் வீட்டின் தோற்றம் இன்னும் பயத்தைத் தூண்டுவது போலிருக்க, ஒருவரையொருவர் பார்த்து பேச முயன்றனர். அந்நேரம் அந்த உருவம் அங்கு வந்து சேர்ந்தது.

ஐயோ, தொடர்ந்து வந்துவிட்டதா? செத்தோம். என எண்ணியவர்களாக, "ஆ... பேய், பேய்... கிழவி...ஆவி..." என்று இருவரும் ஒன்றாக உரத்துக் கத்தினர். அது அவர்களுக்கே கேட்கவில்லை.

உருவமோ கிட்டவந்தது. "என்ன... என்னடா, உளறுறீயள்? எங்கேடா பேய்?" என்றதும் அவர்களிருவரும் "நாங்களிப்ப கண்டோமே. நீ...நீ... கிழவியின் ஆவிதானே. அதானே தொடர்ந்து வந்துட்டே? எங்களை... எங்களை ஒண்ணும் பண்ணிடாதை!" பயந்த வண்ணம் பின்னால் நகர்ந்தனர் இருவரும்.

"அட. இவ்வளவுதானா உங்கட வீராப்பு. ஆண்பிள்ளைகளாம். சே. அப்போதே போனவன். மழைதூறுது. பயந்தவன் வேறு. வரமுடியாமல் நிக்கிறானோன்னு பார்த்து வந்த என்னைப் பார்த்து பயந்து ஓடுறீங்கள்." என்றாள் சிரிப்புடன் ராமுவின் பாட்டி.

"பாட்டி நீயா அப்ப எங்களைத் தொட்டது?" பயம் விலகியவர்களாக கேட்டனர்.

"குடையை நீயெடுத்துப் போயிட்டியா? மழை தூறிக்கொண்டிருந்தது. முந்தானையைப் போட்டு போர்த்திக்கொண்டு வந்தது தப்பாப் போச்சுது." என்றபோதுதான் அவர்களிருவரும் கூர்ந்து பார்த்தனர். பாட்டி என்பது புரிந்ததும் சிரிப்பு வந்தது.

"ம். இப்ப சிரியுங்கோ, கொஞ்சம் விட்டிருந்தா பேயடிச்சு இரண்டுபேர் செத்துப் போனாங்கன்னு நாளைக்கு செய்தி வந்திருக்கும். எப்பிடி இந்தமாதிரி பேயடிக்கிறதுன்னு புரிஞ்சு கொள்ளுங்கோ!" என்றவள் இருவரது குடையையும் கொடுத்து அழைத்துப் போனாள். அன்றைக்கே அவர்களிருவரது மனதிலிருந்த ஆவி, பேய் பயமெல்லாம் காணாமல் போய்விட்டன.

# கலைந்த கோலம்

**ஹி**ஜ்றா வீதி, ரொப்ரெக்ஸ், சொர்ணம் நகைமாளிகை, பழக்கடை, மக்கள் வங்கி என்று கல்முனை நகரத்தைக் கடந்து கொண்டிருந்தது ஒரு தனியார் சொகுசு வாகனம் கொழும்பை நோக்கி. அதனுள்ளே ஓர் இருக்கையில் சிறைப்பட்டுக்கிடந்தாள் அவள். அவளுடைய எண்ணங்கள் மட்டும் அந்தக் கிறவல் தரையை, களிமண் சுவரை, ஓலைக்கூரையை, இன்னும் பாளை ஈனாத தென்னங்கன்றை, அந்த நாய்க்குட்டியை சுற்றிச் சுற்றி வட்டமிட்டபடி...

அவள் வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு



**கனி**

மணமகளாகப் போகிறாள். நிஜங்கள் தெரியாமல் நிழல்களைப் பார்த்து, தொலைபேசியில் குரல்கள் பரிமாறி நிச்சயிக்கப்பட்ட திருமணம். வரவேற்கும் புதுவாழ்க்கைக்கும் வழியனுப்பும் பழைய வாழ்க்கைக்குமிடையே எண்ண அலைகளில் அவளிதயம் அல்லாடிக் கொண்டிருக்க கொழும்பை வந்தடைந்தாள்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தின் பளபளக்கும் தரை, ஆங்கிலக் கணனிகள், துடைத்து வைத்தாற்போல் ஊழியர்கள், பலமொழி பேசும் பயணிகள்...எல்லாமே வியப்பாய், புதுமையாய்த் தோன்றின அவளுக்கு. அந்த வியப்பிலிருந்து அவள் மீள முன்னரே விமானம் புறப்படும் நேரம் அறிவிக்கப்பட்டுவிட்டது. அம்மா அவளைக் கட்டியணைத்து கண்ணீரோடு முத்தமிட, ஒரு மௌனத்தில் அவள் விடைபெற்றாள்.

'அம்மா! என் பிஞ்சுவயதுப் பிரபஞ்சமே! ஏன் என்னை வெளிநாடு செல்ல அனுமதித்தீர்கள்? உங்களை, இந்த மண்ணை, என்னோடு பின்னிய ஏழைச்சுகங்களை இழந்து செல்ல நான் ஏன் சம்மதித்தேன்?' அவள் உள்ளம் அழுதது. விமானம் மேகங்களைக் கடந்து சிங்கப்பூரிலே தரைதொட்டது.

அவளை அழைத்துச் செல்ல அவன் வந்திருந்தான். புத்தம் புதிய தேசம். காலையா மாலையா, என்று இனங்காணத் தெரியாத ஒரு கலக்கப் பொழுது. அவனைத் தவிர அங்கே அவள் பார்த்த முகமெல்லாம் வேற்றுமுகம்.

பிரமாண்டமான ஒரு விடுதிக்குள் அவளை அழைத்துச் சென்றான். மலர்வனம், நீச்சல் தடாகம், விளையாட்டு மைதானமென்று ஒரே அமர்க்களமான விடுதியது. வெறும் சுவர்ச் சித்திரங்களாகக் கண்டு இரசித்த காட்சிகளை நேரில் காணும்போது அவள் பூரித்துப் போனாள். அந்த விடுதியில்தான் அவன் அவளைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டான். அவன் சார்பில் பலர் வந்திருந்தார்கள். அவள் சார்பில் அவள் மட்டுமே தனியாக நின்றிருந்தாள்.

அங்கே வந்திருந்தவர்களை அவளுக்கு அறிமுகப் படுத்தினான். அந்த அறிமுக விவரிப்பில் அவளுடைய விலாசம் தவறப்போவதை அவள் அறிந்திருக்கவில்லை.

அவளைவிட அழகான, நாகரிகமான, வெளிநாட்டுக் கலாசாரத்திற்கேற்ற ஒரு பெண் அவனுடைய மனைவியென்று அவனாலேயே அறிமுகப்படுத்தப்பட்டாள்.

அவனுடைய பெற்றோரின் திருப்திக்காகவே இந்தப் பதிவுத் திருமணம். சட்டத்தின் முன்னால் அவள் அவனுக்கு மனைவியானாள். இன்றும் அவனால் எழுதி முடிக்காத அவள் வாழ்க்கைக்கு அவன் கொடுத்த விலை அந்நிய தேசத்தில் அந்நிய மனிதர்களின் நடுவே அந்நியமாய் ஒரு உறவுக் கையெழுத்து. இந்த அந்நியமான உறவை அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இன்னும் கண்டு முடிக்காத கனவோடும் கலங்கி உறையும் கண்ணீர்த்துளிகளோடும் அவள் மீண்டும் இலங்கை வர ஆயத்தமானாள்.

அவள் வாழ்ந்த ஓலைக்கூரையும், களிமண் சுவரும் மீண்டும் தங்களை ஞாபகமூட்டின. அங்கே அவள் வருகையில் மகிழ்ச்சியடைய ஒரே ஒரு உயிர் காத்துக்கிடக்கிறது. அது யார் தெரியுமா? அவள் வளர்த்த அன்பு நாய்க்குட்டி.



"எல்லாவற்றையும்
தந்துவிட்டு போனவனே,
புதிதாக எதனை
எனக்கு தரப்போகிறாய்?

விடிவதற்கு முன்னர்
வந்து விடு!

நீ வராத போது
சூரியன் வந்தும்
எனக்கு விடியாது!

நீ இல்லாத போது
பகல் முழுவதும்
இருட்டாகவே இருக்கும்!

நீ அருகில் இல்லையானால்
சொர்க்கம் கூட
நரகம் தான்!

ஏய்! அசுரனே!
என்னை வதைக்க
எப்போது வருகிறாய்?

உன் வலிய கரங்களுக்குள்
ஆலையில் இட்ட கரும்பாக
நசிந்து போவது சுகம்!

இதயத்தில்
தேவனாய் இரு!
இரவினில்
அசுரனாய் இரு!
உதயம் வரை
உறங்காது இரு!

இதயம் கவர்
கள்வனாய் இரு!

பாற் கடலை
கடைந்தவனே!
தேன் குடத்தை
குடைந்தவனே!
நாற் திசையெங்கும்
தேடுகிறேன் வா!

நட்சத்திரங்கள் கூட
கண் சிமிட்டி
கேலி செய்கின்றன!

நிலாவும்
உலா வந்து நகைக்கிறது!

வா! அசுரனே!
பிரிவின் பின்னர்
உறவின் வேகம்
உன்னதமாயிருக்கும்!

நீயும் நானும்
ஒருடலாய் ஒடுங்கியபோது
எட்டிப் பார்த்து
வெட்கப்பட்டன விண்மீன்கள்!

இன்று, படுக்கையில்
ஒற்றையாய் நான்
உருண்டு கொண்டிருக்கிறேன்!
எட்டிப் பார்த்து
கைகொட்டி நகைக்கின்றன
வெட்கம் கெட்ட விண்மீன்கள்!

வா அசுரனே வா!
தா சுரங்களை தா!
வீணை நான்! விரல் நீ!
குழல் நான்! காற்று நீ!

என் மூச்சு நீ
உன் மூச்சு நான்!

எனக்குள் உன்னை
விதைக்க வந்தாயா?

எனக்காய் உன்னை
இழக்க வந்தாயா?
எனக்குள் உன்னை
புதைக்க வந்தாயா?

வா அசுரனே வா!
தா சுரங்களை தா!"

அவள் குரலுக்கு
அவன் வந்துவிட்டான்!

"புதையல் தேடி வந்தேன்
பூவை நாடி வந்தேன்.

## காணவில்லை

கதையை படிக்க வந்தேன்
கனியை புசிக்க வந்தேன்!

என் இராட்சசியே!
என்னைக் கொல்லடி
என் இளமையை
உன் கரத்தால் வளையடி!

என் இராட்சசியே
காதல் போரில்
என்னை வெல்லடி!
காயம் பட்ட யானையாய்
என்னைச் சாயடி!

வெற்றி உனக்கானால்
இன்பம் எனக்கடி!

தோற்பது சுகமடி
போரில் வெல்லடி!"

அவன் உத்தரவு
அவளுக்கு இன்பமாகவிருந்தது!

"வெற்றியும் வேண்டாம்
தோல்வியும் வேண்டாம்;
நெற்றிகள் மோதிட
முற்றிலும் மூழ்கி
களிப்போம் வருக!"
அவள் அழைத்தாள்.

"தாமரைக் குளத்தில்
குளிக்கவா கசக்கும்?

கரும்புக் கொல்லையில்
விருந்து கசக்குமா?

தேன் கூட்டில்
தேனெடுத்து அருந்த
மறுக்குமோ மனம்?

குளிர்ந்த தென்றலை
தேகம் வெறுக்குமா?

குத்திடும் கூர் எழில்கள்
கண்டதன் பின்னரும்
தத்திடும் மனது
தாவிட மறுக்குமா?"

கேட்டவன் கைகளால்
கோட்டையை வளைத்தான்!

அந்த அழகுக் கோட்டையை
சொந்தம் கொண்டாடி பிடித்தான்!

"சர்க்கரைக் கட்டி நீயடி
மொய்க்கும் எறும்பு நானடி"

அவள்மேல் சாய்ந்தவன்
தணல் போலாகி புலம்பினான்.

தொட்டதும் தேகம் தணலாச்சு
பட்டதும் நெஞ்சம் புயலாச்சு!

"புரியாத புதிராய்
ஆரம்பம்.
புரிபடக் கொஞ்சம்
நாளாகும்!"

அவளுக்குள்
வெட்கம் அலையடிக்க,
அவனுக்குள்
ஆசை சுழன்றடிக்க,
கட்டில் நோக
களித்தனரே!
விடியும் வரையும்
விழி திறந்திருந்தனரே!

"போதும் போதும்
புலர்ந்தது பொழுது.
மோதும் படலம்
போதும் நிறுத்தும்!"

என்று கூறியவள்
கைகளை வீசினாள்;
காணவில்லை அவனை!
அங்கே காணவில்லை!

தருவது ரசிகன்

## இலக்கிய நயம்

அப்போது பார்த்து
வந்தாள் தோழி,

"யாரையடி தேடுகிறாய்?
யார் அருகில் என நினைத்தாய்?"

தோழி கேட்டதும்தான்
கனவு கலைந்தது அவளுக்கு;

"கேளாய் தோழி
என் கதையை!

இரவில் வருவேன்
என்றவனை
விழிகள் தேடி களைத்தனவே!

பொய்யன் அந்த கள்வன்
கனவில் வந்து கலந்தானே!
மயங்கி நானும் மகிழ்ந்தேனே
பக்கத்தில் தேடி பார்த்தேனே!"

கனவில் மயங்கி
காதலனை படுக்கையில் தேடிய
காதலியை
குறும் தொகை குறும்போடு
நம்முன் நிறுத்துகிறது பாருங்கள்;

**கேட்டிசின் வாழி தோழி அல்கல்**
**பொய்வ லாளன் மெய்யுறன் மரீஇய**
**வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட –ஏற்றெழுந்து**
**அமளி தைவந் தனளே"**

குறும் தொகை-30

## சிந்தியா பதில்கள்

**➤ தவறு செய்பவர்களும் கடவுளை துணைக்கு அழைக்கிறார்களே?**

எம். பத்மா, அம்பாறை.

படகு ஒன்று ஆற்றிலே போய்க் கொண்டிருந்தது. படகில் பாதிரியார் ஒருவர் ஜெபம் செய்து கொண்டிருந்தார். அவரைச் சுற்றி இருந்தவர்கள் அதைப் பற்றிக் கவலையே படாது குடி, சிகரெட், சூதாட்டம், ஆபாசப் பேச்சு என்பவற்றில் மூழ்கியிருந்தனர்.

அப்போது திடீரென்று புயல்வீச ஆரம்பித்தது. குடித்துக் கும்மாளம் அடித்த கூட்டம் கடவுளை வேண்டத் தொடங்கியது.

அப்போது பாதிரியார் அவர்களிடம் கூறினார்: "யாரும் கடவுளை அழைக்காதீர்கள். அவருக்கு நீங்கள் இருக்கும் இடம் தெரிந்தால் இவ்வளவு மோசமான நடத்தை உள்ளவர்களை உயிரோடு விட்டு வைக்கக் கூடாது என்று படகை மூழ்கடித்துவிடுவார்!"

❀❀❀

**➤ தோல்வியில் இருந்து மீள்வதற்கு ஒரு வழி கூறும் பார்க்கலாம்?**

கே. சவீர், கந்தளாய்.

நான் கூறவில்லை, ஆங்கிலேய மனோதத்துவ அறிஞர் கூறுகிறார் பாருங்கள்:

"நீ எத்தனை முறை வேண்டுமானாலும் உன் முயற்சிகளில் தோற்கலாம். மலையிலிருந்து சறுக்கி விழலாம். நீருக்குள்ளும் அமிழ்ந்து போகலாம். அனைத்தில் இருந்தும் நீ மீண்டும் எழலாம், விடாது முயற்சி செய்தால்!

ஆனால், உன்னை யாரோ கீழே தள்ளிவிட்டதாகவோ, கவிழ்த்துவிட்டதாகவோ,நீ நினைக்கவோ,பேசவோ ஆரம்பித்தால் அதற்குப் பின் எழவே முடியாது!"

❀❀❀

**➤ தங்களைப் பற்றி மட்டுமே பெரிதாக நினைத்துக் கொள்பவர்கள் திருந்த மாட்டார்களா?**

பா. மாதேஸ், திருமலை.

நாம்தான் திருத்த வேண்டும்.

ஒரு குருநாதரிடம் இரண்டு சீடர்கள் இருந்தனர். அதில் ஒருவன் பொறாமைக்காரன்.

குருவின் பார்வையில் தன்னை உயர்த்திக்கொள்ள விரும்பினான். தன் நண்பனைத் தாழ்த்த எண்ணினான்.

ஒருநாள் விடியற்காலையில் குருவிடம் சென்று, "குருநாதா! நான் அதிகாலையில் எழுந்து ஸ்நானம் எல்லாம் முடித்துக்கொண்டு உங்களை வந்தனம் செய்ய வந்துவிட்டேன். நண்பன் இன்னமும் உறங்கிக் கொண்டிருக்கிறான்" என்றான்.

அதற்கு குரு:

"அப்படியா அவனைப் போல் நீயும் உறங்கிக்கொண்டிருந்தால் நன்றாயிருக்குமே!" என்றார் குருநாதர்.

குருநாதரின் பதிலைக் கேட்டு சீடன் திகைத்தான். குருநாதர் தொடர்ந்து கூறினார்:

"ஆம், நீயும் உறங்கிக்கொண்டிருந்தால் அடுத்தவனைப் பற்றிக் குறை கூற வந்திருக்க மாட்டாய் அல்லவா?"

சீடன் தலை குனிந்தபடி மௌனமானான்.

❀❀❀

**➤ 'டைகர்' என்றொரு படம் வந்துள்ளதே பார்த்தீரா? படம் எப்படி?**

சி. மீரா, கொழும்பு-9.

மலையாளத்தில் வெற்றி பெற்று தமிழில் 'ஹிட்லர்' என்ற பெயரில் வெளியான சோக்கான படம்தான், தெலுங்கில் இருந்து மறுபடி 'டைகர்' என்ற பெயரில் வந்திருக்கிறது! ஆனாலும் ஹிட்லரில் மம்முட்டியின் நடிப்புக்கு, டைகரில் சிரஞ்சீவி நடிப்பு ஈடாகாது.

❀❀❀

**➤ 'அலைபாயுதே' பட நாயகன் மாதவன் பற்றிய செய்திகளை ஏன் மறைக்கிறார்கள்?**

ஆர். திருமாவளவன், கொழும்பு-12.

அதுதான் மணிரத்னம் பாணி! அப்படியிருந்தும் மாதவன் படத்தை அவர் நடித்த கன்னடப் படத்தில் இருந்து உருவி, பத்திரிகைகள் பிரசுரித்து விட்டன! தற்போது இதனை விட அழகாக மெருகேறியுள்ளாராம் மாதவன்!




❀❀❀

**➤ ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் யாரை ஆதரிக்க வேண்டும்?**

செ. விஜயகுமார், மட்டுநகர்.

பெரும் கட்சிகள் இரண்டில் எதனையும் ஆதரிக்கக்கூடாது! எதிர்த்து நிற்க முதுகெலும்பு இல்லாவிட்டாலும் உதைக்கும் காலில் விழாமலாவது இருக்கலாம்!

❀❀❀

**➤ சிந்தியா! அடுத்த சூப்பர் ஸ்டார் யார்?**

கு. மதியாபரணம், கல்லடி.

அஜித்-விஜய் இருவருக்கும் இடையே தான் போட்டி! தற்போது இந்த இருவரிலும் வசூலில் முன்னணியில் நிற்பவர் அஜித் தான்! வாங்கும் ஊதியத்தில் விஜய்! இந்திய மதிப்பில் மூன்று கோடியாமே (யப்பா!)

❀❀❀

**➤ எல்லாம் தெரிந்தவர்கள்போல தமிழ் மக்களுக்கு தவறான வழிகாட்டும் அரசியல் வாதிகளை என்ன செய்யலாம்?**

மி. உசேன், சிலாபம்.

தேர்தலில் தூக்கி எறியலாம்! எல்லாம் தெரிந்ததாக நினைப்பவர்களுக்கு எதுவுமே தெரிவதில்லை. இக் கதையைப் பாருங்கள்:

நகரவாசி ஒருவர் ஒரு ஜோடி குதிரை வாங்கியிருந்தார். அதை வண்டியில் பூட்டி ஓட்டிப் பார்த்தார். குதிரைகள் பிரமாதமாக ஓடின. அவருக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. வண்டியில் ஓடும்போது காடுமேடுகளில் பாதை தவறிவிட்டது.

"பாதை எங்கே போகிறது?" என்று ஒரு சிறுவனிடம் கேட்டார்.

"இது எங்கேயும் போய் நான் பார்க்கவில்லை. தினமும் இங்கேதான் இருக்கிறது." என்றான் சிறுவன்.

"இங்கிருந்து பக்கத்து நகரம் எவ்வளவு தூரம்?" என்று கேட்டார்.

"எனக்கு தெரியாது. நான் அளந்து பார்த்ததில்லை!" என்றான் சிறுவன்.

நகரவாசிக்கு ஒரே எரிச்சல். கோபம்.

"உனக்கு ஒன்றுமே தெரியாதா? உன்னைப் போல் ஒரு முட்டாளை நான் பார்த்ததே இல்லை!" என்றார்.

அதற்கு சிறுவன் கூறினான்:

"எனக்கு எதுவும் தெரியாது என்று எனக்குத் தெரியும். நான் ஒரு முட்டாள் தான்! ஆனாலும் நான் பாதையைத் தவற விட்டதில்லை!"

❀❀❀

**➤ பாகிஸ்தானும், இந்தியாவும் எல்லைக் கோட்டை மதிக்க வேண்டும் என்று ஜனாதிபதி அம்மையார் கூறியுள்ளாரே?**

எஸ். சுவர்ணா, கொழும்பு-15.

இந்தியாதான் எல்லைக் கோட்டை மீறவேயில்லையே! சார்க் தலைவி இப்படி பிடி கொடாது நழுவிவிட்டாரே பார்த்தீர்களா? உள்நாட்டில் மட்டுமல்ல, உலக அளவிலும் நமது ஜனாதிபதி உறுதியான, சரியான முடிவு கூறுவதற்குத் தயங்குபவராகவே இருக்கிறார்!

❀❀❀

**➤ வடக்கு-கிழக்கு மாகாண சபை தேர்தல் கோரிக்கை என்னாச்சு?**

வி. வினோதன், திருமலை.

கத்திக் கத்தி களைத்துப்போய் இப்போது ஜனாதிபதி தேர்தலில் அம்மையாரைச் சுற்றிச் சுற்றி வந்தாவது அருள் பெறலாமோ என்று தமிழ்க் கட்சிகள் சிந்திப்பதாக தகவல்.

❀❀❀

**➤ ஜனாதிபதித் தேர்தலை எதிர்த்து ஜே.வி.பி. பிரசாரம் செய்ய உள்ளதாமே?**

ஆர். வசீகரன், வவுனியா.

ஆம்! அடிக்கடி கொள்கை மாறும் தமிழ்க் கட்சிகளைவிட ஜே.வி.பி. உசத்தி தான்! ஜனாதிபதி முறையை எதிர்த்து முழங்கிய தமிழ்க் கட்சிகள் இப்போது சுருதியை மாற்றிக்கொண்டுவிட்டன தெரியுமா!

❀❀❀

**➤ அப்பாஸ் மீண்டும் முதலிடம் பெறுவாரா?**

எம். முஹமட் பசீர், அப்புத்தளை.



'மலபார் பொலிஸ்' படத்தில் அப்பாஸ்–மும்தாஜ்

படங்களில் மறுபடி இடம் பெறுகிறார். ஆனால் முதலிடம் பெறுவது கடினம்!

❀❀❀

**➤ சிந்தியா! விடுகதை ஒன்று விடுங்களேன்?**

பி. பார்வதி, மஸ்கெலியா.

"எண்ணும்போதே இனிக்கும். தண்ணீருக்குள் மிதக்கும்,. தீண்ட நாவும் இனிக்கும். தேகம் பூராவும் சிலிர்க்கும் அது என்ன?"

"தேன்!"

ஸ்போர்ட்ஸ்

## "எனக்கு முதுகுவலி இல்லை"

இந்த வருடம் ஜனவரி மாதம் இந்தியாவில் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடும்போது முதுகுவலியால் அவதிப்பட்டார் டெண்டுல்கர். அதன் பின் அவர் இந்தியா மற்றும் ஷார்ஜாவில் நடந்த முத்தரப்பு போட்டிகளில் விளையாடவில்லை.

பூரண சிகிச்சைக்குப் பின் உலகக்கோப்பையில் கலந்து கொண்டார். 'டெண்டுல்கர் மறுபடி முதுகுவலியால் அவதிப்படுகிறார்' என்று அண்மையில் சில செய்திகள் வெளிவந்தன.

"எனக்கு முதுகுவலி இல்லை. நான் நலமாகவே இருக்கிறேன். எனக்கு மறுபடி முதுகுவலி என்று வெளிவந்த செய்திகள் அனைத்தும் வதந்தியே!" என்று கூறியுள்ளார் டெண்டுல்கர். அவர் மேலும் கூறும்போது:

"இலண்டனில் பெற்ற சிகிச்சைக்குப்பின் எனக்கு முதுகுவலிப் பிரச்சனை ஏற்படவே இல்லை. எனக்கு மீண்டும் முதுகுவலி ஏற்பட்டதால் புனேயில் இருக்கும் யோகாச்சார்யா ஐயங்காரிடம் ஆலோசனை பெற்றேன்," என்று செய்திகள் வெளிவந்தன.

நான் புனேவுக்குச் சென்றது எனது சகோதரியைப் பார்ப்பதற்காக. என்னுடைய ஆர்வத்தின் காரணமாகத்தான் யோகாச்சார்யா நிறுவனத்திற்குச் சென்றேனே தவிர, முதுகுவலிப் பிரச்சனைக்காக அல்ல," என்று குறிப்பிட்டார்.

## புதிய பயிற்சியாளர்

உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டிகள் முடிவடைந்த பின்னர் பல அணிகளின் தலைவர்களும், பயிற்சியாளர்களும் மாற்றப்பட்டு வருகின்றனர்.



இந்த வரிசையில் கென்யா அணியின் பயிற்சியாளராக இருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் வீரர் அல்வின் காளிச்சரண் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக இந்திய முன்னாள். வீரரும், பயிற்சியாளருமான சந்தீப் பாட்டில் நியமிக்கப்பட்டுள்ளார்.

2003ம் ஆண்டு நடைபெறவிருக்கும் அடுத்த உலகக் கோப்பைப் போட்டிக்காக கென்யா அணியைத் தயார் செய்வதற்காக சந்தீப் பாட்டில் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. 4 ஆண்டுகளுக்கு பாட்டில் பயிற்சியாளராக இருப்பார்.

இந்திய அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக விளங்கிய சந்தீப்பாட்டில் இந்திய அணிக்குப் பயிற்சியாளராகவும் இருந்தார். பின் நீக்கப்பட்டார்.

## மாற்றுப் போட்டி

எல்லைப் போர் காரணமாக கனடாவின் டொரண்டோவில் இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நடைபெறவிருந்த சஹாரா கோப்பைக்கான ஒருநாள் போட்டிகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இப்போது அதற்குப் பதிலாக உலகின் நட்சத்திர வீரர்கள் பங்கு பற்றும் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது. இதற்காக உலக லெவன், ஆசிய லெவன் என்ற இரண்டு அணிகள் மோதவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் கூறியுள்ளனர்.

உலக லெவனில் ஸ்டீவ்வோ, மார்க்வோ (அவுஸ்திரேலியா), ஹென்ஸி குரோன்ஞ், ஜோண்டி ரோட்ஸ் (தென்னாபிரிக்கா), பிரையன் லாரா, கொட்னி வோல்ஷ் (மே.இ. தீவுகள்) போன்ற பிரபல வீரர்கள் அடங்கியிருப்பதாகவும், ஆசிய லெவனில் டெண்டுல்கர், அக்ரம், ரணதுங்க, அரவிந்த ஆகிய வீரர்கள் அடங்கியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் டெண்டுல்கர் விளையாடுவது பற்றி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் அனுமதி பெறப்படவில்லை. அனுமதி பெறாமல் டெண்டுல்கர் விளையாட முடியாது. அத்துடன் ஒரே அணியில் அக்ரமுடன் டெண்டுல்கர் விளையாடுவதற்கும் ஒப்புதல் அளிக்கப்படமாட்டாது.

### இவர் தான் அவர்



சிவகுமார்

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 09

ஆண்டவருடைய திருக் குமாரரான இயேசுபிரான் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தெரிவித்த கருத்துக்கள் பற்றி கடந்த வாரம் பார்த்தோம். அன்னார் அன்று நிகழ்த்திய மலைப்பிரசங்கம் அன்றும், இன்றும், என்றென்றும் இவ்வுலக மாந்தருக்கு வழிகாட்டி- ஒளியூட்டுவதை எவரும் மறுத்துரைக்க முடியாது. இயேசு பெருமானுடைய ஒவ்வொரு வார்த்தையும் எமக்காகவே அருளப்பட்ட தெய்வீகத் திருவாக்குகள். இவற்றைக் கடைப்பிடித்து வாழ்வோர் மனிதரில் புனிதர் என்ற நிலையினை எய்துவர் என்பதை கண்ணாரக் கண்டு வருகிறோம்.

இயேசுகிறிஸ்து நாதர் கூறிய கருத்துக்கள் ஒரு மதம், ஒரினம், ஓர் ஊர் என்ற பாகுபாடுகளைக் கடந்தவை. மனித சமுதாயம் அனைத்துக்குமே பொதுவானவை.

மலைப்பிரசங்கத்தில் இயேசு பெருமான் மேலும் கூறிய அர்ப்புதமான கருத்துக்களை இம்முறையும் தொடர்ந்து தருகிறோம்.

### அறச் செயல்கள்

"மக்கள் பார்க்க வேண்டுமென்று அவர்கள் முன் உங்கள் அறச் செயல்களைச் செய்யாதீர்கள். இதைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். இல்லையென்றால் உங்கள் விண்ணகத் தந்தையிடமிருந்து உங்களுக்குக் கைம்மாறு கிடைக்காது.

### தர்மம் செய்தல்

"நீங்கள் தர்மம் செய்யும்போது உங்களைப் பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள். வெளிவேடக்காரர் மக்கள் புகழ வேண்டுமென்று தொழுகைக் கூடங்களிலும் சந்து

## மலைப் பிரசங்கம் 2



களிலும் நின்று அவ்வாறு செய்வர். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் தர்மம் செய்யும்போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும். அப்பொழுது நீங்கள் செய்யும் தர்மம் மறைவாயிருக்கும்; மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்.

### இறைவேண்டல்

"நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது வெளிவேடக்காரரைப்போல் இருக்க வேண்டாம். அவர்கள் தொழுகைக் கூடங்களிலும் வீதியோரங்களிலும் நின்றுகொண்டு மக்கள் பார்க்க வேண்டுமென இறைவேண்டல் செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்று விட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். ஆனால் நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக்கொண்டு, மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார். மேலும் நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது பிற இனத்தவரைப் போலப் பிதற்ற வேண்டாம். மிகுதியான சொற்களை அடுக்கிக்கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் அவர்களைப் போல் இருக்க வேண்டாம். ஏனெனில் நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார். ஆகவே, நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்:

*"விண்ணுலகிலிருக்கிற எங்கள்*
*தந்தையே, உமது பெயர்*
*தூயதெனப் போற்றப்பெறுக!*
*உமது ஆட்சி வருக!*
*உமது திருவுளம் விண்ணுலகில்*
*நிறைவேறுவது போல*
*மண்ணுலகிலும் நிறைவேறுக!*
*இன்று தேவையான உணவை*
*எங்களுக்குத் தாரும்.*
*எங்களுக்கு எதிராகக் குற்றம்*
*செய்தோரை நாங்கள்*
*மன்னித்துள்ளது போல*
*எங்கள் குற்றங்களை மன்னியுங்கள்.*
*எங்களைச் சோதனைக்கு*
*உட்படுத்தாதேயும்.*
*தீயோனிடமிருந்து எங்களை*
*விடுவியுங்கள்.*

"ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமக்கே. ஆமென்."

மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்.

### நோன்பு இருத்தல்

மேலும் நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்கவேண்டுமென்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள், என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் நோன்பு இருக்கும்போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து, முகத்தைக் கழுவுங்கள். அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது. மாறாக, மறைவாய் இருக்கிற உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார்.

### உண்மைச் செல்வம்

"மண்ணுலகில் உங்களுக்கெனச் செல்வத்தைச் சேமித்து வைக்கவேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அழித்துவிடும்; திருடரும் அதைக் கன்னமிட்டுத் திருடுவர். ஆனால், விண்ணுலகில் உங்கள் செல்வத்தைச் சேமித்து வையுங்கள்; அங்கே பூச்சியோ துருவோ அழிப்பதில்லை; திருடரும் கன்னமிட்டுத் திருடுவதில்லை.

உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்.

### உடலுக்கு விளக்கு

"கண்தான் உடலுக்கு விளக்கு. கண் நலமாயிருந்தால் உங்கள் உடல் முழுவதும் ஒளி பெற்றிருக்கும். அது கெட்டுப்போனால், உங்கள் உடல் முழுவதும் இருளாய் இருக்கும். ஆக, உங்களுக்கு ஒளி தரவேண்டியது இருளாயிருந்தால் இருள் எப்படியிருக்கும்!

### கடவுளா? செல்வமா?

"எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது. ஏனெனில், ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவர் அன்பு கொள்வார்; அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார். நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது.

### கவலை வேண்டாம்

"ஆகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன்; உயிர் வாழ எதை உண்பது, எதைக் குடிப்பது என்றோ, உடலுக்கு எதை உடுத்துவது என்றோ நீங்கள் கவலை கொள்ளாதீர்கள். உணவை விட உயிரும், உடையைவிட உடலும் உயர்ந்தவை அல்லவா? வானத்துப் பறவைகளை நோக்குங்கள்; அவை விதைப்பதுமில்லை; அறுப்பதுமில்லை; களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை; உங்கள் விண்ணகத் தந்தை அவற்றுக்கும் உணவு அளிக்கிறார். அவற்றை விட நீங்கள் மேலானவர்கள் அல்லவா? கவலைப்படுவதால் உங்களில் எவர் தமது உயரத்தோடு ஒரு முழம் கூட்ட முடியும்? உடைக்காக நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? காட்டுமலர்ச் செடிகள் எப்படி வளருகின்றன எனக் கவனியுங்கள்; அவை உழைப்பதுமில்லை, நூற்பதுமில்லை. ஆனால் சாலமோன் கூடத் தம் மேன்மையில் எல்லாம் அவற்றில் ஒன்றைப் போலவும் அணிந்திருந்ததில்லை என நான் உங்களுக்குச் சொல்கிறேன். நம்பிக்கை குன்றியவர்களே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பில் எறியப்படும் காட்டுப் புல்லுக்குக் கடவுள் இவ்வாறு அணிசெய்கிறார் என்றால் உங்களுக்கு இன்னும் அதிகமாய்ச் செய்ய மாட்டாரா? ஆகவே, எதை உண்போம்? எதைக் குடிப்போம்? எதை அணிவோம்? எனக் கவலை கொள்ளாதீர்கள். ஏனெனில் பிற இனத்தவரே இவற்றையெல்லாம் நாடுவர்; உங்களுக்கு இவை யாவும் தேவை என் உங்கள் விண்ணகத் தந்தைக்குத் தெரியும். ஆகவே அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும். ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதீர்கள். ஏனெனில் நாளையக் கவலையைப் போக்க நாளை வழி பிறக்கும். அந்தந்த நாளுக்கு அன்றன்றுள்ள தொல்லையே போதும்!

**இராஜகுமாரன்**

### தீர்ப்பு அளித்தல்

"பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு அளிக்காதீர்கள்; அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள். நீங்கள் அளிக்கும் தீர்ப்பையே நீங்களும் பெறுவீர்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ, அதே அளவையாலே உங்களுக்கும் அளக்கப்படும். உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பை நீங்கள் கூர்ந்து கவனிப்பதேன்? அல்லது அவரிடம், "உங்கள் கண்ணிலிருந்து துரும்பை எடுக்கட்டுமா?" என்று எப்படிக் கேட்கலாம்? இதோ! உங்கள் கண்ணில்தான் மரக்கட்டை இருக்கிறதே! வெளிவேடக்காரரே! முதலில் உங்கள் கண்ணிலிருந்து மரக்கட்டையை எடுத்தெறியுங்கள். அதன்பின் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணிலிருந்து துரும்பை எடுக்க உங்களுக்குத் தெளிவாய்க் கண் தெரியும். தூய்மையானது எதையும் நாய்களுக்குக் கொடுக்க வேண்டாம். அவை திருப்பி உங்களைக் கடித்துக் குதறும். மேலும் உங்கள் முத்துகளைப் பன்றிகள் முன் எறிய வேண்டாம்; எறிந்தால் அவை தங்கள் கால்களால் அவற்றை மிதித்து விடும்.

### வேண்டுதலின் விளைவு

**"கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும்.** ஏனெனில், கேட்போர் எல்லாரும் பெற்றுக் கொள்கின்றனர்; தேடுவோர் கண்டடைகின்றனர்; தட்டுவோருக்குத் திறக்கப்படும். உங்களுள் எவராவது ஒருவர் அப்பத்தைக் கேட்கும் தம் பிள்ளைக்குக் கல்லைக் கொடுப்பாரா? அல்லது, பிள்ளை மீன் கேட்டால் பாம்பைக் கொடுப்பாரா? தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாக நன்மைகள் அளிப்பார் அல்லவா?

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு.ஆ] 06விடை: ☛ ஐயாயிரம் பேர்**

**பரிசு பெறுவோர்:**

1. **செல்வி ஷர்மிளா கிரிதரன்,** நம்-20 சேர்ச் றோட், பலாங்கொடை.
2. **கே.பி. சாந்தி,** பிரதான வீதி, தம்பட்டை 02, தம்பிலுவில்.
3. **எம். ஆர். றஸீனா,** கணேவல் பொல, கெகிராவ.
4. **செ. கிருஷன்,** இல. 123, மகாறம்பைக்குளம், வவுனியா.
5. **அ. ஜெனிடேல்ரின்,** வேல்க்கம் ஒழுங்கை, வேளாங்கன்னி வீதி, பாலையூற்று, திருகோணமலை.

**திருமறை [பு.ஆ] 09** வினா :- **செல்வத்தை எங்கே சேர்த்து வைக்க வேண்டும் என்று இயேசு கூறுகிறார்?**

ஜூலை. 24 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை பு.ஆ.09 – தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

## மறந்துவிடாதீர்கள்! மறந்துவிடாதீர்கள்!

**வெற்றிகரமான 29வது மாதம்**

யாழ் குடாநாட்டில்
காணாமல் போனோர் கதியறிய
விசாரணை ஆணைக்குழு!

**மூன்று மாதத்தில் முடிவு தெரியும்!**

**குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்கும்!**

இப்படியான அனல் தெறிக்கும் வசனங்களுடன்
29மாதமாக வெற்றி நடை போடுகிறது.

**'அம்மையாரின் வாக்குறுதி'**

பின்குறிப்பு: தமிழ்க் கட்சிகள் மிகச் சிறப்பாக நடித்துள்ளன. ஒவ்வொரு அனல் தெறிக்கும் வாக்குறுதிக்கும் த. கட்சிகள் வளைந்தும் நெளிந்தும் உணர்ச்சிகளைக் காண்பிக்கும் இடங்களில் மக்களின் ஒப்பாரி கலந்த பின்னணி இசை நல்ல பொருத்தம்!




## மன்றாட்ட மடல்

**மாண்புமிகு...**
**வாழ்க பல்லாண்டு!**

டசின் டசினாக பிரதி அமைச்சர்களை நியமித்திருக்கிறீர்களே. எங்களை மட்டும் டுசும் டுசும் என்று முகத்தில் குத்தாத குறையாக புறம் தள்ளி விட்டீர்களே! நியாயமா? தர்மமா?

ஜனநாயகப் பாதையில் பொத்துப் பொத்தென்று குதித்து, ஜனநாயக நீரோட்டத்தில் மூச்சுத் திணறக் குளித்து, தேர்தல்களில் தங்களின் சொற்படி குதித்துவரும் எங்களை மிதித்துவிட்டீர்களே!




நாங்கள் என்ன நாடு கேட்டோமா? ஒரு கோடு போட்டு இதுதான் எல்லை என்று கறாராகப் பேசினோமா?

வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு பத்துமாதமாகக் கேட்டோம். கேட்டோம். கேட்டுக் கொண்டேயிருந்தோம்.

நீங்கள் நடத்துவது மாதிரித் தெரியவில்லை. ஆதலால் உள்ளூராட்சித் தேர்தலை கிழக்கில் நடத்துமாறு கூவத் தொடங்கினோம். அந்தக் கூவல் கூட உங்கள் செவியில் விழவில்லை.

காலியான எம்.பி. பதவியாவது கிடைக்கும் என்று காத்திருந்தோம். அதற்கும் வேறு யாரையோ நியமித்து நாற்காலிகளை நிரப்பினீர்கள்.

போகட்டும் என்று பொறுத்தோம். பிரதியமைச்சர் பதவியாவது தந்து, எமக்குத் தலைப்பாகை கட்டி, தமிழர் தலைவர்களாக உலகுக்கு சிங்காரித்துக் காட்டுவீர்கள் என்றாவது கனவு கண்டோம்.

அந்தோ! எங்கள் கனவுக்கு கல்லறை கட்டிவிட்டீர்கள்! எங்கள் எதிர்பார்ப்பில் மண்ணை வாரிப் போட்டு விட்டீர்கள்.

நாம் என்னவெல்லாமோ செய்தோம். உங்கள் சார்பாக எங்கள் மக்களுக்கு உத்தரவாதங்கள் கொடுத்தோம்!

எங்களை இப்படி அநாதரவாக விட்டுள்ளீர்களே!

அய்யோ... அய்யோ... 42 பிரதி அமைச்சர்களாமே! அதில் ஒரு இடம் கூடவா நமக்கில்லை! உள்ளம் பதறுகிறது! வெளியே சொல்ல வெட்கம் தடுக்கிறது!

தமிழ்க் கட்சிகளை பற்றி தாங்கள் தரம் தாழ்த்தியே நினைப்பதற்கு நாம் எப்படி பொறுப்பாவோம்?

தரமிருந்தால், உரமிருந்தால் வேறு புறம் நின்று போராடியன்றோ இருப்போம்!

சரி போகட்டும்! எம் தரத்திற்கு ஏற்ப அதிகாரங்களை குறைத்துக் கொண்டு பிரதி அமைச்சர் பதவி ஓரிரண்டாவது தந்து அருளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நம்மில் யாருக்குத் தருவது என்ற குழப்பம் தங்களுக்கு வரவேண்டாம். திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்த்துக்கொள்ளச் சித்தமாக உள்ளோம்.

மக்களைச் சாந்தப்படுத்த அறிக்கையும், பக்ஸ்சும், முறையீடும் கலந்து உமக்கு நாம் தருவோம், மேதகையீரே, பிரதியமைச்சர் பதவி சில தாரும்!

தங்கள் கீழ்ப்படிவுள்ள
..................

**காதிலை பூ கந்தசாமி**



அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப்பேசுகின்றன

கிளை: 105, காலி வீதி வெள்ளவத்தை கொழும்பு-06 580230

3 SEA STREET, COLOMBO 11 செட்டியார் தெரு, கொழும்பு


# உருமறைப்பு






ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11 செட்டியார் தெரு, கொழும்பு

323657


கொடிகளைப் போல பச்சை தாவரங்களுக்குள் தன்னை உருமறைப்பு செய்து கொண்டு விட்டதோ இந்த இராட்சத முதலை? [illegible]

அமெரிக்காவிலுள்ள யேல் பல்கலைக்கழகத்தின் மிகப்பெரிய நூல் நிலையத்தின் ஒரு பகுதியில் அமைந்துள்ள சுவடிகள் காப்பகம் இதுவாகும். [illegible]

இந்த வயதில் தோற்றம் தரும் 66 வயதான எலிசபெத் டெய்லர் இளமையில் பல கோடி ரசிகர்களின் தூக்கத்தை துவம்சம் செய்தவர்.

பத்தாவது வயதில் (1942) நடிக்கத் தொடங்கிய எலிசபெத் டெய்லர் படைத்துள்ள உலக சாதனைகள் பல.




அமெரிக்காவின் பிரபல கவர்ச்சி சஞ்சிகையான லைஃப் சஞ்சிகையில் 11 தடவை அட்டைப்படமாக இவரது படங்கள் வெளியாகின. இதுவும் சாதனை. இவர் நடித்து 1963 இல் வெளியான 'கிளியோபாட்ரா' படத்துக்கு இவர் அன்று பெற்ற ஊதியம் 10 இலட்சம் டொலர். அதுவரை உலகில் எந்த நடிகரும், நடிகையும் பெறாத ஊதியம் இது. தொடராக விவாகரத்தும் திருமணமும் செய்தும் சாதனை படைத்து வருகிறார். 66 வயதிலும் இளமையோடு இருக்கிறார்.




மல்யுத்தப் போட்டிகள் இன்று உலகளாவிய [illegible]







உலகக் கிண்ணத்தை கிரிக்கெட்டில் தவறவிட்ட இந்தியாவுக்கு இனிப்பான செய்தி. விம்பிள்டன் இரட்டையர் சாம்பியன் பட்டத்தை இந்திய டெனிஸ் வீரர்கள் வென்று கைப்பற்றிவிட்டனர்.

லியாண்டர் பயஸ், மகேஷ்பூபதி இருவரும் இணைந்தே இந்த சாம்பியன் பட்டத்தை பெற்றனர். இது டெனிஸ் உலகக் கோப்பை போன்றது.

கிரிக்கெட்டைவிட உலகில் மிகவும் பிரபலமானதும், பெரும் பணம் புரளுவதும் டெனிஸ் விளையாட்டில்தான். மேலைத் தேச வீரர்கள்தான் டெனிஸில் அதிகமாக வெளுத்து வாங்குவார்கள். அவர்களுக்கு போட்டியாக உருவெடுத்துள்ளனர் இந்த கில்லாடி வீரர்கள்.

இதற்கு முன்பாக பிரான்ஸ் திறந்த சாம்பியன்ஷிப் (பிரெஞ்ச் ஓபன்) போட்டியிலும் இருவரும் இணைந்து ஆடி கிராண்ட் ஸ்லாம் பட்டம் பெற்றுள்ளனர். இப்போட்டி கடந்த மாதம் 6ம் திகதி நடைபெற்றது. இந்திய டெனிஸ் வீரர்களில் இரண்டு முறை கிராண்ட் ஸ்லாம் பட்டம் பெற்ற ஜோடி இவர்கள் மட்டுமே. இது இந்திய சாதனை.

அதுமட்டுமல்ல கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் பிரெஞ்ச் ஓபனில் ரஷ்யாவின் வீராங்கனையுடன் இணைந்து ஆடி கிண்ணம் வென்றார் மகேஷ் பூபதி.

லியாண்டர் பயஸ் என்ன சளைத்தவரா? விம்பிள்டனில் அமெரிக்க வீராங்கனையான லிசா ரேமண்டுடன் இணைந்தாடி கிண்ணம் பெற்றார்.

மொத்தத்தில் இந்தியாவுக்கு இந்த ஆண்டு டெனிஸில் பொற்காலம். அதற்கு காரணம் இந்த இருவர்.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் ஈசா டாமியேன் (ISA DAMIEN) 21.07.99**

யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும் ஜெர்மனியை (GERMANY) வசிப்பிடமாகவும் கொண்ட யோன்சன் - நூர்ஜான் (NURCAN-TURKEY) தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஈசா டாமியேன் தனது முதலாவது பிறந்த தினத்தை (ஜெர்மனி) ஹம்பர்கில் (HAMBURG) உள்ள தனது இல்லத்தில் 21.07.99 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மாவும் யாழ்ப்பாணம் குருநகரிலுள்ள அப்பப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மாமார், மாமா, மாமிமாரும் (ஜெர்மனி) ஹம்பர்கிலுள்ள (HAMBURG) அப்பப்பா, அம்மம்மா (TURKEY), அன்ரிமார், மாமா, மாமி மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவரைப் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: N. KESKINBICAK, C/O M. JOHNSON, SCHLETTSTADTER-STR-2, 22049-HAMBURG, GERMANY.




இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, [illegible] 29, [illegible] ஜூலை 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.